

பொருத்து வீடைக் குடுக்கிற
தில அவரு குறிக்கோளாத்
தான் இருக்கிறார் போல...

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 300 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 05, புதன்கிழமை 21.09.2016

## 17000 போதை அடிமைகள்

கொழும்பு, செப். 21
இலங்கையில் 17 ஆயிரத்து 457 பேர் ஹெரோயின் உள்ளிட்ட உயிர்க்கொல்லிப் போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இவர்களுள் 13 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.
நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றின்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.
>> 25ஆம் பக்கம்

# ஹுசேன் - மங்கள நியூயோர்க்கில் பேச்சு

### பான் கீ - மூன் பயணத்தின் பின்னரான முன்னேற்றம் குறித்து ஆராய்வு

நியூயோர்க், செப்ரெம்பர் 21
ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனின் வருகைக்குப் பின்னரான இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளின் முன்னேற்றம் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசேன், அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துக் கேட்டறிந்தார்.
ஐ. நா. பொதுச் சபையின் 71ஆவது கூட்டம் நியூயோர்க் நகரில் இடம்பெற்று வருகின்றது. இதில் கலந்துகொண்டுள்ள அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவை நேற்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் சந்தித்து
>> 25ஆம் பக்கம்



## முதல் 6 மாதத்தில் வடக்கு அரசின் வருமானம் 1006 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், செப். 21
2016ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் முத்திரை வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, வாகனப்பதிவு வருமானம் ஆகிய
>> 25ஆம் பக்கம்

## ஐ.தே.கவுடன் ஆட்சி அமைக்க முயற்சித்ததாம் மகிந்த அணி

கொழும்பு, செப். 21
ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் வகையில் மகிந்த தரப்பின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் காய் நகர்த்
>> 25ஆம் பக்கம்

## பொருத்து வீடுகள் எப்போதுமே வடக்குக்கு வேண்டாம்

### ரணிலிடம் வலியுறுத்தினர் கூட்டமைப்பு எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், செப். 21
வடக்குமாகாணத்துக்குப்பொருத்து வீடுகளை அடுத்தஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்குவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்க வேண்டாம்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம்
>> 25ஆம் பக்கம்

## 24ஆம் திகதி ஊர்வலத்துக்கு ஈ.பி.டி.பி, சங்கரி ஆதரவு

யாழ்ப்பாணம், செப். 21
தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் ஊர்வலத்துக்கு, ஈ.பி.டி.பியினர் மற்றும் ஆனந்தசங்கரி ஆகியோர் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.
தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் 24ஆம் திகதி சனிக்கிழமை ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.
>> 25ஆம் பக்கம்

## பல்கலை. அனுமதி வெட்டுப்புள்ளி வெளியானது

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பிரகாரம், பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி நேற்று வெளியானது.
அதன்படி www.ugc.ac.lk அல்லது www.selection.ugc.ac.lk என்ற இணையத் தளத்தினூடாக மாணவர்கள் தமது வெட்டுப்புள்ளிகளைப் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
மேலும், ugc என டைப் செய்து இடைவெளி விட்டு ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சையின் சுட்டிலக்கத்தைப் பதிவுசெய்து 1919 என்ற இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்புவதன் மூலமும் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## போருக்குப் பின்னர் வடக்கில் 18000 மாற்றுத்திறனாளிகள்

கொழும்பு, செப். 21
போர் மற்றும் ஏனைய இடர்கள் காரணமாக, கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் 18 ஆயிரத்து 85 பேர் மாற்றுத்திறனாளிகளாகியுள்ளனர் என்று சமூக வலுவூட்டல், நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்
>> 25ஆம் பக்கம்

## மாற்றுத்திறனாளிகளுக்கு அடுத்த ஆண்டு உதவிகள்

### அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 21
2017 ஆம் ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவு அனைவருக்கும் வழங்கப்படும். 39 ஆயிரத்து 758 பேர் கொடுப்பனவு பெறும் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
இவ்வாறு சமூக வலுவூட்டல், நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில்
>> 25ஆம் பக்கம்

## வித்தியா கொலைக் குற்றவாளிகளை சி.ஐ.டி. விசாரணை அடையாளம் காட்டியது

### மேல் நீதிமன்றில் உரியவாறு வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்கிறது நீதிவான் மன்று

யாழ்ப்பாணம், செப். 21
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கை குற்றம் புரிந்தவர்களை அடையாளம் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களம் உரிய முறையில் வழக்கை யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் தாக்கல்
>> 25ஆம் பக்கம்

## இலங்கை அரசுக்கு பான் கீ - மூன் பாராட்டு



நியூயோர்க், செப். 21
போரின் பின்னரான நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் சகல இனங்களையும் அரவணைத்துக் கொண்டு
>> 25ஆம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடதாசித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நீர்வேலி வாழைக் குலைச் சங்கம் திட்டம்

## மாவை. எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 21
நீர்வேலி வாழைக் குலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்க கட்டடத்தில் விரைவில் கடதாசித் தொழிற்சாலையை நிறுவுவதற்கு சங்கத்தினர் முயற்சி செய்வதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

கோப்பாய் கோமகன் வன்னிய சிங்கத்தின் 57ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள், அவரது திருவுருவச் சிலை அமைந்துள்ள நீர்வேலி வாழைக்குலைச் சங்கக் கட்டடத்தில் வட மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி தலைமையில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.




கோப்பாய் கோமகனின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கம் இன்று சுமார் ஒரு கோடி ரூபா வரையான சொத்துடன் உள்ளது. இதனால் அதனைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை அமைப்பது தொடர்பில் முயற்சிக்கின்றனர்.

இந்த நாட்டில் ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்த புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக முயற்சிக்கின்றோம். அது வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதே பலரின் விருப்பம். இதற்காகவே நாம் முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டுவருகின்றோம்- என்றார் மாவை. சேனாதிராசா .

இந்த நிகழ்வில் முதலில் அவரது உருவச் சிலைக்கு தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார். இதன்போது வன்னியசிங்கம் அறக்கட்டளை நிதியத்தின் ஊடாக நான்கு பேருக்கு வாழ்வாதார உதவிகளும். மேலும் 20 மாணவர்களுக்கு கற்றல் உதவிகளும் வழங்கப்பட்டன. (வ-4,101)

## பொது இடத்தில் குழப்பம் விளைவித்த மூவருக்கு மறியல்

தென்மராட்சி, செப். 21
சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்ற தாபரிப்பு வழக்குக்கு வந்தவேளை, நீதிமன்றுக்கு முன்பாக உள்ள வர்த்தக நிலையத்தில் மோதலில் ஈடுபட்ட மாமனும் மருமகனும் மற்றும் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த நபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று உத்தரவிட்டது.

தாபரிப்பு வழக்குத் தொடர்பாக நீதிமன்றுக்கு வருகை தந்திருந்த மாமனும் மருமகனுமேமோதிக் கொண்டனர். இவர்களைக் கைது செய்த சாவகச்சேரி பொலிஸார் நீதிவான் மன்றில் முற்படுத்திய போது, வழக்கினை விசாரித்த நீதிவான், அவர்களை ஒக்ரோபர் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை காலை தொடக்கம் மாலை வரை சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் தண்ணீர்ப் போத்தல் கச்சான் உட்பட பொருள்களை பயணிகளுக்கு விற்பனை செய்யும் நபர் நேற்றுமுன்தினம் மாலை பேருந்து நிலையத்தில் மது போதையில் குழப்பம் விளைவித்தார் எனப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் அந்தச் சந்தேகநபரையும் ஒக்ரோபர் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ- 9)

## நகைக்கடை உரிமையாளருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 21
நீதிமன்ற வழக்குத் தவணைக்கு ஒழுங்காக சமூகமளிக்காத காரணத்தால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல நகைக்கடையின் உரிமையாளர் யாழ்ப்பாண நீதிவான் மன்றினால் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

திருட்டு நகைகளை உடமையில் வைத்திருந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட குறித்த நகைக்கடை உரிமையாளர், தனக்கெதிரான குற்றச்சாட்டை மறுத்ததனால் பிணையில் விடப்பட்டு வழக்கு விளக்கத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் இரண்டு விளக்கத் தவணைகளுக்கு ஒழுங்காகச் சமூகமளிக்கவில்லை. நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது சட்டத்தரணி மூலமாக நேற்று அவர் நீதிவான் மன்றில் முன்னிலையாகினார். அவரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி. சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-4,103)

## வலி. வடக்குப் பிரதேச சபையின் கட்டடத்தில் நேற்றுத் தீ விபத்து

வலி. வடக்குப் பிரதேச சபையின் அலுவலகக் கட்டடத்தில் நேற்றுத் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. அதனால் பல லட்சம் ரூபா பெறுமதியிலான சொத்துக்கள் எரிந்து நாசமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்டடத்தின் மேல் மாடியில் நேற்று மாலை தீ விபத்து இடம்பெற்றது. நேற்று மின்தடை ஏற்பட்ட காரணத்தினால் மின் பிறப்பாக்கி மூலமாக மின்சாரம் பெற்று அலுவலகச் செயற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே தீ பற்றியதாகப் பிரதேச சபைத் தகவல்கள் தெரிவித்தன. இதனால் குறித்த இணைப்பில் ஏற்பட்ட மின் ஒழுக்கினால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. அலுவலகம் இயங்கிய நேரம் என்பதனால் சிறிது நேரத்தில் தீ அவதானிக்கப்பட்டு உடனடியாக யாழ். மாநகர சபையின் தீ அணைப்பு சேவைக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்துத் தீயணைப்புப் பிரிவு அங்கு சென்று தீ அணைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்சேதவிபரங்கள்குறித்துச்சபைச் செயலாளரின்பதிலைப்பெறமுடியவில்லை. 10 லட்சம் ரூபாவுக்கும் மேல் நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,101)

## சட்டவிரோதமாக மதுபானம் விற்க முயன்றவருக்கு தண்டம்

கிளிநொச்சி, செப். 21
கால் போத்தல்களில் அடைக்கப்பட்ட அரச சீல் சாராயம் 100 ஐ சட்டவிரோதமாக விற்க முயற்சித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதிவான் மன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

கடந்த வாரம் வெற்றிலைக் கேணிப் பகுதியில் அரச சாராயம் விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், அங்கு சென்ற பொலிஸார் சந்தேகத்துக்கிடமான நபரின் வீட்டைசோதனை செய்தனர். இதன்போது கால் போத்தல்களில் அடைக்கப்பட்ட அரச முத்திரை பதிக்கப்பட்ட சாராயப் போத்தல்கள் 100 மீட்கப்பட்டதோடு, சம்பந்தப்பட்ட நபைரையும் கைது செய்தனர். அவரை நேற்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் பொலிஸார் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைகளின் போது, சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதனால், அவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் 5 நாள்கள் சமூகசேவையில் ஈடுபடுமாறும் கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார். (வ-ரி3)

# 13, 689 தியாகிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி கிடைக்கவில்லை

மன்னார், செப். 21
'இன விடுதலைக்கு தம்மை தியாகம் செய்த தியாகிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டம்' என்று வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தில் பதிவுகளை மேற்கொண்ட 13 ஆயிரத்து 689 குடும்பங்களுக்கு இது வரை உதவித்திட்டங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட இன விடுதலைக்கு தம்மை தியாகம் செய்த தியாகிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டத்தில் புனர்வாழ்வு பெற்ற போராளிகள், போரில் பிள்ளைகளை இழந்த மாவீரர் குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து உயிர் நீத்த அங்கத்தவர்களின் குடும்பங்கள் உள்வாங்கப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு அந்தக் குடும்பங்களிடம் மேற்கொண்ட பதிவு நடவடிக்கைகளின் போது, வடக்கு மாகாணம் முழுவதும் மொத்தமாக 12 ஆயிரத்து 494 குடும்பங்கள் பதிவு செய்திருந்தனர். இவர்களுக்கான உதவித்திட்டங்களை வழங்குவதற்கு வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டில் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்துக்கு 43 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

இந்த நிதியில் சிறப்புத் தேவை உடையவர்கள் என்னும் அடிப்படையில் 05 மாவட்டங்களிலும் இடம்பெற்ற தெரிவுகளின் அடிப்படையில் ஒரு மாவட்டத்தில் இருந்து 147 குடும்பங்கள் வீதம் 5 மாவட்டங்களிலும் இருந்து 860 குடும்பங்கள் உள்வாங்கப்பட்டனர். இவர்களுக்கு வாழ்வாதார உதவித்தொகையாக தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் 125 குடும்பங்களுக்கும் இந்த திட்டம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் மீதமாக உள்ள பதிவு செய்த குடும்பங்களுக்கும், கடந்த ஆண்டு பதிவு செய்யத் தவறிய நிலையில் இந்த ஆண்டு பதிவுகளைச் செய்த குடும்பங்களுடன் ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து உயிரிழந்த அங்கத்தவர்களின் குடும்பங்கள் உட்பட பதிவுகளை மேற்கொண்ட 2 ஆயிரத்து 680 குடும்பங்களுக்கு இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் 25 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. இதனடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன. எனினும் இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்ட பதிவுகளின் போது குறித்த திட்டத்துக்காக பதிவுகளை மேற்கொண்டு உதவித்திட்டம் கிடைக்காமல் 13 ஆயிரத்து 689 குடும்பங்கள் எஞ்சியுள்ளதாக கிராம அபிவிருத்தி அமைச்சின் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-21)

## அமெரிக்க கற்கை நெறி குறித்த கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.21
இலங்கை அமெரிக்க தூதரகத்தினரால் அமெரிக்க கற்கை நெறி பற்றிய கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கில் அமெரிக்க கல்வி முறைமை, அமெரிக்கப் பல்கலை கழகங்களுக்குத் தெரிவாவது எவ்வாறு, புலமை பரிசில் பெறுவது எவ்வாறு என்பன தொடர்பில் இந்தக் கருத்தரங்கில் தகவல்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கு, இலக்கம் 23, அத்தியடி புதுவீதி நல்லூரில் அமைந்துள்ள அமெரிக்கன் கோனரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (வ-ரி4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுதலையை வலியுறுத்தி தமிழ் கைதிகள் போராட்டம்

அநுராதபுரம் சிறைச்சாலையில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் இன்று புதன்கிழமை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கோரியும், தங்கள் வழக்குகளை துரிதப்படுத்துமாறு கோரியும், தங்கள் வழக்குகளை வடக்கு, கிழக்கிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறு கோரியும் இந்த உணவு தவிர்ப்பை முன்னெடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

"அரசு தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தண்டனை வழங்குவதை நோக்கமாகக்கொண்டே செயற்படுகின்றது. அரசின் விருப்பம் அதுவே. அதிகாரிகளும் அந்த நோக்கிலேயே செயற்படுகின்றனர். தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் அரசு தமிழ் அரசியலைத் தண்டிக்க விரும்புகின்றது - முயல்கின்றது.

இதனையே நாங்கள் நிராகரிக்கின்றோம். இது தமிழ் மக்களின் பிரச்சினை மாத்திரமல்ல. ஒட்டுமொத்த இலங்கையின் பிரச்சினை. தேசிய பிரச்சினை. இதன் காரணமாகவே அரசியல் தீர்மானம் எடுத்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்துகின்றோம். இந்த அரசும் முன்னைய அரசைப் போன்று ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவே செயற்படுகின்றது. இந்த நிலை மாறவேண்டும்'' என்றார் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல். (வ-4)

# திருப்பனந்தாள் ஆதீன இணை முதல்வர் சமாதி

யாழ்ப்பாணம், செப். 21

திருப்பனந்தாள் ஆதீன இணை முதல்வர் ஸ்ரீமத். சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமி நேற்றுமுன்தினமிரவு இரவு உணவுக்கான மண்டபத்தில் திடீரென



சமாதியடைந்தார் என்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

எதிர்கால திருப்பனந்தாள் முதல்வர் என அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட சுவாமி சிறந்த கல்விமான். பல்கலைக்கழகவிரிவுரையாளராகப்பணியாற்றியவர். முனைவர் பட்டம் பெற்ற இவர் திருமுறைகளில் மிகவும் ஆற்றல் மிக்கவராக விளங்கியவர். யாழ்ப்பாணத்துக்கு நான்கு தடவை பயணம் செய்திருந்த அவர் நல்லைநகர் நாவலர் பெருமான் தொடர்பான நூல்கள் அனைத்தையும் பாதுகாத்துப் பலருக்கு உதவியவர். இவரது பிரிவு சைவ உலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக கருதப்படுகிறது என்று ஆறு.திருமுருகன் தெரிவித்தார். (வ-4)

**வீடு வாடகைக்கு**

பிரதான வீதி, சங்கானையில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

077 623 7037




## மரண அறிவித்தல்

### முருகேசு திருஞானசம்பந்தன்

(இளைப்பாறிய பொறியியலாளரும் International Federation of Red Cross and Red Crescent Societies இன் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரும்)



யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகவும் பம்பலப்பிட்டி, கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு திருஞானசம்பந்தன் கடந்த (19.09.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி முருகேசு - ஜெயலக்குமி தம்பதிகளின் மூத்த மகனும் செல்லையா இராமலிங்கம் (மல்லாகம் சட்டத்தரணி) - அருள்நாயகி அம்மாள் தம்பதியரின் மருமகனும் மீனலோஜினியின் அன்புக் கணவரும் வைத்தியகலாநிதி திருவரங்கஜனனி,நயனி,ஷிவானி ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்தியகலாநிதி திருமுருகன், இராம்குமார், தீரஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் திருநந்தனன், தரங்கினி, ஜகத்குரு, சுமுகன், அமிர்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் முருகேசு வாகீசர், புனிதச்செல்வி யோகீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வாணி, வதனி, திருக்குமார் ஆகியோரின் மாமனாரும் மோகனா வாகீசரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 352, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்த அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

## மரண அறிவித்தல்

மலர்வு
18
09
1924



உதிர்வு
19
09
2016

### ஐயாதுரை கனகரட்ணம்

இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்

இல.27 சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தில் வசித்தவரும், இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் ஐயாதுரை கனகரட்ணம் 19.09.2016 திங்கள் காலமானார்.

அன்னார் யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், முத்து சயம்பு (ஸ்தாபகர் காரைநகர இந்துக் கல்லூரி) அவர்களின் பேரனும், காலஞ்சென்ற ஐயாதுரை, கனகம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற விஜயலக்சுமியின் அன்பு கணவரும், மற்றும் றமணன் (நோர்வே), ஜெயராம் (அவுஸ்திரேலியா), ஜெயந்தி, நிலந்தி (லண்டன்), ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் பரம்சோதி (இளைப்பாறிய சுங்க இலாக அதிகாரி) இராஜேஸ்வரி (கோண்டாவில்) மற்றும் காலஞ்சென்ற சபாரத்தினம் செல்லக்கண்ணு ஆகியோரின் அன்பு சகோதரனும், சில்கா (நோர்வே), ரூபிக்கா (அவுஸ்திரேலியா), றமேஷ், பாலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிர்ஷ்ணி, சாய்ராம், கார்த்திகா, ராகவன், பிரசாந்தன், (லண்டன்), யதுஷன், டுஷாணி (அவுஸ்திரேலியா) அமிலி (நோர்வே) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், ஞானசுந்தரம், ஞானகணேஷன், ஞானேந்திரன், ஞானஈஸ்வரன், ஞானபக்தன், இராசம்மா, அன்னபூரணம் மற்றும் சொர்ணலக்ஷ்மி, ஞானயோகன்,பாக்கியலக்ஷ்மி, ராஜினி, பார்வதி மற்றும் அஞ்சலா, நாகரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மாலினி, சிறிறங்ன், பவானி, காலஞ்சென்ற லோகேந்திரன், ரேவதி வேலாயுதபிள்ளை, சிறிகரன், மலர், மாலதி சிறிதரன் (லண்டன்), வதனி, ரட்ணசிங்கம் (மேஜர் ஜெனரல்), சாந்த சொரூபி, ஜெகசொரூபி, ராஜ்மோகன், ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், நிரூபா (அமெரிக்கா), நிஞ்சன் (கனடா)காலஞ்சென்ற ரவிஞ்சன் ஆகியோரின் பெரியப்பாவும், சயந்தன், நிரஞ்சன், கஜேந்திரா, (லண்டன்) காலஞ்சென்ற நிரூபன், பிரதீபன் (அவுஸ்திரேலியா), தர்ஷினி, நிரோஜன், றமணி (கனடா), றஞ்சன் (லண்டன்), றஜீவன் (கனடா), றொவினா, நவின் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.09.2016 வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரைக்கும் மகிந்த மலர்ச்சாலையில் இல.591 காலி வீதி கல்கிசை என்னும் இடத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்
மகன் ஜெயராம்

2/4 - F Block, Park Road,
Anderson Gold Link Flats
Colombo-5

+94776971647, +94112586940, +94769732978

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கற்பிக்கும்
**ஆசிரியர்**
**திரு.ம. பேர்ட்டி பனிஸ்ரர்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**சூசைப்பிள்ளை**
**சோதி மரியதாஸ்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி அரசம்மா சின்னத்தம்பி



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரசம்மா சின்னத்தம்பி 18.09.2016 ஞாயிற்றுக் கிழமை சிவபதம்அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், குட்டித்தம்பி - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, முத்துச்சாமி, துரைசாமி, பாக்கியம், இராமசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோன்மணி (கனடா), நடேசலிங்கம் (கனடா), யோகேஸ்வரி (கனடா), சரஸ்வதி (இங்கிலாந்து), காலஞ் சென்றவர்களான நடராஜா, பத்மாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தேவசுந்தரம் (தும்பி கராஜ்), நாகேஸ்வரி, இராஜகுலசிங்கம், விவேகானந்தராஜா, இராஜலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2016) வியாழக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

தகவல்:
[illegible]
கணேசலிங்கம்

**0097 1504 112 690-விவேகானந்தராஜா**

## மரண அறிவித்தல்

### திருமதி
### தெய்வநாயகி சுப்பிரமணியம்



காவிலகரணவாய்கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி சுப்பிரமணியம் (20.09.2016) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் சரசுவதி தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - முத்தம்மா தம்பதியரின் அன்புமருமகளும் சுஜிதா, சுமிதா, சுஜிகரன், சுகன்னியா, சுஜீவா ஆகியோரின் பாசமிகு தாயும் சானுஜா, சந்தோஸ், சஞ்சஜ், சயானி, சித்தார்த் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பகவதி காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மகேஸ்வரி, கமலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காவில**
**கரணவாய், கரவெட்டி.**

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 8936162**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை அபிவிருத்திச் சபை
## விலைமனுக் கோரல்

யாழ்.நகரப் பகுதி அல்லது நகரை அண்மித்த பகுதியில் கூல்பார் அமைப்பதற் கேற்ற 1000 - 1500 சதுர அடி அளவுள்ள கடைக்கட்டடம் தேவைப்படுகின்றது. வாட கைக்கு இக் கட்டடத்தைக் கொடுக்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்குத் தங்களது விலைமனுக்களைப் பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் 27.09.2016 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:-
மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே வழங்கப்படும்.

தலைவர், பனை அபிவிருத்திச்சபை,
தலைமை அலுவலகம்.
முதலாம் மாடி, தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2034

## பணிப் பெண் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள வீட்டில் தங்கியிருந்து அனைத்து வேலைகளையும் செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

077 2521 507, 077 844 8045

## ரொயாட்டா டபிள்கப் வாகனம் விற்பனைக்கு



250 xxxx இலக்கமுடைய ரொயாட்டா டபிள்கப் வாகனம் விற்பனைக்கு உண்டு.

இல.81,பொன்நகர், கிளிநொச்சி.
077 3073 624, 077 222 0968

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2016.

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: **21.09.2016 தொடக்கம் 10.10.2016 வரை (மு.ப 9.00 தொடக்கம் பி.ப 2.00 மணிவரை)**
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: **11.10.2016 மு.ப 10.00** மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: **11.10.2016 மு.ப 10.30 மணி** (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் / சீடா (ICTAD/ CIDA) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை **'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி கொக்குவில்** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'** என்ற விலாசத்திற்கு 2ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

| இல | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை – Vat உள்ளடங்கலாக (மில்லியன்) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | அடைக்கலநாயகி வீதி புனரமைப்பு- கொக்குவில் | 0.39 | 4000.00 | 1000.00 | M 9/C 10 |
| 2. | பலாலிவீதி குறுக்கு ஒழுங்கை(சம்பத் வங்கி அருகாமை) புனரமைப்பு- திருநெல்வேலி | 0.38 | 3900.00 | 1000.00 | M 9/C 10 |
| 3. | தலங்காவில் பிள்ளையார் 8ம் 9ம் குறுக்கு ஒழுங்கைகள் மற்றும் முருகன் வீதி 9ம் குறுக்கு ஒழுங்கைதொடர்வேலை- திருநெல்வேலி | 0.49 | 5000.00 | 1000.00 | M 9/C 10 |
| 4. | சிங்கராஜர் ஒழுங்கை புனரமைப்பு - கொக்குவில் | 0.32 | 3250.00 | 1000.00 | M 9/C 10 |
| 5. | பிரம்படி குறுக்கு வீதி புனரமைப்பு- கொக்குவில் | 0.41 | 4200.00 | 1000.00 | M 9/C 10 |
| 6. | 98/10 பலாலி வீதி குறுக்கு ஒழுங்கை. திருநெல்வேலி | 0.54 | 5500.00 | 1000.00 | M 9/C 10 |
| 7. | மாரியம்மன் குறுக்கு வீதி புனரமைப்பு- திருநெல்வேலி | 0.30 | 3100.00 | 1000.00 | M 9/C 10 |
| 8. | வீரபத்திரர் கோவில் வீதி புனரமைப்பு- கோண்டாவில் | 0.82 | 8200.00 | 1000.00 | M 9/C 10 |
| 9. | பொற்பதி 1ம் ஒழுங்கை தொடர்வேலை மற்றும் புனரமைப்பு- கொக்குவில் | 0.26 | 2700.00 | 1000.00 | M 9/C 10 |
| 10 | ஆடி வீதி 1ம். ஒழுங்கை மற்றும் காளி கோவில் தெற்கு ஒழுங்கை கோண்டாவில் | 0.65 | 6600.00 | 1000.00 | M 9/C 10 |
| 11. | கருவேப்புலம் வீதி குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு- கொக்குவில் | 0.47 | 4800.00 | 1000.00 | M 9/C 10 |
| 12 | கோண்டாவில் பொது நூலகத்திற்கு மாபிள் பதித்தல் | 0.39 | 4000.00 | 1000.00 | M 9/C 10 |
| 13 | கொல்களம் புனரமைப்பு வேலை கொக்குவில் | 0.24 | 2500.00 | 1000.00 | M 9/C 10 |

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை
கொக்குவில்

(C/26262)(10.17)

## கல்லீரல் தேவை
## Liver Wanted



கல்லீரலின் ஒரு சிறு பகுதி தேவைப்படுகின்றது.

இரத்த வகை- A+/ O
வயது: 18-50

தானம் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.மேலதிக விவரங்களுக்கு.

அழையுங்கள் : 077 577 8871

## CLASSES TO SUCCEED ATTORNEY AT LAW EXAMINATIONS

We conduct exam oriented sessions for Law students

- Preliminary Year
- Intermediate Year
- Final Year

Classes commence from September 21,2016
Conference Hall, at HariBol Guest House
Maruthanarmadam, Chunnakam, Jaffna
*On Monday, Wednesday and Fridays every week, From 5pm to 7pm*
Classes will be conducted in medium English & Tamil
For more details contact : 021 3212863, 077 3039754

## யாழ். மண்ணில் தொழில்திறன் விருத்திக் கற்கை நெறிகள் மிகக் குறைந்த கட்டணத்தில்... யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

கல்வி கற்று தொழில் வாய்ப்புகளுக்காக எதிர்பார்த்து காத்திருக்கும் பாடசாலை கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் மற்றும் வெளிநாடு செல்லவுள்ள யுவதிகள் அனைவருக்குமாக குறைந்த கட்டணத்தில்

**வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம், ஈ. சரவணபவன் அறக்கட்டளை**
அனுசரணையுடன்.
பின்வரும் தொழில் திறன் விருத்திக் கற்கைநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.



01. Home Economics & Home Decoration
   - ✓ Cake Icing
   - ✓ Cookery
02. Beauty Training Course
   - ✓ Makeup (Bridal, Puberty & any Party)
   - ✓ Facial
   - ✓ Threading

✓ 06 மாதகால பயிற்சிகள்
✓ மிகக் குறைந்த கட்டணம்
✓ பயிற்சி நெறி முடிவில் தராதரம் மிக்க சான்றிதழ்.

வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பமாகவுள்ளன

மேலதிக விவரங்களுக்கு:
**வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்**
இல.133, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7456

## யாழ்.நகரில்
## LATVIA வில் உயர் கல்விக்கான இலவச கருத்தரங்கு மற்றும் நேர்காணல்

**யாழ். மாணவர்களே! உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்**



- ✓ யாழ்.நகருக்கு LATVIA பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் கல்விசார் பிரதிநிதிகளை (Representative) சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்.
- ✓ February 2017 intake இற்கான அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள விரையுங்கள்.
- ✓ A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியைத் தொடர முடியும்.
- ✓ IELTS அவசியம் இல்லை
- ✓ Schengen Visa (Schengen Union) இல் உள்ள 26 நாடுகளுக்கும் சென்று வர முடியும்.
- ✓ 20 மணிநேரம் பகுதி நேர வேலை வாய்ப்பும் உண்டு.

திகதிகள் :- 24.09.2016 & 25.09.2016
நேரம் :- 9.30 am to 3.00 pm வரை
இடம் :- British College of Higher Studies
No.15 2/1, Sirambiyady Lane
Near Ariyakulam Junction &
Above Sathosa, Jaffna.
Tel :- 076 668 9664, 021 222 4550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After A/Ls...

UGC அங்கீகாரம் கொண்ட UK Degree பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...

INTAKE NOW ON



edexcel | PEARSON | London South Bank University | Wolverhampton | CIOB | RICS

BM — Business Management
CSD — Computing & Systems Development
CE — Civil Engineering
QS — Quantity Surveying
BMS — Biomedical Science
LLB — Law

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

UGC Recognized
TVEC Approved

# BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

18 YEARS of Trust & Excellence in Higher Education

BUILDING CAREERS - TRANSFORMING LIVES

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna

ISO 9001:2008 CERTIFIED

HOTLINE : 021 2219910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

ROYALCERT | DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00 | IAF International Accreditation Forum

ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

TOEIC | UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations | ICDL | bcs | abe Accredited College | SQA

## இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

04, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

16, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## KIDS' Class — Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

08, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

08, October, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way® English Academy

Contact (Jaffna Branch) : 033 33 40 600

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கம்

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சிற்றுண்டிச் சாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையம்**

### கேள்வி அறிவித்தல் - 2017

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 01.11.2016 ஆம் திகதி முதல் 31.12.2017 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

ஆர்வமுள்ளோர் அதற்கான விண்ணப்பப் படிவத்தினையும் நிபந்தனைகளையும் மீளளிக்கக் கூடிய கொடுப்பனவாக ரூபா 500.00 உம் மீளளிக்க முடியாத கொடுப்பனவாக ரூபா 100 உம் செலுத்துவதன் மூலம் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 05.10.2016 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக நேரிலோ பதிவுத் தபால் மூலமோ **"தலைவர் நோயாளர் நலன்புரி சங்கம் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி"** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கேள்வி அறிவித்தல் 2016 -2017"** எனக் குறிப்பிடவேண்டும்.

தலைவர் 20.09.2016 செயலாளர்

(சி.26261) (13.12)

## நினைவஞ்சலிகள்

**36 ஆம் ஆண்டுகள் நிறைவில்**



மண்ணில் 11 . 12 . 1930 — விண்ணில் 25 . 04 . 1980

**அமரர் பொன்னையா நாகராசா**

**(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)**

திதி - துவாதசி

**ஈராண்டுகள் நிறைவில்**



மண்ணில் 18 . 05 . 1977 — விண்ணில் 14 . 09 . 2014

**அமரர் நாகராசா அகிலன்**

(Bcom,HNDA,M.A)

**முன்னாள் சமுர்த்தி முகாமையாளர்)**

திதி - சஷ்டி

நினைவுகளுடன் நீள்கின்ற நாள்களுக்குள்
எம் நெஞ்சில் நீங்கா இடம்பிடித்தவர்களே
ஈரேழு ஜென்மங்கள் சென்றாலும் மாறாது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**மஞ்சத்தடி, இணுவில்.**

குடும்பத்தினர்
மின்திரைலேன், குப்பிளான் தெற்கு.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 02 . 10 . 1952 — மறைவு 07 . 09 . 2016



அமரர் சிவத்திரு

### செல்லையா மண்டலாய்விநாயகமூர்த்தி

**(கிரியாய் அம்மன், இயக்கச்சி அம்மன் பூசகர் - J.P)**

07.09.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து, அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டு ஆறுதல்கள் தெரிவித்த உள்ளங்கள் மற்றும் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களாகிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (22.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்[illegible]**

596, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

(செ/4764)(11.18)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கெங்காதேவி சிவனேஸ்வரன்



அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி சிவனேஸ்வரன் நேற்று (20.09.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம்-சரோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சிவனேஸ்வரனின் அன்பு மனைவியும் குகப்பிரியா, தீபிதன், கஜீபனா ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியசீலன் (இடைக்காடு), சத்தியதேவி (ஜேர்மனி), தர்ம சீலன் (ஜேர்மனி), உமாதேவி (அச்சுவேலி), குணசீலன் (கனடா), ஞானசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் (கோப்பாய்), தனபாலரத்தினசிங்கம் (சுவிஸ்), லலிதாதேவி (நீர்வேலி), சிவலிங்கம் (டென்மார்க்), சரோஜினிதேவி (கனடா), சிவனேஸ்வரி (டென்மார்க்), செல்வராணி (ஜேர்மனி), மாலினி (ஆஸ்திரேலியா) கமலாமாலினிதேவி, தயாபரன், ஜெயராணி காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ஜெனி, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.**

**தகவல் :
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கண்ணகை சீவரத்தினம்

சோனெழு, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணகை சீவரத்தினம் நேற்று (20.09.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சீவரத்தினத்தின் அன்பு மனைவியும் பாலகிருஷ்ணன், பாலசரஸ்வதி, பால சுப்பிரமணியம், சிவகாம்பிகை, வசந்தகோகிலம், திருச்செந்தூர்நாதன், வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுரேந்திர குமாரி, சந்திரசேகரம், மதிவதனி, பாலசுப்பிர மணியம், சோமேஸ்சரன், தேவகி, விக்னேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் கஜேந்திரா, கார்த்திகா, காவேரி, கீர்த்தனா, கஸ்தூரி, கௌசல்யா, சியந்த், காணுஜன், துவாரகி, விஷ ்ணுப்பிரியன், பாலகோபி, திவாகரன், கோபிசாந், சாரங்கா, சுவர்க்கன், சுப்ரயா, வினுசா, விசாந்த், வினோதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2016) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**சோனெழு, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.**

**தகவல் :
குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை சோதி மரியதாஸ்

(முன்னாள் வடகிழக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளரும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழையமாணவர் சங்க உபதலைவரும்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் வடகிழக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளரும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க உபதலைவருமான சூசைப் பிள்ளை சோதி மரியதாஸ் 19.09.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிசோதி சூசைப்பிள்ளை-மாகிறேற் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான டோமினிக் மத்தியூஸ்- சலேற்றம்மா தம்பதிகளின் மரு மகனும் மேரி ஜூலியற் கனகராணி யின் அன்புக் கணவரும் சுரேஷ் ஜயலத்(இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரி, கொழும்பு), கென்ஸ்லி கியூபேட் (உயிரியல் புள்ளி விவர வியலாளர் நியூபவுண் லான்ட் பல் கலைக்கழகம்- கனடா), பேர்ட்டி பனிஸ்ரர்(ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாமலி (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்), நாளினி (பணிப்பாளர், After School Programme - கனடா), அருட்செல்வி (ஆசிரியை- அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்கா, அமிர்தநாதர், அலெக்சாண்டர் மற்றும் திரேசம்மா, புளோறா மறியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான டானியல், புனிதம் மற்றும் கசில்டா, வலன்ரைன், செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஜூலியன், ஜெயசீலன் மற்றும் இக்னேஷியஸ் லொயலா, அஞ்சலா மேசி, மேபில், றிச்சட், பெனடிக்ரா, எட்மண்ட், அன்ரனிற்றா, பிறின்ரன்ஸ் ஆகியோரின் மைத்துனரும் வயலற், மேரி றோஸ், பேர்மினஸ், செல்வரெட்ணம், ஆன், இராஜநாயகம், திலகா, பேபிராஜா, நிர்மலா ஆகியோரின் சகலனும் மனோஜ் பிரவீன் (ICBT Campus, வெள்ளவத்தை), கிரிஷானி எரங்கா, நிலோஜன் (புனித பத்திரிசியார் கல்லூரி),நிலக்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி), ஷாலினி(வேம்படி மகளிர் கல்லூரி), அக்ஷரா (கனடா), ருப்திகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குத் திருப்பலி இன்று (21.09.2016) புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**132, [illegible] வீதி, குருநகர்
யாழ்ப்பாணம்.**

**தகவல் :
ம.பேர்ட்டி பனிஸ்ரர்(மகன்).**

**077 160 6077 , 021 222 5370**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் அபகரிக்கப்பட்ட மயானங்களை உடன் விடுவிக்குக

### ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, செப்.21
முல்லைத்தீவில் அபகரிக்கப்பட்டுள்ள மயானங்களை விடுவிக்க வேண்டும் என்று ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இரு மயானங்கள் இராணுவத்தாலும், வனவளத் திணைக்களத்தாலும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மக்கள் பயன்பாட்டுக்கு விடுவிக்க வேண்டும் என்றே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒட்டுசுட்டான் வெடுக்குநாறியில் உள்ள மயானத்தை இராணுவத்தினர் கடந்த 7 ஆண்டுகளாக ஆக்கிரமித்துள்ளனர். அதனால் மக்கள் பல மைல் தூரத்தில் உள்ள அயல் கிராம மயானங்களையே பயன்படுத்துகின்றனர். மாங்குளத்தில் உள்ள மயானம் ஒன்று காட்டுப் பகுதியில் உள்ளது. குறித்த மயானமும், அதற்கான பாதையும் தமக்குச் சொந்தம் என வனவளத்திணைக்களத்தினர் உரிமை கோரி மக்கள் பயன்பாட்டைத் தடுத்துள்ளனர். குறித்த மயானங்களை மக்கள் பயன்பாட்டுக்கு விடுவிக்க வேண்டும்.- என்று கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த மயானங்களை மக்கள் பயன்பாட்டுக்குக் கையளிக்க இரு தரப்புகளும் உடன் முன்வர வேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ற-101)

### பொதுக் கூட்டம்

சரசாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை பி.ப. 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் சனசமூக நிலையத்துக்கு உட்பட்ட மணல் பாதைகளை தார் பாதைகளாக மாற்றுவது, வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு சுயதொழில் தொடர் பான அறிமுகம், போரால் பாதிக்கப்பட்ட வீடு இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கங் ளுக்கான வீடுகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)



கரையோர மற்றும் கடல் வளங்களை பாதுகாக்கும் நிகழ்வு யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்றுக் காலை 7.30 மணிக்கு குருநகரில் நடைபெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும் கரையோர மற்றும் கடல் வளங்களை பாதுகாக்கும் வாரம் கடந்த 17 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படுகின்றது. (ற-5-ரி1)

### திருட்டுக் குற்றச்சாட்டில் கைதானவருக்குப் பிணை

தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில்பகலில் அத்துமீறி நுழைந்து வீடு உடைத்து திருடிய குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபரை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல மல்லாகம் நீதிமன்று அனுமதித்தது.

கடந்த 12 ஆம் திகதி துர்க்காபுரம் பகுதியில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் கதவு உடைக்கப்பட்டு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துகள் திருடப்பட்டன என்று பொலிஸில் முறையிடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வித்தகபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அதன் போதே அவர் பிணையில் செல்ல அனு மதிக்கப்பட்டு வழக்கு அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற-4,107)

## வவுனியாவில் சிறுநீரக நோய் பாதித்தோருக்குக் கொடுப்பனவு

### வடக்கு சுகாதார அமைச்சர் தகவல்

வவுனியா, செப். 21
வவுனியா மாவட்டத்தில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 100 பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார். வவுனியா கள்ளிக்குளம் மீள் குடியேற்றக் கிராமத்தில் மக்களைச் சந்தித்து அவர் கலந்துரையாடினார்.

அவர் தெரிவித்ததாவது:
வவுனியா மாவட்டத்தில் உள்ள பிரதேசசெயலகங்களைச்சேர்ந்த மக்களில் மொத்தமாக ஆயிரத்து 100 பேருக்கு மேற்பட்டவர்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 14 பேருக்கே கடந்த காலங்களில் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கடந்த வருடம் மத்திய சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு வவுனியா மாவட்டத்திலுள்ள சிறுநீரக நோயால் பாதிக் கப்பட்ட ஆயிரத்து 100 பேருக்கும் மாதாந்த உதவித் தொகையான 3 ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாங்கள் எப்படித்தான் சேவை செய்தாலும் எமக்கு மேலுள்ள அதிகாரிகளும் இடம்கொடுக்க வேண்டும். அனைத்தையும் உடனடியாகப் பெற்றுக் கொடுக்க முடியாது. உங்களுடைய பிரச்சினைகளை உரிய முறையில் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-என்றார். (ற-21)

## தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பத்தரமுல்ல சீலாரத்தின தேரர் உதவி

### எதிர்க்கட்சித் தலைவர், அரசியல்வாதிகள் தொடர்பாகக் காட்டமாகக் கருத்து

கிளிநொச்சி, செப். 21
நாம் அனைவரும் ஒரு நாட்டை சேர்ந்தவர்கள். இனவாதம் பேசவேண்டிய தேவை எமக்குக்கிடையாது. உங்கள் வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகள் ஆகியவர்கள் மௌனமாக இருக்கின்றனர். இவ்வாறு தெரிவித்தார் ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலாரத்தின தேரர்.



கிளிநொச்சி சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களை பத்தரமுல்ல சீலாரத்தின தேரர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கினார்.

அவர் தெரிவித்ததாவது:
நான் இனவாதம் பேசவில்லை. பாதிக்கப்பட்ட உங்களின் நிலை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்வேன். உங்களுக்கு உதவி செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பேசுவேன். நாம் அனைவரும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள். இனவாதம் பேசவேண்டிய தேவை எமக்கு கிடையாது.

உங்களது வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகளாக்கப்பட்டவர்கள் உங்களுக்கு உதவ வேண்டும். டக்ளஸ் தேவானந்தா உங்கள் வாக்குகளால் நாடாளுன்றம் சென்றவர். அவர் உங்களை இன்று வரை சந்திக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் தனக்கு எதிர்க்கட்சித்தலைமைப் பதவி வழங்கப்படவில்லை என்று இனவாதம் பேசினார்.

இன்று எதிர்க்கட்சித் தலைவர் ஆனவுடன் அமைதியாக இருக்கின்றார். அவரும் இன்றுவரை உங்களைவந்துசந்திக்கவில்லை. அவர்களே உங்களுக்கு முதலில் உதவ வேண்டும். அவர்கள் உதவ வேண்டும் என்று அவர்களை கேளுங்கள். நானும் அவர்களுக்குக் கூறுகின்றேன். இன்று அரசியலில் உள்ளவர்களின் உறவினர்கள் போர்க் காலத்தில் பாதிக்கப்பட்டவர்களா? யாருடைய உறவினராவது போரால் உயிரிழந்துள்ளார்களா?. மனச்சாட்சியைத்தொட்டுச் சொல்லுங்கள். அவ்வாறு எவரும் பாதிக்கப்படவில்லை. அவர்களுக்கு காயங்கள் கூட ஏற்படவில்லை. அவர்கள் சுகபோக வாழ்க்கையை அனுபவித்தார்கள். இங்கு வாழ்ந்த நீங்களே பாதிக்கப்பட்டவர்கள். போரால் அனைத்தையும் இழந்த நீங்கள் இன்று மீண்டும் இழப்பைச் சந்தித்துள்ளீர்கள். உங்கள் இழப்பை ஈடு செய்யும் வகையில் நான் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைப்பேன். -என்றார். (ற-21,ரி3,34)

## குரங்குத் தொல்லையைத் தீர்ப்பதற்கு அதிகாரிகளுக்கு முனைப்பில்லை

### பாதிக்கப்பட்டவர்கள் குற்றச்சாட்டு

குரங்குளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முறையிட்டவரின் முறைப்பாட்டுக்கு உரிய கவனம் செலுத்தப்படவில்லை. முறையிடச் சென்றவர் கூட்டம் முடிந்து வீடு திரும்பியபோது வீட்டு ஓடுகள் குரங்குகளால் நொருக்கப்பட்டிருந்தன. வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்த குழந்தை தெய்வாதீனமாகத் தப்பியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் நடந்துள்ளது. சாவகச்சேரி நகரில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. அவை வீடுகளின் ஓடுகளை உடைப்பதுடன், பயன் தரு மரங்களையும் அழிக்கின்றன. குரங்குகளை அந்தப் பகுதியில் இருந்து விரட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. குரங்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கின் றது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கூடுகள் வைத்துக் குரங்குகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு பிடிக்கப்பட்ட குரங்குகளை எங்கு கொண்டு சென்று விடுவது என்று தெரியாது மக்கள் மீண்டும் அவற்றை வெளியே விட்ட சந்தர்ப்பங்களும் நடந்தன. இந்தப் பிரச்சினை குறித்துப் பல இடங்களில் முறையிடப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இது குறித்து ஒருவர் முறையிட்டார். எனினும் அது குறித்துக் கவனம் செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. குரங்குகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியபோது அங்கிருந்தவர்கள் சிரித்தனரே தவிர நடவடிக்கை குறித்துப் பேசவில்லை என்று முறை யிடச் சென்றவர் கவலையுடன் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதுகுறித்துப் பலதடவைகள் சுட்டிக்காட்டப்பட்டது. நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததால் இப்போது எவரும் அது குறித்துச் சுட்டிக்காட்டுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)




# 6 மாதங்களில் மூடப்படும் எனப்பட்ட மதுசாலை தற்போதும் இயங்குகிறது

### மாவட்டச் செயலாளர் என்ன செய்கின்றார் என வடக்கு உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி

முல்லைத்தீவு, செப்.21
முல்லைத்தீவில் உள்ள மதுபானசாலையை 6 மாதங்களில் மூடுவேன் என்று மாவட்டச் செயலாளர் கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் எழுத்து மூலம் முதலமைச்சருக்கு அறிவித்தார். எனினும் அது தற்போதும் இயங்குகின்றது. மாவட்டச் செயலாளர் என்ன செய்கின்றார்?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் நேற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

அதில்வடக்குமாகாணசபைஉறுப்பினர் கருத்துத் தெரிவித்தார். குறித்த மதுபானசாலை இன்னமும் மூடப்படவில்லை. இப் போது மற்றுமோர் ஹோட் டலுக்கும் மாவட்டச்செயலாளர் கடிதம் வழங்கியுள்ளார். அதிலும் மதுபானம் விற்கப்படும். அமைக்கப்படும் உல்லாச விடுதிக்காக அதற்கு அண்மையில் உள்ள ஏழை மீனவர்களின் வாடியை நகர்த்துமாறு கோரு கின்றார். மாவட்ட செயலாளர் மக்களுக்குச் சேவை புரிகின்றாரா என்ற சந்தேகம் எழுகின்றது- என்று து.ரவிகரன் தெரிவித்தார். (ற-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்ட வீடுகளை இரட்டிப்பாக்கி பிரச்சினையைத் தீர்க்கக் கோருவோம்

## புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப்.21
நாம் அனைவரும் பொருத்து வீடு வேண்டாம் என்பதில் இணக்கப்பாட்டுடன் உள்ளோம். தரப்படவுள்ள வீட்டுத்திட்ட வீடுகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாகத் தந்தால் இங்குள்ள வீட்டுப் பிரச்சினைதீரும்என்னும்எங்கள் நிலைப்பாட்டை மீள்குடியேற்ற அமைச்சரிடமும், பிரதமரிடமும் வலியுறுத்துவோம்.
இவ்வாறு வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது.
அபிவிருத்திக்குழுக்கூட்டம்நடைபெற்ற சந்தர்ப்பத்தில் இதுவரை வீட்டுத் திட்டங்கள் எவையும் கிடைக்காத மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அவர்களை இணைத் தலைவர்கள் சந்தித்தனர். கூட்டத்தில் வீட்டுத் திட்டம் தொடர்பாக முடிவெடுக்கப்படும். விரைவில் வீட்டுத் திட்டம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.
அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வீட்டுத் திட்டம் குறித்து ஆராயப்பட்டது.
மக்கள் தமது ஆதங்கங்களைத் தெரியப்படுத்தியுள்ளனர். எமக்குக் கிடைக்க வேண்டிய 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் முடங்கியுள்ளது. வழங்கப்படும் வீடுகள் எப்படியானவை என்பதை விடுத்து முதலில் 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் எமது மாவட்டத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதைத் தீர்மானமாக எடுப்போம்- என்று நாடாளுமன்ற உறுப்பினரும், இணைத் தலைவர்களில் ஒருவருமான சி.சிவமோகன் தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்தார்.
"பொருத்து வீடுகள் வேண்டாம் என்று எம்மால் மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிரந்தர வீடுகள்தான் தேவை. 65 ஆயிரம் வீடுகளுக்குப் பதிலாக ஒரு லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டால் வீட்டுப் பிரச்சினை தீரும்''- என்று அவர் குறிப்பிட்டார்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் கருத்துத் தெரிவித்தார்.
"எமக்குப் பொருத்து வீடுகள் வேண்டாம். பொருத்தமான வீடுகளே தேவை என்று வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மீள்குடியமர்ந்து ஏழு ஆண்டுகள் ஆகியும் இதுவரை வீட்டுத் திட்டங்கள் எவையும் வழங்கப்படவில்லை. இங்குள்ள மக்களுக்கு வீட்டுத் திட்டம் ஒன்றை வழங்குவது அரசுக்கு உள்ள கடமை. அமைச்சர்களுக்கும் அந்தக் கடமை உள்ளது"- என்று அவர் கூறினார்.
அனைவரது கருத்துக்களையும் உள்வாங்கிய இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியுதீன் இறுதியில் கருத்துத் தெரிவித்தார்.
"அமைச்சரவைத் தீர்மானத்தில் பொருத்து வீடுகள் அமைப்பது என்றே முடிவெடுக்கப்பட்டது. பொருத்து வீடுகள் தொடர்பில் சர்ச்சை எழுந்ததால் அந்தத் திட்டத்தை இடைநிறுத்தி வைத்துள்ளனர். எனது கருத்தின்படி, பொருத்து வீடுகள் வேண்டாம் என்பதில் இணக்கப்பாட்டுடன் இருக்கின்றோம். எமக்கும் இணக்கமில்லை, மக்களுக்கும் அது பொருத்தமானதாக இல்லை. எமக்குத் தர முடிவெடுக்கப்படும் வீட்டுத் திட்ட வீடுகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாகத் தந்தால் வீட்டுப் பிரச்சினை தீரும் என்ற எமது நிலைமைப் பாட்டை இன்று புதன்கிழமை மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம் தெரிவித்து அவரின் நிலைப்பாட்டைப் கேட்போம். பிரதமருடன் கலந்துரையாடி இறுதி முடிவெடுப்போம்''- என்று அவர் குறிப்பிட்டார்.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றில் அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெற்ற சந்தர்ப்பத்திலும் வீட்டுத் திட்டம் தொடர்பாக மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ப-21,ரி7)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.21
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் மாதனை, மல்வில், முகாவில் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.
கிளிநொச்சியில் 59ஆவது படைப்பிரிவு இராணுவ முகாம், 14ESR01 மற்றும் 14 ESR 02 ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.
வவுனியாவில் ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, தெற்கிலுப்பைக்குளம் கிராமம், கொம்புவைத்தகுளம் இராணுவ முகாம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும். (ப-ரி)

## மயானங்களில் பொருத்தப்பட்ட சூரிய மின் கல விளக்கு திருட்டு

தென்மராட்சி, செப்.21
சாவகச்சேரி பிரதேச சபையால் மயானங்களில்பொருத்தப்பட்ட சூரிய மின் கல விளக்குகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன என்று பிரதேச சபைச்செயலாளர் தெரிவித்தார்.
கடந்த மாதம் சரசாலை கொம்பிக்குளம் மயானத்தில் பொருத்தப்பட்டிருந்த சூரிய மின்கலமும், கடந்த வாரம் மீசாலை வடக்கு வேம்பிராய் மயானத்தில் பொருத்தப்பட்டிருந்த சூரிய மின்கலமும் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
தலா 60 ஆயிரம் ரூபா பெறுமதியான சூரிய மின்கலங்கள் பொதுமக்களின் வேண்டுகோளின் பிரகாரம் மயானங்களில் பொருத்தப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் திருடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.
அண்மையில் வட மாகாண சபையால் மயானங்கள் உட்பட மின்சார வெளிச்சம் இல்லாத இடங்களில் சூரிய மின் கலங்கள் பொருத்தப்பட்டு வருகின்றது. (ப-9)

## வலி. கிழக்கில் 15 வீதிகள் சீரமைப்பு

அச்சுவேலி, செப்.21
வலி. கிழக்குப்பிரதேசசபைப்பிரிவில் சபை நிதி மூலம் 12 வீதிகள் சீரமைக்கப்படுகின்றன. மாரி மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் வீதிகளைத் திருத்தி அமைப்பதற்கு ஏதுவாகத்திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
சேமக்குளம் வீ.ரி.எஸ் லேன் உரும்பிராய், முத்துமாரியம்மன் வீதி சிறுப்பிட்டி மடத்தடி, பூலகிட்டி வீதி அச்செழு, குமாரசுவாமி வீதி, செம்பாட்டு லேன் நீர்வேலி, வல்லை மயான வீதி அச்சுவேலி வடக்கு, மதவடி வீதி அச்சுவேலி மேற்கு, ஆச்சியடி வீதி கோப்பாய், பள்ளக்கலட்டி வீதி கோப்பாய், சென் மைக்கல் வீதி உரும்பிராய், அழகியர் தோட்ட வீதி கோப்பாய், சியாக்காடு மயானவீதி நீர்வேலி ஆகிய வீதிகளே திருத்தப்படுகின்றன. (ப-11)

## இன விடுதலைக்கு தியாகம் செய்தோரின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

மன்னார், செப். 21
கிராமிய அபிவிருத்தி அமைச்சின், இன விடுதலைக்குத் தம்மைத் தியாகம் செய்த தியாகிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தில் இந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 11 பயனாளிகளுக்கு நேற்றுமுன்தினம் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு மன்னாரில் உள்ள கிராமிய அபிவிருத்தி அமைச்சரின் உப அலுவலகத்தில் நடைபெற்றது.
பசு மாட்டுக்கான காசோலைகள், மரவேலை செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், இரும்பு ஒட்டு வேலைகள் செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், வாடகைப் பாத்திரங்கள், தோட்டச் செய்கை செய்வதற்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்றவை வழங்கப்பட்டன.
நிகழ்வில் கத்தோலிக்க அருட்தந்தை, வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்



பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு மாகாணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் விரைவில் இடம்பெற உள்ளது என்று அமைச்சுத் தெரிவித்தது. (ப-21)

## கடலட்டை கடத்த முயன்றவர் கைது

இலங்கைக்குக் கடத்த இருந்த சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான 250 கிலோ கடல் அட்டை பறிமுதல் செய்யப்பட்டது. அதைக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று இந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.
மண்டபம் கடற்கரைப் பகுதியிலிருந்து கீழக்கரை வழியாக இலங்கைக்குக் கடல் அட்டைகள் கடத்தப்பட உள்ளன என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்துக் குறித்த நபர் கைது செய் யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-4)

# மாணவரை ஏற்றாது பயணிக்கும் பஸ்கள் குறித்து அறிவிக்கலாம்

## முல்லை. சாலை முகாமையாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப்.21
முல்லைத்தீவுச் சாலைக்குச் சொந்தமான அரச பஸ்கள் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லவில்லை என்றால் குறித்த பஸ்ஸின் இலக்கத்தைச் சாலை முகாமையாளருக்கு அனுப்பலாம். குறித்த பஸ் சாரதி, நடத்துநர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு அரச பஸ் சாலை முகாமையாளர்.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. போக்குவரத்துத் தொடர்பான அபிவிருத்திகள் குறித்து ஆராயும் போதே சாலை முகாமையாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.
முல்லைத்தீவு - பரந்தன் ஏ-35 தடத்தில் பயணிக்கும் அரச பஸ்கள் பாடசாலை மாணவர்களை ஏற்றுவதில்லை. தனியார் பஸ்கள்தான் மாணவர்களை ஏற்றிச் செல்கின்றன. குறித்த தடத்தில் அரச பஸ்கள் அதிக வேகத்துடன் பயணிக்கின்றன. வீதி விபத்துக்கள் ஏற்படும் சாத்தியங்கள் அதிகம். இதுகுறித்து தீர்வு தரப்பட வேண்டும்.
புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் பஸ்கள் தரித்துத் தமது பயணத்தைத் தொடர வேண்டும்- என்று பிரதேச மக்கள் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.
கூட்டத்தில் இணைத் தலைவராகப் பங்கு கொண்ட அமைச்சர் ரிசாத் பதியுதீன் இது குறித்து முல்லைத்தீவு அரச பஸ் சாலை முகாமையாளரிடம் வினவினார்.
"கிளிநொச்சி, பருத்தித்துறை பஸ்களே மாணவர்களை ஏற்றாது செல்கின்றன. எமது பஸ்கள் அவ்வாறு செய்தால் பஸ் இலக்கத்தை எமக்கு அறிவியுங்கள். அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்"- என்று சாலை முகாமையாளர் தெரிவித்தார். இறுதியில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கருத்துத் தெரிவித்தார்.
''பாடசாலை மாணவர்களை ஏற்றாது செல்லும் பஸ்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட சாலை முகாமையாளர்களுக்குத் தெரியப்படுத்தவும். இது தொடர்பாக அரச பஸ் சங்கத் தலைவருக்கும் அறிவிப்போம். இன்று முதல் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் புதுக்குடியிருப்பு பஸ் நிலையத்தில் தரித்தே செல்லவேண்டும்"- என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ப-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன திணைக்கள கட்டடத்துக்கு இராணுவம் தடை

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, செப்.21

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டட நிர்மாணத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும், குறித்த காணியை இராணுவத்தினர் 5 ஆண்டுகளாகக் கையகப்படுத்தியுள்ளதால் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச அபிவிருத்திக் கூட்டம் நடத்தப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அதில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு 25 ஏக்கர் காணி உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக அந்தக் காணி இராணு வத்தினர் வசம் உள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களம் நிரந்தர அலுவலகம் இன்றி சிரமங்களுக்கு மத்தியில் செயற்பாடுகளை முன்னெடுகின்றது.

ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனத் திணைக்களம் பெரும் நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன் கட்டுக் குளம் உட்படப் பல குளங்களைப் பராமரிக்கின்றது. திணைக்களத் துக்கு நிரந்தர அலுவலகம் அவசியம். கட்டட நிர்மாணத்துக்குரிய நிதி ஒதுக் கப்பட்டபோதும் காணியை இராணுவம் கையகப் படுத்தியுள்ளதால் கட்டடம் அமைக்க முடியாதுள்ளது. காணியை இராணுவத்திடம் இருந்து மீட்க வேண்டும்.- என்றார்.

இது தொடர்பில் இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியுதீன் நீர்ப் பாசனத் திணைக்களப் பொறியியலாளரிடம் வினவினார்.

கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. காணி இல்லாததால் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இராணுவத்திடம் உள்ள 25 ஏக்கர் காணியை மீட்டுத் தந்தால் விரைவில் கட்டடம் அமைக்க முடியும்.- என்று திணைக்களப் பொறியிலாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து எழுத்துமூலமான கோரிக்கையைச் சமர்ப்பியுங்கள் என்று அமைச்சர் ரிசாத், திணைக்களப் பொறியியலாளரிடம் கூறினார். (ற-21,102)

## மீள் சுழற்சி நிலையத்தை பார்வையிடும் மாணவர்கள்

யாழ்ப்பாணம், செப்.21

காக்கைதீவில் உள்ள மீள் சுழற்சி நிலையத்துக்குச் செல்லும் பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு இடம் பெறும் கள நிலமைகளை கல்வி நோக்கத்துக்காக அறிகின்றனர்.

மீள் சுழற்சி நிலையத்தில் திண்மக் கழிவுகளை பயன்படுத்தி இடம்பெற்றுவரும் சேதனப் பசளை தயாரிப்பில், பொலித்தீன் உட்பட உக்கும் உக்காத பொருள்களை தரம் பிரித்துச் செயற்படுத்தும், பயன்படுத்தும் நடைமுறைகள், செயற்பாடுகள் குறித்தான விரிவுரைகள் என்பன ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

மீள் சுழற்சி நிலையத்தில் இதற்கென அமைக்கப்பட்ட பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைக்கான ஆய்வுகளுக்கான செயற்பாடுகளைப் பெற்று வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் கூட தமது கல்வி நடவடிக்கைகளுக்காக இந்த மீள்சுழற்சி நிலையத்தைப் பார்வையிட்டு அங்கே இடம்பெறும் செயற்பாடுகளை அறிந்து கொள்ளமுடியும் என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (ற-17)

## திரவக் கழிவகற்றல் மீள வலி. கிழக்கில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.21

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் திரவக் கழிவுகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பழுதடைந்து காணப்பட்ட திரவக் கழிவ கற்றும் வாகனம் திருத்தப் பட்டு கடந்த வாரம் முதல் சேவைக்கு விடப் பட்டுள்ளது.

திரவக்கழிவுகள் மற்றும் பொது இடங்களில் தேங்கும் திரவக் கழிவுகளை அகற்ற விரும்புவோர்சபையுடன் தொடர்பு கொண்டு அகற்ற முடியும் என்று வலி. கிழக்குப் பிரதேசசபையின் செயலாளர் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக திரவக்கழிவுகளை அகற்றும் பணிகளை சபை மேற்கொள்ளவில்லை. திரவக் கழிவகற்றும் வாகனம்பழுதடைந்ததால் பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.

வெளிஇடங்களில் இருந்து இந்தச் சேவைக்காக மக்கள்அதிகட்டணங்களைச் செலுத்தி தமது குடியிருப்புத் திரவக் கழிவுகளை அகற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## போதை விழிப்புணர்வு முன்னெடுத்த அரச நிறுவனங்கள் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

போதையற்ற நாடு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மக்களைச் சென்றடையக் கூடிய வாறு செயற்றிடங்களை முன்னெடுத்த அரச நிறுவனங்களின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

ஜனாதிபதி செயலக போதைப் பொருள் செயலகம் ஊடாக இந்த விவரம் நாடுமுழுவதும் திரட்டப்படவுள்ளது.

இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கும் விடுத்துள்ளார்.

போதைப் பொருள் அற்ற பிரதேசமூடாக போதையற்ற நாடாக இலங்கை விரைவில் கொண்டுவரப் படவுள்ளது. போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் இடர் குறித்த விழிப்புணர்வுகளை மேற்கொண்டு, அதன் செய்திகள் மக்களைச் சென்றடைய வேண்டும் எனும் தொனிப்பொருளில் கடந்த மாதம் முழுவதுமாக நாடகங்கள், பேச்சுக்கள், சுவரொட்டிகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வுக் கூட்டங்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு நிகழ்ச்சிகளை முன்னெடுத்த அரசநிறுவனங்களின் விவரங்களே திரட்டப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

## யாழ்.மாநகர சபையின் தீயணைப்புச் சேவையை பலப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.21

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் தீயணைப்புச் சேவையை சிறந்த தீயணைப்புச் சேவையாக மாற்றி அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நவீன ரக தீயணைப்பு வாகனம் ஒன்றைப் பெற்றுத் தரவேண்டும் என்று உலக வங்கியிடம் மாநகராட்சி மன்றம் கேட்டுள்ளது என்று மாநகரசபைத் தகவல்கள் தெரிவித்தன.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது:

தற்போது ஒரு தீயணை வாகனத்தைப் பயன்படுத்தியே தீயணைப்பு சேவை இடம்பெறுகின்றது. ஒரு தீயணைப்பு வாகனம் போதாமையால் ஏற்கனவே பழுதடைந்துள்ள தீயணைப்பு வாகனத்தை திருத்தியமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. தீயணைப்புப் படைக்கான ஆளணியை அதிகரித்தும் மேலும் தீயணைக்கும் வாகனங்களைப் பெற்றும் சிறப்பான தீயணைப்புச் சேவையை மேற்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இன்னும் 20 வருடங்கள் மகிந்த ஆட்சிக்கு வரவே முடியாது

## கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, செப் 21

இன்னும் 20 வருடங்களுக்கு மகிந்த ராஜபக்சவினால் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சி மாவட்ட சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம்திகதி மக்கள் ஆணையின் அடிப்படையிலே அரசியல் பயணம் தீர்மானிக்கப்பட்டது. அதேபோன்று 2020ஆம் ஆண்டு தேசிய தேர்தல்கள் இரண்டு இடம் பெற இருக்கின்றன. 2020ஆம் ஆண்டு அல்லாமல் மகிந்த ராஜபக்சவுக்கு ஒருபோதும் அதிகாரத்துக்கு வர முடியாது.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டிருந்த பயங்கரவாதப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஜாதிக ஹெல உறுமயதான் முன்னின்று செயற்பட்டது. மாவிலாறு அணையைத் திறந்து பயங்கரவாதத்தை விரட்டியடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். நாட்டில் தற்போது பயங்கரவாதம் தலை தூக்கி இருப்பதாகச் சிலர் தெரிவித்து வருகின்றனர்.

மகிந்த ராஜபக்சவின் தேர்தல் வாக்குறுதிப் பத்திரத்தில்கூட பயங்கரவாதத்தைத் தோற் கடிப்பதாகத் தெரிவித்திருக்க வில்லை. மாறாகப் பிரபாகரனைத் தோற் கடிப்பதாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது. சிலர் பாதைகளில் அமர்ந்திருந்து உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தாலும் பயங்கரவாதத்தை தோற்கடித்து அமைதியானதோர் நாடாக இந்த நாட்டை ஏற்படுத்தியது ஜாதிக ஹெல உறுமய வாகும்.

மேலும் சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்குவதாகத் தெரிவித்தனர். ஆனால் செய்யவில்லை. அதேபோன்று 2005 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ச நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமலாக்குவதாகத் தெரி வித்தார். ஆனால் அதிகாரத்துக்கு வந்ததும் குடும்பத்தாரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டார்.

தொலைக்காட்சி அலை வரிசைகளை ஆரம்பித்தார். அன் றும் அதிகார போதையிலேயே இருந்தார். இன்றும் அதிகார போதையிலேயே இருக்கின்றார். அதே போன்று தேர்தலில் ஒரு வாக்குக்காக 43ஆயிரம் ரூபா செலவழித்தார். ஆனால் அவருக்கு இந்த நாட்டின் அதிகாரத்தை மீண்டும் வழங்குவதற்கு மக்கள் விரும்பவில்லை.

தற்போது இந்த அரசு தகுதி, திறமையின் அடிப்படையிலேயே பதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. புதியதொரு பயணத்தை மேற்கொள்வதற்கு நாட்டு மக்கள் ஆரோக்கியமானவர்களாக இருக்கவேண்டும்.

நாட்டின் பிரதான இரண்டு கட்சிகளும் புகையிலை நிறுவனங்களின் தாளத்துக்கு ஆட முற்பட்டன. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிகரெட்டின் விலையை அதிகரிப்பதற்கான யோசனையை முன்வைத்தார் - என்றார். (த)

## தேசிய ஊடக மையத்தின் தலைவரானார் இம்தியாஸ்

கொழும்பு, செப் 21

தேசிய ஊடக மையத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பத்தரமுல்ல - விசும்பாயாவில் அமைந்துள்ள தேசிய ஊடக நிலையத்தின் காரியாலயத்தில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

அரசின் உத்தியோகபூர்வத் தகவல்களை வெளியிடவுள்ள இந்த நிலையத்தின் தலைவராக முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை நியமிக்க அண்மையில் அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

தேசிய ஊடக மையத்தின் தலைவராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்,

"இந்தப் புதிய நிறுவனத்திற்குத் தலைவராக என்னை நியமித்தமைக்கு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நன்றி கூறுகின்றேன். ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு, பிரதமரின் ஊடகப் பிரிவு மற்றும் அரச தகவல் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து, மக்களுடைய கருத்துக்களைப் பெறவும், அரசின் கொள்கை, வேலைத்திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தவும் இப்புதிய தேசிய ஊடக மையத்தின் ஊடாக மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன். தேசிய ஊடக நிலையம் இலங்கைக்குப் புதியவிடயமாக இருந்தாலும் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் இது போன்ற ஊடக நிலையங்கள் காணப்படுகின்றன. தொழில் வாண்மை ரீதியாக சர்வதேச தரத்தில் இதனைக் கொண்டுவர நாம் எதிர்பார்க்கின்றோம். இன்று புதிய யுகத்தின் ஆரம்பம் இந்த நாட்டில் உருவாகியுள்ளது. காலகாலமாகக் காணப்பட்ட வெறுப்பு அரசியல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாட்டின் பிரதான இரண்டு அரசியல் சக்திகளும் இணைந்துள்ளன. இன ரீதியான ஒற்றுமை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. அந்த ஒற்றுமை ஊடாக மக்கள் அபிலாசைகளை நிறைவேற்ற அரசொன்று உருவாகியுள்ளது. ஊடகங்களுக்கு சட்டதிட்டங்களை விதிக்க எம்மால் முடியாது. புதிய யுகமொன்றுக்காக, ஜனநாயக யுகமொன்றுக்காக நீதியின் ஆதிக்கம், மக்களுக்குப் பொறுப்புக் கூறும் சமூகமொன்றுக்காக ஜனாதிபதியும் பிரதமரும் இந்தப் பயணத்தைத் தொடர்ந்துள்ளனர். ஊடகங்களின் ஆதரவுடன் மக்கள் வேண்டியுள்ள அந்த வரத்தை நிறைவேற்ற இந்த நிறுவனம் செயற்படும்" - என்றார். (த)



## பூகோள முனைப்புக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மைத்திரி

கொழும்பு, செப். 21

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கிளின்டன் பூகோள முனைப்பு அமைப்பின் ஆண்டுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில், 12 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இத்தாலி, சுவீடன் பிரதமர்கள் மற்றும் ஜனாதிபதியும் இங்கு உரையாற்றினர். (த-5)

## சஜின் வாஸ் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, செப் 21

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன கொழும்பு கோட்டை நீதிவான் கியான் பிலப்பிட்டிய வினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதற்கமைய இரண்டரை லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும், 10 லட்சம் ரூபா பெறுமதியான நான்கு சரீரப் பிணைகளிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

மிஹின் லங்கா நிறுவனத்துக்கு 883 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக சஜின் வாஸ்குணவ ர்த்தனவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கு விசாரணைகளுக்காக அவர் நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் மன்றத்தில் முன்னிலையான போதே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (த)

## அரச எதிர்ப்பு முன்னணி உருவாகிறது விரைவில்

கூட்டு எதிர்க்கட்சியின் தலைமையில் அரச எதிர்ப்பு தேசிய முன்னணி விரைவில் உருவாக்கப்படும் என்று அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

பொதுவான திட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் முன்னிலையில் தேசிய முன்னணி தொடர்பில் அறிவிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தலைமையில் நேற்று முன் தினம் முக்கிய விவாதம் இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், புதிய கட்சி உரு வாக்கப்பட்டு வருவதாக மகிந்த ராஜ பக்ச அண்மையில் இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

மேலும், தன்னுடைய குழுவில் உள்ள உறுப்பினர்கள் தினமும் ஏதோ ஒரு வகையில் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

எனவே, தான் புதிய கட்சியை அமைக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தன்னுடைய பழிவாங்கும் இந்த எண்ணத்தை ஒரு போதும் நிறுத்த முடியாது என மகிந்த இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஜே.ஆரின் கருத்தாக்கங்களை பயன்படுத்தத் தவறிவிட்டோம்

### கூறுகிறார் பிரதமர் ரணில்

ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் பொருளாதாரக் கருத்தாக்கங்களைச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு இலங்கை தவறியுள்ளதாக பிர, தமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் 110 ஆவது ஜனன தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே பிரதமர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார். 2050 ஆம் ஆண்டளவில் உலக ளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 வீதத்தை ஆசிய நாடுகள் கொண்டிருக்கும் எனவும் அவர் கூறினார்.

ஜே.ஆர்.ஜயவர்த்தன சுதந்திர வர்த்தகவலயத்தை அறிமுகப்படுத்தியதாகக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, சோசலிசத்தை மாற்ற விரும்பவில்லை என அவர் தனக்குக் கூறியதாகவும் தெரிவித்தார். சீனப் புரட்சிகர அமைப்பும் ஜே.ஆர்.ஜயவர்தனவின் கருத்தாக்கத்தை ஏற்றுக்கொண்டதாகவும், இந்தியாவின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவும் அதே கருத்தாக்கத்தை பின்பற்றியதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஜே.ஆர்.ஜயவர்தனவின் பொருளாதாரக் கருத்தாக்கங்களைப் பயன்படுத்தி அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போதைய அரசு முயற்சிக்கும் எனவும் ரணில் கூறினார். (த)

## விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு, செப் 21

வான் ஒன்றில் மோட்டார் சைக்கிள் மற்றும் சிறிய ரக லொறி என்பன மோதி இடம்பெற்றுள்ள விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஆனமடுப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை ஆனமடு-சிலாபம் வீதியின் ஆண்டிகம சங்கட்டிக்குளம் பிரதேசத்தில் வைத்தே இந்த விபத்து இடம்பெற்றதுடன் இந்த விபத்தில் ஆனமடு தெபடவெவ பிரதேசத்தைச் சேர்ந்த சரத் (வயது -45) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளுக்கு விச ஊசி எதுவும் ஏற்றப்படவில்லை

## புனர்வாழ்வு ஆணையாளர் திட்டவட்டம்

கொழும்பு, செப் 21
முன்னாள் போராளிகளுக்கு விசஊசி எதுவும் ஏற்றப்படவில்லை என முன்னாள் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டபோது, புனர்வாழ்வு மையத்தின் பொறுப்பாளராகத்தான் பதவிவகித்ததாகவும், அவர்களுக்கு எந்தவிதமான விசஊசியும் ஏற்றப்படவில்லை என்பதை உறுதியாகக் கூறுவதாகவும் சுசந்த ரணசிங்க குறிப்பிட்டார். திருகோணமலை திரியாய அரிசிமலையில், முப்படைகளின் கூட்டுப் பயிற்சியான நீர்க் காகம் பயிற்சி நேற்றுக் காலை இடம்பெற்ற போது, இந்த நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

தனது கண்காணிப்பின் கீழே முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர், அவ்வாறு விசஊசி ஏற்றப்பட்டிருப்பின், அவர்களைப் பரிசோதனை செய்து பார்க்குமாறும் வலியுறுத்தினார்.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கு சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்தே புனர்வாழ்வு வழங்கியதாகவும், அவர்களுக்கு விச ஊசியோ அல்லது எந்தவிதமான சிகிச்சையோ வழங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற முப்படைகளின் பயிற்சி நடவடிக்கையின் போது, முப்படைகளின் தளபதிகள் மற்றும் சீனா, ஜப்பான், சூடான், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (தி)

## இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு பிணை

கொழும்பு, செப். 21
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில், கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நால்வர் பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவிசாவளை மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

6 ஆம், 7 ஆம், 8 ஆம் மற்றும் 9 ஆம் சந்தேக நபர்களான இரண்டு லெப்டினன்ட்கள், ஒரு கோப்ரல், ஒரு சார்ஜன்ட் தர அதிகாரிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

5 இலட்சம் ரூபா காசுப் பிணையிலும், 3 மில்லியன் ரூபாவுக்கான இருவரின் பிணை உறுதியின் அடிப்படையிலும் விடுவித்த நீதிமன்றம், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகவேண்டும் என்றும் சந்தேக நபர்களுக்கு உத்தரவிட்டுள்ளது. (த-5)

## பல்கலைக்கழக அனுமதி 10 சதவீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, செப் 21
கடந்த ஆண்டைவிட இம்முறை பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பிரகாரம், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி வெளியாகியுள்ள நிலையில், 27,603 மாணவர்கள், இவ்வருடம், பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (தி)

## இராணுவத்தினர் மனவேதனையில்; கூறுகிறார் கமால்

கொழும்பு, செப். 21
இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மனவேதனையில் உள்ளதாக ஓய்வு பெற்ற இராணுவ மேஜர்ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்கள் சிலர் நடத்தப்பட்ட விதம் ஒட்டுமொத்த புலனாய்வுப் பிரிவினரையும் நம்பிக்கை இழக்கச் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் தொலைகாட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்ணாட்டின் மிகப்பிரபல்யமான புலனாய்வுப் பிரிவினரை விடவும் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சிறந்த சாதனைகளை செய்துள்ளனர். மீளவும் கிளர்ச்சிகள் வெடிப்பதனை தடுத்து நிறுத்த புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்பு அவசியமானது.

புதிய அரசு புலனாய்வுப் பிரிவின் சில உறுப்பினர்களை விசாரணை என்றபெயரில் கைது செய்து நடத்திய விதம் ஒட்டுமொத்த புலனாய்வுப் பிரிவினரையும் நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது. என்றார். (4)



# அணையாத தியாகச் சுடரின் உரிமை ஒளிர்(மொழி)தல்

ந.லோகதயாளன்

உயிரின் தியாக வலிமையோடு ஒன்றுகூடிய திலீபனின் போராட்டப் பயணம் அங்கலாய்ப்பின்றி நகர்ந்துகொண்டிருந்தது.

அவனது இலட்சிய நகர்வையும் அதற்கு உறுதுணையான மக்களின் ஒன்றுதிரள்வையும் வாக்குறுதிகளின் ஒப்பாசாரம் கொண்டு தடுத்திட நினைத்த இந்திய அரசின் இறுதி முயற்சியும் பொய்த்துப்போனது. போராட்டத்தின் 9 ஆவது நாள் நகர்வுகள் கடந்து அன்றைய இருள் கவிந்த பொழுதுகளில் திலீபனின் உடல்நிலமைகளில் அதிக மாற்றம் தென்படுகிறது. ஆகாரம் ஏதுமின்றியவனாய் இளைத்துப்போயிருந்தான். உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றாக செயல் இழக்கின்றன.

இந்தநிலையிலே திலீபன் எப்போதும் உரைக்கின்ற மக்கள் புரட்சி வெடிக்கின்றது. நம்பிக்கையின் ஆயுதம் கொண்டு மன உறுதியின் செயல் வலுவோடு மக்கள் புறப்பட்டனர். நயவ வஞ்சக இந்திய அரசுப் படைகளின் முகாம்களை முற்றுகையிடுகின்றனர். தமது அத்தியாவசியப் பணிகள் - வெளித் தொடர்புகளுக்காக இந்தியப் படையினர் வெளியே வர முயற்சிக்கின்றனர். மக்கள் அதனை அனுமதிக்கவில்லை. இராணுவ முகாம்களைச் சூழ இரவு பகலாக முற்றுகைப் போரை மேற்கொள்கின்றனர்.

இதற்கு சமாந்தரமாக திலீபனின் கோரிக்கைகளை ஏற்குமாறு சகல மாவட்டங்களிலுமுள்ள இந்திய இராணுவ முகாம் அதிகாரிகளிடம் மக்கள் அமைப்பாக ஒன்றித்து மனுக்களையும் கையளித்தனர். மக்கள் சக்தியாக ஒன்றித்த இந்த முற்றுகைப் போரின் உச்ச நிலை மக்களுக்கு எதிரான இராணுவ வன்முறையாக மாற்றங் கொண்டது. மன்னாரில் உள்ள இந்தியப் படை முகாமின் முன்பாக இருந்த மக்கள் கூட்டத்தை அங்கிருந்த இந்தியச் சிப்பாயின் எஸ்.எல்.ஆர்.சி. ரக இயந்திரத் துப்பாக்கியின் ரவைகள் பதம் பார்க்கின்றன.

சம்பவ இடத்திலே ஒருவர் உயிரிழக்க 17 பேர் படுகாயமடைந்தனர். மக்கள் அவலக் குரல் எழுப்புகின்றனர். கோபம் கொண்டவர்களாக தமிழீழ விடுதலைப் புலிகளையும் திட்ட முனைகின்றனர். அவன் சுடுகிறான் நீங்கள் என்ன பேசுகின்றீர்கள். இவனை நம்பியா உயிரிலும் மேலாக மதித்த ஆயுதங்களை ஒப்படைத்தீர்கள். சுட்டவனை திருப்பிச் சுடுங்கள் என்று அங்கு நின்ற போராளிகளையும், தளபதிகளையும் கோருகின்றனர். புலிகள் பொறுமை காத்தனர்.

இந்தக் கலவரங்களிடை வடமராட்சிப் பகுதியில் திலீபனுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அணியினரை தலைவர் பிரபாகரன் திடீரெனச் சென்று சந்திக்கின்றார், இந்தக் கலவரங்களின் தொடர்புறலாக

சிங்கள காடையரும் மக்களுக்கு எதிராக தமது அதிகாரச் சீண்டலை மேற்கொள்கின்றனர். திருகோணமலையில் காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற தமிழர்கள் ஏழு பேரை வெட்டிப் படுகொலை செய்கின்றனர். இந்தச் செய்தி மறுநாள் பத்திரிகைகளில் முக்கிய இடத்தினைப் பிடித்துக் கொண்டது. அமைதி எங்கும் தென்படவில்லை. பதினோராவது நாளின் புலர்தல் தமிழர் தாயகத்திடை சோகத்தின் மேக மூட்டங்களை எங்குமாய் பரப்பிவிட்டிருந்தது. திலீபனின் தியாகம் உயிர் உருகுதலாகி இறுதிக் கணங்களைத் தொட்டு நின்றது. அவனது சாவு நிச்சயிக்கப்படுகின்றது. அகிம்சை நாடு என உலகுக்கே தங்களைப் பறைசாற்றிய இந்தியாவை நம்பியது தவறு என்பதனை மக்கள் உள்ளார உணர்கின்றனர்.

உண்மையான அன்பும், பண்பும், கருணை உள்ளமும் கொண்டவர்களே அகிம்சையை மதிப்பவர்கள். தமது சுயலாபத்திற்காக செயலாற்றுபவர்கள், அதனை மதிக்கத் தெரியாதவர்கள் என்பதனை புரிந்துகொண்டனர். திலீபனின் ஆன்மா தியாகச் சுடராக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அணையவில்லை. பன்னிரண்டாவது நாளின் திருமுகம் காண தன் தலைகளைச் சாய்த்துக்கொண்டது. தேச விடியலுக்காய் தென்றலாய் அங்கும் இங்குமாய் அசைந்து ஊசலாடிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீரியபெத்த மக்களுக்கு அடுத்த மாதம் வீடுகள்

கொழும்பு, செப். 21
பதுளை கொஸ்லந்தை மீரியபெத்த மண்சரிவினால் வீடுகளை இழந்த மக்களுக்கு அடுத்த மாதம் 22 ஆம் திகதி வீடுகள் வழங்கப்படும் என்று இடர்முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

மண்சரிவினால் சேதமடைந்த அனைத்து வீடுகளும் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா சுட்டிக்காட்டியுள்ளார்.

வீடுகளுக்கான மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் அடுத்த வாரத்துக்குள் நிறைவு செய்யப்படும். புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளின் நிலமைகளைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போது அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

20 மாதங்களுக்கும் அதிக காலம் நிரந்தரக் குடியிருப்பு வசதிகள் கிடைக்காத நிலையில், அந்த பகுதியிலுள்ள தேயிலைத் தொழிற்சாலையொன்றில் 75 இற்கும் அதிகமான குடும்பங்கள் தங்கியுள்ளன.

2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி மீரியபெத்த பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 35 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததும் காணாமற்போயிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி :·uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ்க் கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதால் யாருக்கு லாபம் அதிகம்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் தனித் தலைமையாக இன்று எழுந்து நிற்கிறது. அதன் மூலமே தமிழ் மக்களின் பிரதிநிதியாக உலக அரங்கில் தமிழ் மக்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய அதனால் முடிகிறது. ஐக்கிய நாடுகள் சபை முதல் கொழும்பு வரையில் கூட்டமைப்பை தமிழ் மக்களின் தனிப் பிரதிநிதிகளாக அங்கீகரித்துள்ளன. இந்த நிலையில் கூட்டமைப்பை பலவீனப் படுத்துவதால் யாருக்கு அதிக இலாபம்?

வரலாற்றில் இருந்து கற்றுக்கொள்ளும் பாடமே இந்தக் கேள்விக்கான விடை.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் தனியொரு பிரதிநிதியாக இருந்தது. உலகத்துக்கு குறிப்பாக புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இது ஏற்புடையதாக இல்லாதபோதும் உண்மை அதுவாகவே இருந்தது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக வேறு எந்தவொரு தரப்பையும் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாத நிலமை அப்போது இருந்தது.

உலக ஒழுங்கின் அதிகாரம் ஆசியாவை நோக்கி நகர்ந்துவிடக்கூடிய அபாயம் மேற்கு நாடுகளால் உணரப்படும் இன்றைய காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் இலங்கையின் வகிபாகம் அதில் மிக முக்கியமானது. தமிழ் மக்களின் தனிப் பிரதிநிதியாகப் புலிகள் இருந்த நிலையில் மேற்குக்கும் இந்தியாவுக்கும் தேவையான போக்கில் இலங்கையைக் கையாள்வது கடினமாக இருந்தது. ஏனெனில் மேற்கைப் பொறுத்தவரையில் புலிகள் கையாள்வதற்குக் கடினமானவர்கள்.

அப்படி, புலிகள் ஆசியாவின் தீர்மானகரமான சக்தியாக இருந்ததற்கு அவர்கள் தமிழ் மக்களின் தனிப் பிரதிநிதிகளாக இருந்த பலமே காரணம்.

இந்த நிலை வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்தபோது பல ஆயுத இயக்கங்களை உருவாக்கி அவற்றுக்குப் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் கொடுத்தது இந்தியா. பல தரப்புகள் இருக்கும்போது அவற்றைக் கையாள்வது இந்தியா, அமெரிக்கா போன்ற ஆதிக்க சக்திகளுக்கு இலகுவானது என்ற உள் நோக்கமே அதற்குக் காரணம்.

அந்த வியூகங்களைத் தகர்த்துத் தம்மைத் தமிழ் மக்களின் தனிப் பிரதிநிதிகளாகப் புலிகள் நிலை நிறுத்திக் கொண்டபோது, அதனைப் பயங்கரவாத இயக்கமாகவும் மனிதாபிமானம் அற்ற கொடூரமான அமைப்பாகவும் சித்திரித்து இந்தியா, அமெரிக்க உள்ளிட்ட ஆதிக்க சக்திகள் அனைத்தும் இணைந்து தோற்கடித்தன. இதே காரணத்துக்காகத்தான் சீனாவும் கொழும்புடன் இணைந்து புலிகளைக் களத்தில் இருந்து அகற்றின.

புலிகளுக்குப் பின்னரும் தமிழ்த் தலைமை பல தரப்புகளிடமும் பகிர்ந்துகொள்ளப்படாமல் கூட்டமைப்பு என்கிற ஒரே தலைமையிடம் இருப்பது இந்தச் சக்திகளுக்கு இடைஞ்சலாகவே இருக்கிறது. எனவேதான் அவற்றுக்கு கூட்டமைப்புக்கு மாற்றுத் தலைமை ஒன்று தேவைப்படுகிறது.

தமிழ்ச் சமூகம் ஒற்றுமைப்பட்டிருப்பதைவிட சிதைந்து கிடப்பதே இந்தச் சக்திகள் தங்கள் நலன்களை இலங்கையில் நிறைவேற்றிக்கொள்ள இலகுவானதாக இருக்கும்.

இந்த ஆதிக்க சக்திகளின் தேவைக்கு ஆதரவளிப்பதா அல்லது ஒற்றுமையாக கூட்டமைப்போடு நின்று வாய்ப்புகளை முடிந்தவரை பயன்படுத்தி தீர்வைப் பெறுவதா புத்திசாலித்தனம் என்பதைத் தமிழ் மக்கள்தான் முடிவுசெய்யவேண்டும்.

# காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கான மூன்று முக்கிய காரணிகள்

## அரசியலில் குதித்துள்ள இலங்கைத் தலைவர்களின் வாரிசுகள்

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

இனி வரப்போகும் உலகப் போரானது தண்ணீரை மையமாகக் கொண்டதாகவே இருக்கும் என்ற எதிர்வு கூறலானது, மிகைப்படுத்திக்கூறும் கருத்து என்பதைப் பொய்ப்பிக்கும் வகையில் அமைந்துவிடும் போலிருக்கிறது. இந்தியாவில் இப்போது காவிரி ஆற்றின் தண்ணீருக்காக இரண்டு மாநிலங்களில் மக்கள் போர்க் கொடி உயர்த்தி நிற்கிறார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையானது,

> காவிரி நதிநீர் விசாரணைக் குழுவினர், தங்கள் ஆலோசனைகளில் அதிக தண்ணீர் தேவைப்படுவதான பயிர்களைக் குறிப்பாக, மழை அதிகம் பெய்யாத காலங்களில் பயிர் செய்வதை நிறுத்தும்படி குறிப்பிட்டிருந்தனர்.

இன்றோ நேற்றோ ஏற்பட்டதன்று. பிரிட்டிஷ் ராஜதானியாக மதராஸ் நகரமும், மைசூர் நகரமும் மன்னர் ஆட்சியில் இருந்த 19ஆம் நூற்றாண்டில் இந்தப் பிரச்சினை முளைவிட ஆரம்பித்தது. தமிழ் நாடு, கர்நாடகா ஆகிய இருமாநிலங்களுக்குமிடையில் பிரதான பிரச்சினையாக தொடர்ந்துவரும் இந்தத் தகராறில், ஓரளவுக்கு கேரளாவும் புதுச்சேரியும் கூடச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நதிநீர் பங்கீட்டு உரிமைகளை நிர்ணயிப்பதானது, சில அடிப்படைக் கொள்கைகளின் மீது ஏற்படும் சம்மதத்தில் மட்டுமிருக்க மாட்டாது. இன்னும் அதிக அடிப் படைத் தீர்வுகள் அதற்குத் தேவைப்படுகின்றன. காவிரித் தண்ணீர்ப் பிரச்சினை பூதாகரமாக வெடித்தமைக்கு, அதிலிருந்து பெறப்படும் தண்ணீரின் அளவு அதிகமாகத் தேவைப்படுவதே காரணமாக அமைந்தது. இவ்வாறு தண்ணீர்த் தேவை அளவு அதிகரித்தமைக்குப் பிரதானமாக மூன்று காரணிகள் அமைந்துள்ளன.

முதலாவது, பெங்களூர், மைசூர் போன்ற நகரங்கள் விரிவாக்கப்பட்டமை. இரண்டாவது, ஏனைய தண்ணீர் மூலவளங்கள், நிலத்தடி நீர் போன்றவை வற்றிப் போனமை. இந்த நீர் நிலைகள் அதிகப்படியாக பயன்படுத்தப்பட்டமை மற்றும் அவை பாவனைக்கு உதவாத வகையில் அசுத்தமாகிப்போனமை. மூன்றாவது காரணி, வருடக்கணக்கில் அதிக நதிநீர் தேவைப்படாத பயிர்கள், அளவுக்கு அதிகமாக நீர் பாய்ச்சப்பட்டமை என்பனவாம்.

காவிரி நதிநீர் விசாரணைக் குழுவினர், தங்கள் ஆலோசனைகளில் அதிக தண்ணீர் தேவைப்படுவதான பயிர்களைக் குறிப்பாக, மழை அதிகம் பெய்யாத காலங்களில் பயிர் செய்வதை நிறுத்தும்படி குறிப்பிட்டிருந்தனர்.

✦ ✦ ✦

### இலங்கைத் தலைவர்களின் வாரிசுகளின் அரசியல் பிரவேசம்

அரசியலையே தமது பரம்பரைத் தொழிலாகக் கொண்டுள்ள பல குடும்பங்கள் எமது நாட்டில் காணப்படுகின்றன. அவ்வாறான ஒன்றுதான் மகிந்த ராஜபக்ச குடும்பம். மகிந்த ராஜபக்சவின் தந்தையார் ஒரு கௌரவமிக்க அரசியல்வாதியாகத் திகழ்ந்தவர். அவரைப் பின்பற்றி மூத்தவர் சமல் ராஜபக்சவும் அரசியலுக்கு வந்தார். அவரைப் பின்பற்றி அரசியலுக்குள் புகுந்து பல நிலைகளில் கலக்கியவர் மகிந்த ராஜபக்ச.

சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக அரசியலுக்குள் புகுந்த அவர், அமைச்சர், பிரதமர் பின்னர் ஜனாதிபதியாகவும் இரண்டு தடவைகள் கொடிகட்டிப் பறந்தவர். பொதுவில் அரசியலில் எவருக்கும் அதிர்ஷ்டம் நெடுநாள் நீடிப்பதில்லை. மூன்றாவது தடவையும் ஜனாதிபதி ஆசனத்தில் அமர்வதற்கு ஆசைப்பட்ட அவரால், அதனை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் சளைத்துப் போகாமல் அடுத்துவந்த பொதுத் தேர்தலில் பிரதம மந்திரிப் பதவிக்குப் போட்டியிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியுடன் திருப்தியடைய நேர்ந்தது. இருந்தாலும் பதவி ஆசைபோகவில்லை. புதிய கட்சியொன்றை ஆரம்பித்து, அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்கான முயற்சியில் தற்போது இறங்கியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் இன்னொரு தம்பியான பசில் ராஜபக்ச, அண்ணனின் தயவில் வெற்றிபெற்று அதிகார பலமுள்ள அமைச்சர் பதவியொன்றில் அமர்ந்திருந்தார். அந்தக்காலத்தில் வாழ்வெழுச்சி (திவிநெகும) போன்ற நிறுவனங்களில் ஏற்பட்ட நிதி மோசடிகளில் சிக்கிய அவர், இப்பொழுது சில வழக்குகளை எதிர்நோக்கியுள்ளார். இருதடவைகள் கைது செய்யப்பட்டுக் காவலில் இருந்துள்ள அவர், பிணையில் வெளிவந்து இருக்கின்றார்.

ராஜபக்சவின் இன்னுமொரு தம்பிதான் கோத்தபாய ராஜபக்ச. இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றதன் பின்னர், அமெரிக்கா சென்று அங்கு நிரந்தரமாகத் தங்கியிருந்த அவரை, அண்ணனாகிய மகிந்த ராஜபக்ச இங்கு அழைத்து மிக முக்கியமான பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அவரை நியமித்திருந்தார்.

இவர்காலத்திலேயே நாட்டில் குறிப்பாக வடக்கு-கிழக்கில் இராணுவத்தினரது கெடுபிடிகள் மும்முரமடைந்திருந்தன. போர் உக்கிரமடைந்து, விடுதலைப்புலிகள் நசுக்கப்பட்டதும், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதும் கூட இவர் பதவிவகித்த காலத்திலேயே. அவன்காட் மெரிரைம் மிதக்கும் ஆயுதக் கிடங்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**காவிரி நீர்ப் பிரச்சினையானது, இன்றோ நேற்றோ ஏற்பட்டதன்று. பிரிட்டிஷ் ராஜதானியாக மதராஸ் நகரமும், மைசூர் நகரமும் மன்னர் ஆட்சியில் இருந்த 19ஆம் நூற்றாண்டில் இந்தப் பிரச்சினை முளைவிட ஆரம்பித்தது. தமிழ் நாடு, கர்நாடகா ஆகிய இருமாநிலங்களுக்குமிடையில் பிரதான பிரச்சினையாக தொடர்ந்து வரும் இந்தத் தகராறில், ஓரளவுக்கு கேரளாவும் புதுச்சேரியும் கூடச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நதிநீர் பங்கீட்டு உரிமைகளை நிர்ணயிப்பதானது, சில அடிப்படைக் கொள்கைகளின் மீது ஏற்படும் சம்மதத்தில் மட்டுமிருக்கமாட்டாது. இன்னும் அதிக அடிப்படைத் தீர்வுகள் அதற்குத் தேவைப்படுகின்றன.**

நிறுவனம் தொடர்பான நிதிமோசடி வழக்கில், இவர் நிதிமோசடி விசாரணைப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் மீதும் வழக்குத் தொடரப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது.

ராஜபக்ச குடும்பத்தின் அடுத்த பரம்பரையான மகிந்தவின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ச, தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ளமை ஒரு புறமிருக்க, நிதிமோசடி தொடர்பான வழக்குகளில் அவரும் சிக்கியுள்ளார். தடுப்புக்காவல்களிலும் வைக்கப்பட்டிருந்தார். அவரது தம்பியான யோசித மீதும் நிதிமோசடி வழக்குப் பதிவாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் புதல்வர் ரவி ஜெயவர்த்தன அரசியலுக்குவரும் நோக்கம் கொண்டவராகக் காணப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரோமதாசவின் புதல்வர் சஜித் பிரேமதாச தந்தைக்குப் பின் அரசியலில் இறங்கி ஐ.தே.கவின் தலைவர்களில் ஒருவராக மட்டுமல்லாது, மூத்த அமைச்சர்களில் ஒருவராகவும் இருந்து வருகிறார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இரண்டு முன்னாள் பிரதமர்களின் புதல்வியாவார். இவரது சகோதரர் அனுரா பண்டாரநாயக்க அரசியலில் ஈடுபட்டு இருந்ததுடன், நாடாளுமன்ற சபாநாயகராகவும் பணியாற்றியிருந்தார்.

சந்திரிகாவின் புதல்வர் விமுக்தி அரசியலில் அக்கறை கொண்டவராகக் காணப்படவில்லை. தனது தந்தையாரான திரைப்பட நடிகர் குமாரதுங்க துப்பாக்கிக் குண்டுக்கு இரையானதும் தாயார் சந்திரிகா குண்டடிபட்டு ஒரு கண்பார்வையை இழந்ததும், இவருக்கு அரசியலில் அக்கறையின்மையை ஏற்படுத்தியிருக்கலாம். அவர் விலங்கு வைத்திய நிபுணராக இருப்பதில் திருப்தி கொள்கிறார் எனத் தெரிகின்றது.

இப்போதைய ஜனாதிபதியின் புதல்வர் கடந்த வருடம் தந்தையாருடன் ஐ.நா.கூட்டத்தொடருக்குச் சென்றமை பற்றிய செய்திகள் வந்திருந்தன. இப்போது அவர் பற்றிய தகவல் எதுவும் கிடையாது. ஆனால் ஜனாதிபதியின் புதல்வி அரசியலில் அக்கறை கொண்டு பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார் என்ற செய்திகள் வந்திருந்தன.

### அரசியலில் குதிக்கக் காத்திருக்கிறார்

இப்பொழுது முன்னாள் ஜனாதிபதியான டி.பி.விஜயதுங்கவின் மகள் சித்ராணி எதிர்வரும் தேர்தல்களில் களம் இறங்குவதற்கு தயாராய் இருக்கிறார் எனக் கூறப்படுகின்றது. அதற்கான அழைப்பைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். பிலிமத்தலாவை என்ற இடத்தில் உள்ள அவரது தந்தை டி.பி.விஜயதுங்கவின் சிலையருகில் இடம்பெற்ற குருதித்தான நிகழ்வில் பேசியபோது, தாம் முறையாக அழைக்கப்பட்டால் தீவிர அரசியலில் இறங்கத் தயாராய் இருப்பதாகக் கூறினார். ஆனால், எந்தத் தரப்பிடமிருந்து அழைப்பு வரவேண்டும் என்பதை அவர் கூறவில்லை.

இருந்தாலும் ஓர் அரசியல்வாதியாக இருப்பதற்குத் தமக்குப் போதிய தகுதி இருக் கிறதா என்பதில் சந்தேகம் இருப்பதாகவும் தெரிவித்தார். இருந்தாலும் பொதுச் சேவையில் ஈடுபடும் தகுதி தமக்கு இருக்கிறது–என்றார். "என்னிடம் பொய் சொல்லும் பழக்க மில்லை. அவதூறான சொற்களை நான் பயன்படுத்து வதில்லை. பொதுமக்களை ஏமாற்றுவதில்லை. பொதுச் சொத்தைச் சூறையாடுவதில்லை. வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் அளவில் பணம் செலவு செய்யவும் போவதில்லை. முழுக் கண்டி மாவட்டத்துக்கும் தேவையான நல்ல அரசியல் திட்டமொன்றை என்னால் முன்வைக்க முடியும்" - என்றார்.

என்னதான் சொன்னாலும் அரசியலில் இறங்கும் அனேகர் இவ்வாறான வாக்குறுதிகளையும் சத்தியப் பிரமாணங்களையும் செய்து கொண்டுதான் முதலில் கால் வைக்கிறார்கள். ஆனால் அவர்களால் அதனைத் தொடர்ந்து கைக்கொள்ள முடிவதில்லை என்பது அனுபவ உண்மை.

## பாடசாலைக்கான கதிரை விநியோகத்தில் முறைகேடு

யா/வீமன்காமம் மகாவித்தியாலய அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க வித்தியாலயப் பழைய மாணவனும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை.சோ.சேனாதிராசாவால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு–செலவுத்திட்ட நிதியில் பிரார்த்தனை மண்டபத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகள் வாங்கவென இரண்டு லட்சம் ரூபா(200 000) ஒதுக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஒன்று கூடி தரமான பொருள்களுக்கு கூறுவிலைகோரி வர்த்தக நிலையமொன்றைத் தெரிவு செய்து பொருள்களை வாங்கி, பற்றுச்சீட்டை வழங்கினால் பிரதேச செயலகத்தினர் காசோலையை வழங்கும் வழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. இதனால் பாடசாலைக்குத் தரமான பொருள்கள் கிடைக்க வழி ஏற்பட்டது.

ஆனால் இந்த முறை பிரதேச செயலகத்தினர் தமது தற்றுணிபின்படி கதிரைகளை வாங்கி பிரதேச செயலகத்தில் வைத்து, சம்பிரதாயபூர்வமாக அதிபரிடம் கையளித்துள்ளனர். யாழ்.நகரில் உள்ள பல கடைகளில் முதுகுத்தட்டில் பின்னல் வடிவக்கதிரை (Nippon வகை) ஒன்றின் விலை 1,200ரூபா. சாதாரண மண்டபக் (Nippon வகை) கதிரை ஒன்றின் விலை 700 ரூபா ஆகும். எனவே (50Nippon) முதுகுத் தட்டுப்பின்னல் கதிரைகளின் விலை 60 ஆயிரம் ரூபாவும், 152 சிறிய கதிரைகளின் விலை ரூபா 106 400உம் ஆகும். இதன்படி மொத்தச் செலவு ரூபா 166 400 மட்டுமேயாகும். மீதி 33 600 ரூபா பணமும் எங்கே? கதிரைகளை மொத்தமாக வாங்கும்போது குறித்தவிலைகளை விடக் குறைவாக வாங்க வாய்ப்புக்கள் உள்ளதென்பது வெளிப்படை.

அத்துடன் (Nippon) கதிரைகளுக்கு எந்த உத்தரவாதமும் (Warranty) கிடையாது. வேறு ரக தரமான கதிரைகளுக்கு 2 வருட உத்தரவாதம் உண்டு. தரமற்ற கதிரைகளை வாங்கி வழங்கியது மட்டுமன்றி, பணத்தையும் பகற் கொள் ளையடித்தவர் யார்? இது குறித்து யாழ். மாவட்டச் செயலர் விசாரணை மேற்கொண்டு உண்மையைப் பகிரங்கப் படுத்துவாரா?

மாவை.நக்கீரன்.

## தோல்வி கண்டுவரும் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டுக் கோட்பாடு

திராவிட நாடு என அன்று அண்ணா அறைகூவ, நேருவின் எச்சரிக்கையால் அந்தக் கோரிக்கை அது கைவிடப்பட்டது.

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்பவை திராவிட மொழிகள். மொழி வழி மாநிலங்களாக இன்று இந்திய ஒருமைப்பாட்டில் மாநில நிர்வாக ஆட்சி. மேடு பள்ளம், வறட்சி தன்மை இவையெல்லாம் இயற்கையின் நியதி. ஏற்றபடி பகிர்ந்து வாழ்வதே மனித நேயம்.

இதை விடுத்து, எனது உனது என்று இறுமாப்புக் கொள்வதில் பயன்தான் என்ன? இன்று திராவிடத்தில் நடைபெறும் பெருநதி நீர்ப் பங்கீடு, சிக்கலுக்குள்ளாகி கலவரங்கள். திராவிடத்தின் மிகப் பெரிய அவலம், தலைதூக்கும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் நிரந்தரத் தீர்வுகள் காணாமல் இழுத்தடிப்பதே. இதனால் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொதுமக்களே. நேர்மை வழுவாது, சபலங்களுக்கும், சலனங்களுக்கும் சிறிதும் ஆட்படாது அறஞ்சார்ந்து செயற்படின் யாவும் சுமுகமே.

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா
ஆத்தியடி
புலோலி.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுறுப்புக்களை திருடுகிறது ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பு



பக்தாத், செப்.21
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது வருமானத்துக்காக, காயமடைந்தவர்கள், உயிரிழந்தவர்கள் போன்றோரின் உடலுறுப்புக்களைத் திருடுவதாக தெரிவிக்கப்படுகிறது.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக பிரகடனம் செய்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. உலகத்துக்கே எதிரியாக அந்த அமைப்பு விளங்குவதால் உலக நாடுகள் பலவும் குறித்த அமைப்புக்கு எதிராக தாக்கு தல்களை நடத்துகின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிரதான வருமானமான எண் ணெய் ஏற்றுமதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் முடக்கப்பட்டது. இதனால் அந்த அமைப்புக்குப் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. இந்த வீழ்ச்சியைச் சரிசெய்வதற்காகவே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மனித உடல்களில் இருந்து உறுப்புக்களைத் திருடி கறுப்புச் சந்தையில் விற்பதாகச் சொல்லப்படுகிறது. ஈராக்கில் அமெரிக்கக் கூட்டுப்படை மேற்கொண்ட தாக்கு தலில் சாவடைந்த 23 பேரின் உடல்களிலிருந்து சிறுநீரகங் கள் திருடப்பட்டதன் மூலம் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் இந்த நடவடிக்கை அம்பலமானது. (ம-ரி4)



## 200 கிலோ மீற்றர் வேகத்தில் தெற்கு ஜப்பானில் சூறாவளி

டோக்கியோ, செப். 21
ஜப்பானின் தென்பகுதியை நேற்று புயலொன்று தாக்கி பெரும் சேதங்களை ஏற்படுத்தியது. மலாக்காஸ் என்று பெயரிடப்பட்ட குறித்த புயல் சற்று வீரியம் தணிந்து டோக்கியோவை இன்று அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானின் தென்பகுதியில் உள்ள மாகாணங்களை மணிக்கு 200 கிலோமீற்றர் வேகத்தில் மலாக்காஸ் சுழற்றியது. குமாமாட்டோ உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் வசிக்கும் கிட்டத்தட்ட ஆறு லட்சம் மக்கள் தங்களது வசிப்பிடங்களைவிட்டு ஏற்கனவே வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்கவைக்கப்பட்டதால் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. பெருமளவு பொருள்சேதங்கள் ஏற்பட்டன. தொடர்ந்து பெய்த மழையால் பல பகுதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. வீடுகள் தண்ணீருக்குள் மூழ்கின. விமானச் சேவைகள் பாதிக்கப்பட்டன. கடற்றொழில்கள் நிறுத்தப்பட்டன. இன்றும் மழை தொடரும் எனவும் அதன் விளைவாக நிலச்சரிவு ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (ம-ரி4)

## தென்சீனக் கடல் விவகாரத்தில் ஜப்பான் மீது சீனா முறைப்பாடு

தென்சீனக் கடல் பகுதியில் நிலவும் அமைதியான சூழ்நிலையைக் குழப்ப ஜப்பான் முயற்சிகள் மேற்கொள்வதாக சீனா குற்றம் சுமத்தியது.
தென்சீனக் கடலின் மீது சீனா தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தங்களுக்கும் உரிமை உண்டு என்று ஜப்பான், பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருணை, தைவான் ஆகிய நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன.
சமீபகாலமாக ஜப்பான் தென் சீனக் கடலில் தனது செயல்பாடுகளை அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்காவுடன் இணைந்து ரோந்துப்பயிற்சியில் ஈடுபடப்போவதாக அந்த நாடு அண்மையில் அறிவித்தது. ஜப்பானின் இந்த முடிவு சீனாவுக்கு பெரும் தலையிடியாக அமைந்தது. இந்த நிலையிலேயே குறித்த கடல் பரப்பில் நிலவும் அமைதியான சூழ்நிலையைக் குழப்ப ஜப்பான் முயற்சி மேற்கொள்வதாக சீனா குற்றம் சுமத்தியது. (ம-ரி4)




ரஷ்யாவில் வருடாவருடம் நடைபெறும் நுளம்புத் திருவிழா அண்மையில் நடைபெற்றது. நுளம்பைப் போன்று வேடமிட்ட பலர் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். (ம-ரி4)



இந்தியா

## பிளாஸ்டிக் கோப்பைகளில் பிரமிட் அமைத்து சாதனை

புதுடில்லி, செப்.21
பிளாஸ்டிக் கோப்பைகளால் பிரமிட் செய்து இந்திய இளைஞர் ஒருவர் கின்னஸ் சாதனையில் இடம்பிடித்தார்.
தயால் என்ற நபரே அவ்வாறு உலகசாதனை படைத்தவராவார். இந்த பிரமிட்டை அமைக்க அவர் 57 ஆயிரம் கோப்பைகளைப் பயன்படுத்தியுள்ளார். 27 அடி உயரத் துக்குக் குறித்த பிரமிட் செய்யப்பட்டது. இதனையடுத்து அவரது முயற்சி, அதிக பிளாஸ்டிக் கோப்பைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பிரமிட் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றது.
"பாடசாலைப்பருவத்தில் கின்னஸ் சாதனைப் புத்தகத்தைப் பார்த்ததில் இருந்து, அப்புத்தகத்தில் இடம்பிடிக்க வேண்டும் என்பது எனது ஆசை. பல்வேறு விடயங்களை முயன்று, இந்தச் சாதனையைப் படைத்துள்ளேன்" என தயால் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)

சிரியாவில்

## அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது தாக்குதல்: 12 பேர் சாவு



டமஸ்கஸ், செப். 21
ஐக்கிய நாடுகள் சபை சிரிய மக்களுக்காக வழங்கிய அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுசென்ற வாகனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.
சிரிய ஜனாதிபதி ஆசாத்தை பதவி நீக்கம் செய்யும் முனைப்பில் அங்கு தோற்றம்பெற்ற கலவரக்குழு பின்னர் ஆயுதக்குழுவாக மாற்றம் பெற்றது. அரச படை, ஆயுதக் குழு என இரு தரப்புக்கும் இடையில் கடந்த ஐந்து வருடத் துக்கும் மேலாக நடத்தப்பட்ட தாக்குதலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் சாவடைந்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அழுத்தத்துக்கு மத்தியில் இரு தரப்புக்கும் இடையில் அண்மையில் சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து சிரிய மக்களுக்கு வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபை அத்தியவசியப் பொருள்கள் பலவற்றை சிரியாவுக்கு அனுப்பியது.
78ஆயிரம்மக்களுக்குத்தேவையான பொருள்களை ஏற்றிக்கொண்டு அலிப்போ நகரில் வாகனம் சென்ற போது குறித்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 12 பேர் சாவடைந்தனர். சம்பவத்துக்கு எந்தவொரு அமைப்பும் பொறுப்புக்கூறவில்லை. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்வானை நாளை சூறாவளி தாக்கலாம்

தைபெய், செப். 21
தாய்வானின் தைபெய் நகரை நாளை சூறாவளியொன்று தாக்கும் என்று தாய்வான் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்தது.
வடமேற்கு பசுபிக் பகுதில் இடம்பெறவுள்ள காற்றமுத்தத் தாழ்வு நிலை இந்தப் புயலைத் தோற்றுவித்துள்ளது. இதனையடுத்து தைபெய் நகர மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.
மணிக்கு 130 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து விமானங்கள், ரெயில்களின் சேவைகள் நிறுத்தப்பட்டன. கடல்கொந்தளிப்பு இருக்கும் என்பதால் மீன் பிடித் தொழில்களும் நிறுத்தப்பட்டன.
இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான அல் ஜசீரா வெளிப்படுத்தியது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் தாய்வானை மெறான்டி என்ற புயல் தாக்கியது.
இதில் ஒருவர் சாவடைந்தார். பலர் காயமடைந்தனர். ஆயிரத்து ஐந்நூறு வீடு கள் தரைமட்டமாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)



# இன்னும் ஆறே மாதங்களில் பிலிப்பைன்ஸ் சுத்தமாகும்

## டுடேர்தே சபதம்



மனிலா, செப். 21
பிலிப்பைன்ஸில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அனைவரும் இன்னும் ஆறு மாதங்களில் கொல்லப்பட வேண்டும் என அதிரடி உத்தரவைப் பிறப்பித்தார் டுடேர்தே.
பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாக டுடேர்தே பதவியேற்ற பின்னர் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். போதைப்பொருள் கடத்தல்காரர்கள், சூத்திரதாரிகள், முகவர்கள் என அத்தனைபேரும் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 3 ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டனர். இவர்கள் தண்டிக்கப்பட வேண்டிவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் மட்டில் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் பின்பற்றப்படாமையால் டுடேர்தேக்கு எதிராகப் பல அழுத்தங்கள் வைக்கப்பட்டன. சட்டதிட்டத்துக்கு ஏற்ப நடக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் ஆகியோரால் வற்புறுத்தப்பட்டார்.
இத்தகைய அழுத்தங்களை டுடெர்தே எவ்வாறு கையாளப் போகிறார் என்று எதிர் பார்க்கப்பட்ட நிலையில், அடுத்த ஆறு மாதத்துக்குள் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அனைவரையும் கொல்லுமாறு அவர் உத்தரவிட்டார்.
கொலை செய்யும் எண்ணம் எனக்கில்லை. கொலை செய்ய விரும்பினாலும் என்னால் அதைச் செய்ய இயலாது. ஆனால் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கை என்று வந்துவிட்டால் இதை விட வேறு தெரிவில்லை - என டடேர்தே மேலும் தெரிவித்தார். இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான சி.என்.என். வெளிப்படுத்தியது. (ம-ரி4)

# ஒத்திகை தாக்குதலில் எட்டு சிப்பாய்கள் உயிரிழப்பு

காபுல், செப். 21
ஆப்கான், அமெரிக்கா இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட பயிற்சி ஒத்திகையின் போது தற்செயலாக குண்டுகள் வெடித்ததில் ஆப்கானிஸ்தானின் எட்டு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.
ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருக்கும் தலிபான் அமைப்பு, தற்போது படிப்படியாக பலம் பெற்றுவருவதையடுத்து அங்கு தாக்குதலை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டது. இதன் ஒரு கட்டமாக அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன. வான் வெளித்தாக்குதலை நடத்த ஒத்திகை மேற்கொண்டதில் தவறுதலாக நடைபெற்ற வெடிப்புச்சம்பவங்களால் ஆப்கானிஸ்தானின் எட்டு சிப்பாய்கள் சாவடைந்தனர். இந்தத் தகவலை பன்னாட்டு ஊடகமான டெய்லி மெயில் வெளிப்டுத்தியது. (ம-ரி4)



# தாவரத்தில் இருந்து விமான எரிபொருள்



சிட்னி, செப்.21
இயுகலிப்ரஸ் என்ற தாவரத்திலிருந்து ஜெட் விமானத்துக்குப் பயன்படுத்தும் விசேட எரிபொருளைப் பெறமுடியும் என்று ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.
ஜெட் விமானங்களுக்கு தற்போது பயன் படுத்தும் சுப்பர் பெற்றோல் எனும் எரி பொருள் மிகவும் விசேடமானது. ஒருசில மத்திய கிழக்கு நாடுகளே சுப்பர் பெற்றோலை உற்பத்தி செய்கின்றன. இந்த நிலையில் இயுகலிப்ரஸ் தாவரத்திலிருந்து குறித்த வகை எரிபொருளை உற்பத்தி செய்யமுடியும் என்று கண்டறியப்பட்டது.
தாவரத்திலிருந்து பெறக்கூடிய எரிபொருளுக்கு அதிகம் செலவாகும் என்று தெரிவித்த விஞ்ஞானிகள் குறித்த தாவரத்திலிருந்து பெறப்படும் பெற்றோல் சிறப்பானதாகவும் சூழலுக்கு தீங்கு இல்லாத விதத்திலும் அமையும் என்று மேலும் தெரிவித்தனர். (ம-ரி4)

# காவிரி விவகாரத்தால் நேற்றும் போராட்டங்கள்

இந்த மாதம் 30 ஆம் திகதி வரை தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வழங்கவேண்டும் என்று காவிரி மேற்பார்வைக்குழு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டதையடுத்து கர்நாடகாவில் சில இடங்களில் நேற்று போராட்டங்கள் வெடித்தன.
தமிழ்நாட்டில் 40 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சம்பா பயிரிடப்பட்டது. போதிய அளவு நீர் இல்லாததால் நெற்செய்கை பாதிப்படையும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து காவிரியிலிருந்து தனக்குத் தண்ணீர் வழங்குமாறு உச்சநீதிமன்றில் தமிழ்நாடு வழக்குத் தொடர்ந்தது. வழக்கை விசாரித்த மன்று கடந்த 7 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரை தண்ணீர் வழங்க உத்தரவிட்டது. இந்தக் காலப்பகுதியில் கர்நாடகா, தமிழ்நாடு என இரு மாநிலங்களிலும் கலவரங்கள் வெடித்ததால் தண்ணீர் வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. இதனையடுத்து நேற்றுமுன்தினம் கூடிய காவிரி மேற்பார்வைக்குழு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தண்ணீர் வழங்க உத்தரவிட்டது. இந்ந நிலையில் மேற்பார்வைக் குழுவின் இந்த முடிவைக் கண்டித்து கர்நாடகாவின் பெங்களூர், மாண்டியா, மைசூர் ஆகிய பகுதிகளில் நேற்றுப் போராட்டங்கள் நடைபெற்றன.
கர்நாடக -தமிழக எல்லையில் கன்னட அமைப்புகள் கூட்டமைப்பின் தலைவர் வாட்டாள் நாகராஜ் தலைமையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. அவரும் அவருடன் நூற்றுக்கணக்கானவர்களும் கைது செய்யப்பட்டனர். நேற்று கலவரம் வெடிக்கும் என எதிர்வுகூறப்பட்டதால் பொலிஸார் ஏற்கனவே குவிக்கப்பட்டு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டதால் பெரிய அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை. (ம-ரி4)



நாகராஜ் கைது செய்யப்பட்டபோது...



# அமெரிக்கத் தாக்குதல் சூத்திரதாரி நேற்றுமுன்தினம் அதிரடிக் கைது

அமெரிக்காவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்பட்ட நபரை நேற்றுமுன்தினம் அமெரிக்கப் பொலிஸார் கைது செய்தனர்.
அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நியூஜேர்சி, செல்சி பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரு மணிநேர இடைவெளியில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன. இதில் 29 பேர் காயமடைந்தனர். ஐந்து குண்டுகள் மீட்கப்பட்டன. இந்தத் தாக்குதல்கள் நடைபெற்ற சில மணிநேர இடைவெளியில் நியூயோர்க் நகரின் வணிக வளாகம் ஒன்றில் நபரொருவர் 9 பேரைக் கத்தியால் குத்தினார். மூன்று பேர் கடுமையான காயங்களுக்கு ஆளாகினர். எவரும் சாவடையவில்லை. கத்தியால் குத்திய நபரைப் பொலிஸார் அதிரடியாகச் செயற்பட்டுச் சுட்டுக் கொன்றனர். கத்தியால் குத்தியவர் தமது போராளி என்று தெரிவித்து அந்தத் தாக்குதலுக்கு மட்டும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது.
குண்டுகள் வைத்தவர் தொடர்பாக மேலதிக தகவல் எதுவும் கிடைத்திருக்கவில்லை. குறித்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்றவில்லை. ஆனால் குறித்த நபர் கண்காணிப்புக் கமரா மூலம் அவதானிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தார். அவரின் படங்கள் அமெரிக்க ஊடகங்களில் வெளியாகின.
இந்த நிலையில் பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து குறித்த நபரை அமெரிக்கப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.
கைதுசெய்யப்பட்டபோது சந்தேகநபருக்கும் பொலிஸாருக்கும் இடையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதாக சொல்லப்படுகிறது. குறுகிய நேரத் துப்பாக்கிச்சூட்டின் பின்னர் சந்தேகநபர் உயிருடன் பிடிபட்டார். அவர் உயிருடன் பிடிபட்டமை மேலும் பல விடயங்களை வெளிக்கொணர உதவும் என அமெரிக்கப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# என்று மலரும் சமாதானம்?

சி.நற்குணலிங்கம்

உலக சர்வதேச சமாதான தினம் செப்ரெம்பர் 21ஆம் திகதியாகிய இன்றாகும். 1981இல் இருந்து ஒவ்வோர் ஆண்டும் செப்ரெம்பர் மாதத்தில் வரும் மூன் றாம் செவ்வாய்க்கிழமையிலேயே சமாதான தினம் கொண்டாடப்பட்டு வந்தது. 2002 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தினம் செப்ரெம்பர் 21ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. அமைதி என்பதும் பகைமை இல்லாத ஒரு நிலையைக் குறிக்கும். மகாத்மா காந்தியின் கூற்றுப்படி ஒடுக்கப்பட்ட சமூகம் ஒன்றில் வன்முறைகள் இல்லா நிலையாகும். அமைதிக்கு வன்முறை இல்லாமை மட்டுமன்றி நீதியிருக்க வேண்டியதும் அவசியம். உலகெலாம் இந்தத் தினத்தைக் கொண்டாடினாலும் தமிழர்களுக்கு நிரந்தர சமா தாணம் கிடைக்காததால் கொண்டாடமுடியாமல் திண்டாடுகிறார்கள். தமிழர்களுக்கு நிரந்தர சமாதானத்தை எல்லோரும் இணைந்து ஏற்படுத்தித் தராமைதான் பலரதும் ஆதங்கமாக உள்ளது.

சர்வதேச சமாதான தினத்தின் மூலம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளாத நாடுகளின் மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும், ஏற்படுத்தப்பட வேண்டும். உணர்த்தப்பட வேண்டும். மக்களும் நன்கு உணர வேண்டும். இன்றைய சூழ்நிலையில் சமாதானம் என்பது முக்கியத்துவமான ஒன்றாகும். சமாதானத்துக்கான அடிநாதம் மக்களின் மனங்களில் தான் உள்ளது. வாழ்க்கையை முழுமை பெறச் செய்வது நல்ல மனநிலை தான். எனவே முரண்பாடுகளற்ற நல்ல ஒத்த மனநிலை ஏற்படுவதன் மூலம் நல்லொழுக்கத்துடன் கூடிய மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த வாழ்வு எமக்குக் கிட்டும்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் உலக சமாதானத்துக்காக 1945ஆம் ஆண்டு உலக பாதுகாப்பு அரண் எனப் போற்றப்படும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிறுவப்பட்ட போதும் இன்றுவரை துப்பாக்கிகளுக்கும், குண்டுகளுக்கும் பூசல்களுக்கும் ஓய்வு கொடுக்க முடியவில்லை. உலக நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் பணி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இணை நிறுவனமான யுனெஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோவின் முகவுரை வாசகத்தில் மனித உள்ளங்களில் தான் போர்பூசல்கள் தோன்றுவதனால் மனித உள்ளங்களில்தான் அமைதிக்கான அரண்களும் அமைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டிலே வந்த வித்தியாசம் எமக்கிடையே இருப்பினும் அடிப்படையில் நாம் மனித குலத்தினரே என போதிக்கப்படுவதே சமாதானத்திற்குரிய முதற்படியாகும். இது எல்லா இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையில் நடைமுறைகளும் காணப்படுமாயின் தொடர்ந்து படிகள் ஏறிச் செல்லக்கூடியதாக இருக்கும் சமயங்களிலும், விஞ்ஞானத்திலும் சொல்லப்படுவது போல

> சர்வதேச சமாதான தினத்தின் மூலம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளாத நாடுகளின் மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும், ஏற்படுத்தப்பட வேண்டும். உணர்த்தப்பட வேண்டும். மக்களும் நன்கு உணர வேண்டும். இன்றைய சூழ்நிலையில் சமாதானம் என்பது முக்கியத்துவமான ஒன்றாகும்.

மனம்தான் எல்லாவற்றுக்கும் முன்னோடி . எனவே மனங் களின் மூலம் தான் ஆரோக்கியமான சமாதானம் உருவாக முடியும். அடிப்படையில் மனித இனம் நல்லது. சூழ்நிலைதான் இன்றும் அதைக் கெடுக்கின்றது. முதலில் நான் என்னை மாற்ற வேண்டும். ஒற்றுமையின் உச்சப் பயனே சமாதானத்தின் ஊன்றுகோல் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

மனித உரிமைகளையும், கடமைகளையும் செயற்படுத்துவதற்கு இன்றியமையாது தேவைப்படுவது சமாதானமாகும். சுதந்திரம், நியாயமான சட்ட ஆட்சியுடைய சமத்துவம், ஒருமைப்பாடு என்பது தான் சமாதானம். சமாதானம் என்பது வெறுமனே ஓரிரு செயற்பாடுகளை ஒட்டியதல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட பல கூட்டுச் செயற்பாடுகளாகும். உலகில் உள்ள 162 நாடுகளில் வன்முறைகளற்ற, பண்புகள் மற்றும் அளவீடுகள் போன்ற 22 தரக்கணீப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு 2013ஆம் ஆண்டு செய்யப்பட்ட சமாதானச் சுட்டெண் கணிப்பின்படி இலங்கை [illegible]ஆவது இடத்தில் இருந்தது. 2014ஆம் ஆண்டில், [illegible]ஆவது இடத்திலும் 2015ஆம் ஆண்டில் இலங்கை 114ஆவது இடத்திலும், 2016ஆம் ஆண்டில் 97ஆவது இடத்தையும் பிடித்துள்ளது. 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு சமத்துவம், சமாதானமும் பாதுகாப்பும் மற்றும் சில பிரதான குறிக்கோள்களை மையப்படுத்தி ஐ.நா. மற்றும் உலகவங்கியினால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த நாடு என்ற பட்டியலில் இலங்கை 85ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. எனவே தரவுகளின் அடிப்படையில் நோக்கும்போதும் இலங்கை சமாதானத்தை எட்டுவதற்கு தூரம் அதிகமாகவே உள்ளதை உணர முடிகின்றது. அத்துடன் இலங்கையில் சமாதானம் என்பது மிக எளிதாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்பதும் புலனாகிறது.

பொருத்தமற்ற சூழ்நிலைக்குள் அகப்படாது நேர்ப்பாங்கான மனதுடன் வாழ்வோமாயின் அதுதான் எமது ஆரோக்கியமான சமாதானத்துக்கு வழிவகுக்கும். அத்துடன் வார்த்தைப் பிரயோகங்களும் சமாதானத்தை எட்டுவதற்கு தடையாக அமையக்கூடும். ஆகவே உரியவர்கள், பெரியவர்கள் பேசும்போது நிதானத்துடன், சமநிலையில், விரோதமற்ற மனநிலையில், நன்மை பயக்கும் வார்த்தைகளைப் பிரயோகித்தல் சிறந்ததாகும். நாவை அழிவுக்கன்றி ஆக்கத்துக்குப் பயன்படுத்த வேண்டும். கனிவான அமைதியான சூழலைக் குழப்பாத சொற்களைப் பரிமாற வேண்டும். நாவடக்கம் கோடி நன்மை தரும் என்பார்கள். அத்துடன் ஒன்றுபட்டால் உண்டு சமாதானம் என்பதையும் நாம் எல்லோரும் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் தமிழ் மக்களும் ஏனைய சமூகத்தவர்களைப் போன்று சுதந்திரமாவும், சுய கௌரவத்துடனும், சுயமாகவும் வாழும் நிலை ஏற்பட வேண்டும். தற்கால சூழலில் உறவுகளை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களை நினைப்பதன் மூலம் சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர முடியும். இது சிரியா நாட்டுக்கு மட்டுமல்ல எமக்கும் பொருந்தும். இத்துடன் போரின் விளைவால் உள, உடல், பொருளாதார நிலைகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல நாளைய தலைவர்கள், நாட்டை ஓட்டிச் செல்லும் சாரதிகள் இவற்றைக் கருத்தில் கொள்வதன் மூலம் சமாதானத்தின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணரமுடியும்.

உலக சமாதான தினம் வெறுமனே ஆண்டுக்கொரு முறை கொண்டாடப்பட வேண்டிய ஒரு தினமல்ல. நாளும் பொழுதும் நினைக்க வேண்டிய ஒரு தினமாகும். மிகச் சிறிய வயதிலேயே சமாதானத்துக்கான அறிவு புகட்டப்பட வேண்டும். பாடசாலைகளிலும் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டு வடிவம் கொடுக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மௌனிகன்

ஒரு நாட்டின் கலைஞன் தான் அந்த நாட்டின் முதல் போராளி. கலைகள்தான் அவர்களுடைய ஆயுதம். இந்த சக்தி வாய்ந்த ஆயுதங்கள் பல சர்வாதிகாரிகளுக்குத் தலையிடிகளைக் கொடுத்த வரலாறுகளும் உண்டு. சார்லி சாப்ளினைக் கண்டு கிட்லர் எனும் மாபெரும் ஆட்சியாளன் பயந்ததெல்லாம் இந்தக் கலைகளின் வீரியத்தைக் கண்டே. தமிழர் போராட்ட வரலாற்றிலும் கலைகள் மாபெரும் பங்கை ஆற்றியிருந்ததையும் எவராலும் மறுத்துவிட முடியாது.

எங்கெல்லாம் அநீதியும் அடக்குமுறைகளும் வன்முறைகளும் சுரண்டல்களும் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் தனது முதல் கோபத்தையும் எதிர்ப்பையும் கலைஞனே வெளிப்படுத்துகிறான்.

இன்றயை நாள்களில் கலை ஞர்கள் தமது வலிமை குன்றிப்போய் விட்டனரோ என்று பலரும் அங்கலாய்த்துக்கொண்டிருந்தாலும் இல்லை, கலைகளும், கலைஞர்களும் எப்போதும் சமூகத்தின் காவல்நாய்களே என அங்கங்கே பலரும் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எவ்வளவுதான் புதிய புதிய வாழ்க்கை முறைக்குள் இளைஞர்கள் அகப்பட்டுக்கிடந்தாலும் அவர்களுக்குள் இருக்கின்ற கலையுணர்வையும் சமூக அக்கறையையும் எதுவும் தின்றுவிடப்போவதில்லை என்பதை அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் கலைச்செயற்பாடுகளில் இளைஞர்களின் புதிய வரவுகள் காட்டிநிற்கின்றன. இதன் ஓர் அங்கமே முல்லைத்தீவின் கிராமங்கள் தோறும் இடம்பெற்றுவரும் வீதி நாடக நிகழ்வுகள் எனலாம். (Us aid) தன்னார்வத்தொண்டுநிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் (spice) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் நல்லூர்ப் பிரதேசத்தில் இயங்கிவரும் செயற்றிறன் அரங்க இயக்கத்தினர் முல்லைத்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளை அரங்கினூடாகத் தயார்படுத்தி, அவர்கள் மூலம் அவர்களுடைய பிரதேசங்களில் காணப்படும் சமூக அவலங்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு அவைகள் தொடர்பான தெளிவையும்– விழிப்புணர்வையும்– தீர்வையும் – கொடுக்கும் சமூக பெறுமானமுள்ள வீதிநாடக அளிக்கைகளை நடத்தி வருகின்றார்கள்.

முப்பதுவருட போரின் பின்னரான அமைதிக்குப் பின்னர் அந்த போர்நடந்த மண்ணிலிருந்து மீண்ட மக்களை சத்தமின்றிய போர்களுக்குள் இருந்து எப்படியாவது மீட்டெடுக்க வேண்டும் எனும் அக்கறையோடு இந்த சமூக உணர்திறன் மிக்க இளைஞர்கள் போராடி வருகிறார்கள்.

'ஒருவனை ஏமாற்ற வேண்டும் என்றால் முதலில் அவனுக்குள் ஆசையைத் தோற்றுவிக்க வேண்டும்' என்று ஒரு திரைப்படத்தில் வரும் பிரபலமான வசனம் போன்று இன்றைய எங்களது வாழ்க்கை முறைக்குள் ஏகப்பட்ட ஆசைகள் தோற்றுவிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை எவருமே அறியவில்லை. மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பது போல இந்த ஆசைகாட்டி மோசம் செய்யும் ஏமாற்று வேலைகளை, பல நிதி நிறுவனங்களும், வங்கிகளும், லீசிங்நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன. எந்தவித பிடிமானமுமில்லாமல் வெறுங்கைககளோடு ஊர் திரும்பிய மக்களை ஒரு கையெழுத்தோடு எல்லாம் தருகிறோம் எனும் வெற்று வாக்குறுதிகளை வழங்கி வாகனங்களுக்கும், தளபாடப் பொருள்களுக்கும், ஆடம்பரப் பொருள்களுக்கும் ஆசைகாட்டி அவர்களிடமிருந்த மிச்சம் மீதிகளையும் சுரண்டிக்கொண்டு போகும் ஈனச்செயலைப் பல நிறுவனங்கள் நிகழ்த்தி வருகின்றன. ஏதாவது நல்லது எமக்கும் நடந்து விடாதா எனும் ஆவலோடு இருந்தவர்கள் இவைகளைப் பற்றிக்கொண்டு மேலேற நினைத்து இறுதியில் அதல பாதாளத்துள் விழும் பரிதாப நிலையே மிஞ்சிப்போகிறது.

# கானல்நீர்

## தெருவெளி அரங்கு ஒரு சமூகத் தொண்டு

**எங்கெல்லாம் அநீதியும் அடக்குமுறைகளும் வன்முறைகளும் - சுரண்டல்களும் இடம்பெறுகின்றனவோ அங்கெல்லாம் தனது முதற் கோபத்தையும் எதிர்ப்பையும் கலைஞனே வெளிப்படுத்துகிறான்.**

வீட்டிலிருக்கும் முருங்கை மரங்களிலிருந்தும் பால்விற்பனையிலிருந்தும் வருமானத்தை ஈட்டி குடும்பத்தை நடத்திவரும் குடும்பத்தினுள் ஆசையைக் காட்டி, கடைசியில் கையிலிருக்கும் வருமானத்தையும் இழந்து தற்கொலை அளவில் போகும் ஒரு கதையை கானல் நீர் எனும் தெருவெளி அரங்கினூடாக ஒவ்வொரு மக்களுக்கும் கொண்டுசெல்லும் இந்த செயற்றிறன் அரங்க இளைஞர் குழுவின் சமூக அக்கறை பாராட்டுக்குரியதே.

கடந்த சில மாதங்களாக முல்லைத்தீவு கேப்பாப்பிலவு, பூதன்வயல், பொன்னகர் ஆகிய கிராமங்களில் தொடர்ந்து ஆற்றுகை செய்யப்பட்டுவரும் இந் நிகழ்வுகள் மக்களை விழிப்படைச் செய்யவும் கலைகளோடு தமது வாழ்வியலை பொருத்திக் கொள்ளவும் என இரண்டு நேர்கோடுகளில் பயணித்து, ஓர் ஆரோக்கியமான மையப்புள்ளியில் இணைக்கும் என்பதில் புதிய நம்பிக்கை பிறக்கிறது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# இலக்கிய விருந்து தந்த இளைஞர் பட்டாளம்

## தமிழ் மாமன்றத்தின் 'தமிழ் மாருதம் 2016' ஒரு பார்வை

கவிநேயன்

இளைஞர்கள் இலக்கியத்தின் மீது ஆர்வமாய் இருப்பார்களா? தமிழ் சார்ந்த நிகழ்வுகளை முன்னெடுக்கத் தயாராக இருப்பார்களா? தமிழ் மொழி மீது பற்று கொண்டவர்களாக மொழியைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா? என்கின்ற பல கேள்விகளுக்கு தகுந்த ஒரு பதிலாக அமைந்திருக்கின்றது, அண்மையில் வவுனியாவில் மிகப் பிரமாண்டமாக நடந்தேறிய தமிழ் மாமன்றத்தினுடைய 'தமிழ் மாருதம் 2016' நிகழ்வு.

இரு நாள்கள் காலை மாலை அமர்வுகளாக மூன்று அமர்வுகள் என்ற ரீதியில், முத்தமிழ் நிகழ்வு ஒன்றைத் திட்டமிட்டு அதனைத் திறம்பட நடத்தி முடிப்பதென்பது இலகுவான விடயம் அல்ல. இளைஞர்கள் ஒன்றிணைந்து அந்த விடயத்தைத் திறம்படச் செய்து காட்டியிருக்கிறார்கள். இது நிச்சயமாக வரவேற்கப்படவேண்டியது. வன்னி மண்ணிலே ஒரு மாபெரும் கலை இலக்கிய நிகழ்வாக இந் நிகழ்வு தடம் பதித்திருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு பார்வையாளனாக, இரு நாள்களும் இந் நிகழ்வை முழுமையாகப் பார்வையிட்டதன் அடிப்படையில், இந் நிகழ்வு பற்றிய என்னுடைய பார்வையே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

2013ஆம் ஆண்டு இளைஞர்களின் ஒன்றிணைவில், பிரதேச கலை இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மாமன்றம், மாணவர்களுக்காக விவாதப் பயிலரங்கு, கவிதைப் பயிலரங்கு, சித்திரப் பயிலரங்கு, நாடகப் பயிலரங்கு மற்றும் நூல் வெளியீடு, நூல் அறிமுகம், வாசிப்புச் சம்பந்தமான நிகழ்வுகள் என்பவற்றுடன், 2014 ஆம் ஆண்டில் இயல் விழா என்ற நிகழ்வையும், 2015 ஆம் ஆண்டில் தமிழ் மாருதம் நிகழ்வையும் நடத்தியருந்தமை குறிப்பிடத்தக்கது. 2016 ஆம் ஆண்டுக்கான முத்தமிழ் நிகழ்வாக,'தமிழ் மாருதம் 2016' அரங்கேறியிருந்தது. இந் நிகழ்வை, வழமைக்கு மாறாக இரண்டு நாள்கள் கொண்ட நிகழ்வாக தமிழ் மாமன்றத்தினர் அமைந்திருந்தனர். வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் கடந்த 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் இந் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

கடந்த 3 ஆம் திகதி மாலை 4 மணிக்கு, வவுனியா பொதுசன நூலக சரஸ்வதி சிலையிருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகியது இந் நிகழ்வு. ஊர்வலத்துடன் விருந்தினர்கள், நகரசபையின் கலாசார மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.



மண்டபத்தின் நுழைவாயிலில் வாழை மரமும், தோரண அலங்கரிப்புக்களும் காணப்பட்டன. இரு புறமும் வீதி ஓரங்களில், தமிழ் மாமன்றம், தமிழ் மாருதம் எனப் பொறிக்கப்பட்ட கொடிகள் காற்றில் அசைந்தாடின. மண்டபத்தினுடைய வெளிவாயில், இயற்கைப் பொருள்களைக் கொண்டு மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்க, நிறைகுடம், குத்து விளக்கு என்பவற்றோடு, வந்தோரை பன்னீர் தெளித்து, திலகமிட்டு இளம் பெண்கள் இன்முகத்துடன் வரவேற்றனர். விருந்தினர்கள் உட்பட அனைவரும் உள்ளே அழைத்துச் செல்லப்பட, அங்கே மேடையினுடைய திரை மூடப்பட்டிருக்க, திரையின் முன்பாக நின்றபடி, தமிழ் மாருதம் பற்றிய அறிவிப்பு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தது.

மங்கல விளக்கேற்றல், வழமைக்கு மாறான வித்தியாசமான பெண் குழந்தையொன்றின் தமிழ் வாழ்த்து, தமிழ் மாமன்றத்தினுடைய தலைவர், மருத்துவர். சி. கிருபானந்தகுமாரனின் தலைமையுரை, நகர சபைச் செயலாளர் த. தர்மேந்திராவின் தொடக்கவுரை என்பன ஆரம்ப நிகழ்வுகளாக இடம்பிடிக்க, முதலாவது பிரதான நிகழ்வாக, இசை அரங்கு இடம் பெறுவதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டது.

இசை அரங்குக்காகத் திரை விலக்கப்பட, மேடை அலங்காரம் காட்சிக்குள்ளானது. எமது எதிர்பார்ப்பு கொஞ்சம் ஏமாற்றமானது தான் கவலை. தமிழ் பெரியார்களின் உருவப்படங்கள், தமிழ் எழுத்துக்கள் கொண்ட வளைவு, அதன் நடுவே தமிழ் மாருதம் எனப் பொறிக்கப்பட்ட ஒரு வளைவு என்ற வகையில் அந்த மேடை அமைப்பு அமைக்கப்பட்டிருந்தது. மேடையைப் பிரமாண்டமாக காட்டியிருக்கலாமோ என்ற ஓர் எண்ணம் தோன்றியதும் தவிர்க்க முடியாததே. பிரமாண்டமான நிகழ்ச்சிகள் அலங்கரித்த நிகழ்வொன்றினுடைய மேடை, அதற்கேற்ப பிரமாண்டமாக அமைந்திருக்கலாம் என்ற ஓர் ஏக்கம் ஏற்பட்டது. இருப்பினும், முற்று முழுதாக குறை சொல்ல முடியாத அளவுக்கு, தமிழ்ப் பெரியார்களின் படங்கள் அழகாக வரையப்பட்டிருந்தன.

மேடை அலங்காரத்தோடு சேர்த்து, இசையையும் இனிதே ரசிக்க முடிந்தது. இசை ஆர்வலர்களுக்கு நல்லதொரு விருந்தாய், அன்றைய இசை நிகழ்வை, நயினை ப.சிவமைந்தன் குழுவினர் வழங்கியிருந்தனர். அதனைத் தொடர்ந்து தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி, செல்வி. அ.கவிநயாவின் இசையும் அசைவும் நிகழ்வு பார்வையாளர்களை பிரமிக்க வைத்தது. ஒவ்வொரு அசைவிலும் அனை வரதும் மனங்களிலும் இடம் பிடித்து விட்டாள் அந்தச் சிறுமி.

தொடர்ந்து அன்றைய அமர்வினுடைய சிறப்பு நிகழ்வாக, உலகப் பிரசித்தி பெற்ற பேச்சாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் நீதிபதியாகக் கொண்ட வழக்காடு மன்றம் இடம் பெற்றது. அன்றைய வழக்காடு மன்றத் தில் வழக்கறிஞர்களாக, கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், இலக்கியச்சுடர் ஐ.கதிர்காமசேகரன் ஆகியோருடன் தமிழ் மாமன்றத்தைச் சேர்ந்த சி.துஷாரன், கி.நிக்ஷலன் ஆகியோர் வாதிட்டனர். குற்றவாளிக் கூண்டில் குருநாதர்களை நிறுத்திய அன்றைய வழக்கிலே, இலக்கியத்தில் காட்டப்பட்ட குருநாதர்களைச்சாடிவழக்குத்தொடுக்கப்பட்டிருந்தாலும், இன்றைய காலத்தினுடைய ஆசிரியர்களுடைய குறைகள் பரவலாக இரு தரப்பாலும் பேசப்பட்டது. அதைவிட குத்திக் காட்டப்பட்டது என்றுதான் குறிப்பிட வேண்டும். நீதியரசாரக இருந்த கம்பவாரிதி, வழக்காடு மன்றத்துக்குள் நுழைவதற்கு முன்பான முன்னுரையிலே, இளைஞர்கள் இப்படி இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபடுவது வரவேற்க்கத்தக்கது. இப்படி ஒரு மன்றம் ஒவ்வொரு ஊரிலும் இருந்தால் போதும் தமிழ் வளர்ந்துவிடும்' எனக் குறிப்பிட்டார். கம்பவாரிதி என்றும் தனக்கேயுரிய பாணியில் சுவாரஸ்யமாக அவ் வழக்காடு மன்றத்தை நடத்தினார். வாதிட்ட மூத்த வழக்கறிஞர்கள் இருவரும், சிறப்பாக சுவாரஸ்யமாக தமது வாதத்தை முன்வைத்தனர். அவர்களுக்கு கீழ் வாதிட்ட தமிழ் மாமன்ற உறுப்பினர்களிடம், ஏதோ ஒரு பதற்றம் இருந்தாலும், தங்களால் இயன்றளவு வாதங்களை வைத்ததோடு, எதிர்வாதங்களுக்கும், நீதியரசரின் கேள்விகளுக்கும் சளைக்காமல் பதில் தந்தனர். இடையிடையே பட்டிமன்றத்தின் சாயல் அவர்களிடமிருந்தாலும் சிறப்பாக வாதிட்டனர். நிறைவான ஒரு வழக்காடு மன்றத்தோடு முதல் நாள் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் 04ஆம் திகதி, காலை 9 மணிக்கு மங்கல விளக்கேற்றல், தமிழ் வாழ்த்து, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ந.பார்த்தீபனின் தொடக்கவுரை என்பவற்றுடன் ஆரம்பமானது சிதம்பரேஸ்வரம் நடனாலயம் வழங்கிய 'தமிழ் மூச்சு' எனும் நாட்டிய அளிக்கை முதலாவது நிகழ்வாக இடம்பெற்றது. நடனாலயத்தினுடைய ஆசிரியர் செந்தூர்ச்செல்வனும் அவருடைய மாணவிகளும் இணைந்து வழங்கிய அந்த நாட்டிய அளிக்கை மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. அவர்களுடைய அசைவுகள் இரசிக்கும்படியாக இருந்தன. மனதுக்கு திருப்தியான ஓர் நாட்டியத்தை பார்க்க முடிந்தது. அதனைத் தொடர்ந்து, தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின், நாட்டார் பாடல் இடம்பெற்றது. தேசிய மட்டத்துக்கு தகுதி பெற்றது என்பதற்கான சான்றாக அன்றைய நிகழ்வு அமைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து, தமிழ் மாமன்றம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, அதனுடைய செயற்பாடுகளின் தொகுப்பாகவும், உறுப்பினர்களுடைய ஆக்கங்களை தாங்கிய விதத்திலும் ஓர் ஆவணப்படுத்தல் நூலாக 'தமிழ் மாருதம் 2016' என்கின்ற நூல் வெளியிடப்பட்டது. அந் நூலில், தமிழ் மாமன்றம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது? இதுவரை எதைச் செய்திருக்கின்றது? இனிவரும் காலங்களில் எதனைச் செய்யப்போகின்றது என்பது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அந் நூல் இன்னும் செம்மைப்படுத்தப்பட்டிருக்கலாமோ எனத் தோன்றியது. நூலின் கோர்ப்பு சரியாகச் செய்யப்படாமையால், தாள்கள் நூலை விட்டு விலகுகின்ற நிலையில் இருந்தமையும், சரியான ஒழுங்குபடுத்தலின்மையும், தலைப்பின்றிய ஆக்கங்களும், ஏற்கனவே பத்திரிகைகளிலோ, இணையங்களிலோ வெளிவந்த ஆக்கங்களும் குறைகளாகத் தென்பட்டாலும், அட்டை வடிவமைப்பும், ஒரு சில தரமான ஆக்கங்களும், ஆவணப்படுத்தலும் நிறைகளாகக் காணப்பட்டன.

ஆவணப்படுத்தல் நூல் வெளியீட்டைத் தொடர்ந்து, தேசிய மட்டத்தில் தமிழ் மொழித் திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்தப் பரிசளிப்பு நிகழ்வு நிச்சயமாகப் பாராட்டப்படவேண்டிய விடயம். பாடசாலைக்கு வெளியிலே செயற்படுகின்ற ஒரு மன்றம், தாம் நடத்தாத ஓர் போட்டிக்கான பரிசளிப்பை மேற்கொள்வதென்பது புதிய விடயம். அந்த மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்ட தமிழ் மாமன்றதுக்கு மிகப் பெரிய பாராட்டைத் தெரிவிக்க வேண்டும். அப் பரிசளிப்பு நிகழ்வை இன்னும் நேர்த்தியாக செய்திருக்கலாமோ எனத் தோன்றியது. ஒட்டு மொத்தத்தில் மிகத் தரமான ஓர் இலக்கிய பெரு விழாவை வன்னியில் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து நடத்தியிருக்கிறார்கள். இது மிகப் பெரிய இலக்கிய விருந்து. வன்னியில் இருக்கின்ற மிகப் பழமை வாய்ந்த இலக்கிய அமைப்புக்கள் செய்யாத ஒரு விடயத்தை மிகப் பெரிய செலவிலே, பிரமாண்டமாக, முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஓர் அமைப்புக்கான எந்தவித ஆதரவுமின்றி செய்துகாட்டியிருக்கின்றமை வரவேற்கத்தக்கது. தொடர்ந்தும் இலக்கியம் சார் செயற்பாடுகளில் இம் மன்றம் இடைவிடாது ஈடுபட வேண்டும் என்ற ஆசையுடன், இலக்கிய விருந்து தந்த இளைஞர் பட்டாளத்துக்கு எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுக் கவிதைக்குப் புதிய பெயர் படிதையா?

தேவிபரமலிங்கம்



தமிழில் வசனநடை தோன்றுவதற்கு முன்பாக மக்கள் கருத்துக்களைச் செய்யுள்களிலேதான் பரிமாறிக் கொண்டனர் என அறிகிறோம். தமிழில் பெருங் கதைகள் உருவாக முன்பே பெரும் காவியங்கள் தோன்றியுள்ளன. அவை பிற்காலங்களில் வசன நடைக்கு உட்படுத்தப் பட்டதைக் காண்கிறோம்.

இவ்விதம் கவிதை வேறு செய்யுள் வேறாக இனம் காண்கையில் பாடலைக் கவிதையாக ஏற்க முடியுமா? என்னும் கேள்வி எழுகிறது. கவிதை வேறு பாடல் வேறென்பாரும் உள்ளனர்.

கவிதையோ செய்யுளோ வார்த்தைகளோ பாடலாகி விடுமென்றும் கூறிவிட முடியாது.

கர்நாடக மெல்லிசை மெட்டுகளுள் அடங்கிவிடாத சொற்களால் அதனைப் பாடுவதென்பது சிரமமான காரியம். அது இசையின் மெட்டை விட்டு இடறுப்பட்டுப் போவதை அவதானிக்கலாம். ஆயினும் சில கவிதைகள் அழகாக இனிமையான மெல்லிசைப் பாடலாகி விடுவதும் உண்டு.

### உழைக்கும் கரங்கள் உயரட்டும்!

1972ஆம் ஆண்டில் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்புத் தொடங்கிய 50 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள கங்கையாளே நெடுநேர இசைத் தட்டில் என்னுடைய "உழைக்கும் கரங்கள் உயரட்டும்'' என ஆரம்பிக்கும் கவிதை ஒன்று காலஞ்சென்ற முன்னாள் அறிவிப்பாளர் எஸ்.கே.பரராஜசிங்கம் குழுவினர் பாட இசையமைப்பாளர் எஸ்.ரி.பிச்சையப்பா மிகவும் சிறப்பான மெல்லிசைப் பாடலாக உருவாக்கியமையை எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வகைச் சித்து விளையாட்டுகளால் கவிதையை என்னவென்று இனம் காணமுடியாமல் தடுமாறுவதால் சிலர் கவிதை என்றால் எவ்வரையறைகளும் கூறிவிட முடியாத அற்புதமான வடிவமெனக்கருதி விடுவதையும் காலத்துக் காலம் அவர்களால் கூறப்பட்டு வந்த கருத்துக்களில் இருந்தும் அறிய முடிந்துள்ளது.

2005ஆம் ஆண்டுப் பகுதியில் பிரபல ஈழத்துக் கவிஞர் புதுவை இரத்தினதுரை கவிதைக்கு அடியும் இல்லை; முடியுமில்லை அதனுடைய ஆள நீளத்தை எவராலும் அளவிட்டு முடியாது என்னும் கருத்துப்படக் கூறி இருந்ததைச் சுட்டலாம்.

அதேபோன்று இப்பொழுது கனடாவில் வதியும் கவிவேந்தன் வி.கந்தவனம் 2009ஆம் வருடம் நவம்பர் மாதம் 17ஆம் திகதி உதயனுக்கான நேர்காணலில் என்னிடம் நேரடியாகத் தெரிவித்திருந்த கருத்து இது.

கவிதைக்குக் கற்பனையும் விற்பன்னமும் அமைய வேண்டும். கற்பனை கூறுகின்ற செய்தியை விஸ்தாரமாக வளர்த்துச் செல்லும் விற்பன்னம் புத்திசாலித்தனமாக கவிதை சித்திரிக்கும் காட்சியை வாசிப்பவர் உள்ளங்களில் அறிவு பூர்வமாக நிலைபெறச் செய்யும்.

அவரே சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் அதிபர் ஆறு.திருமுருகனின் வேண்டுகைக்காக உயர்தர மாணவர் மத்தியில் 'மரபுக் கவிதை' என்னும் பொருளில் உரை நிகழ்த்துகையில் கீழ்க்காணும் கருத்தையும் கூறி இருந்தார்.

'கவிதையை விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றெனக் குறிப்பிடுவர். அத்தகைய ஒன்றை மாணவர்களான உங்களாலும் விளங்கிக் கொள்ளக் கடினமானதாகவே இருக்கும்'.

இவ்விதங்களாக மூத்த கவிஞர்கள் கவிதையைப் பற்றிக் கூறிச் சென்றால் புதிய கவிஞர்கள் மலைத்துப் போய்விட மாட்டார்களா என்ன?

### புதுக்கவிதைக்கு வயது 75 க்கும் மேலாகும்!

கவிதைக்கு ஒழுங்காக இலக்கண மரபு விதிகள் பழம் பெரும் புலவர்களால் எழுதப்பட்டுள்ளன. இந்த நிலையில் கவிதை அற்புதமானது. அதனைக்கண்டு பிடிக்க வேண்டுமானால் பிரமாவும் திருமாலும் அடியையும் முடியையும் கண்டறிய முனைந்த பிரயத்தனக் கற்பனைக் கதைகளைக் கூறினால் பொருந்துமா?

கவிதை என்றால் மரபுக் கவிதைகளில் பேணப்படும் பாவினங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதிமுறைகள் யாப்பிலக்கண நூல்களில் தெளிவாக வைக்கப்பட்டுள்ளன.

அவ்வொழுங்குகளைக் கடைப்பிடித்துக் கவிதைகளை யாத்தால் அதுவே கவிதை! அதே சமயம் தமிழில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும். புதுக்கவிதை, ஹைக்கூக் கவிதை என்பனவும் குறிப்பிட்ட சில வரையறையுள் படைப்பனவாகும். அந்தந்த விதிமுறைகளைக் கடைப்பிடித்து எழுதினாலே அந்தந்தக் கவிதை வடிவங்களையும் வாசகனால் இனம்காணமுடியும்.

புதுக்கவிதை என்கின்ற குறியீட்டை மாற்றி அதற்கான நிரந்தர நாமகரணத்தை உருவாக்க வேண்டிய கடமையும் கட்டாயமும் இலக்கிய உலகத்தவர்க்கு தட்டிக் கழிக்க இயலாத பணியாக இருந்து வருகிறது.

அவசர அவசரமாக ஆரம்பத்தில் வைக்கப்பட்ட அந்த நாமம் ஏறத்தாழ 75 ஆண்டுகளையும் விழுங்கிய இன்றைய காலகட்டத்திலும் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ளதை இலக்கியக்காரர் எப்போது உணரப் போகிறார்கள்?

இன்று நேற்று எழுதிய கவிதையைப் புதுக்கவிதை என்றால் பொருந்தும்; ஏற்றுக் கொள்ளலாம். எழுபது ஆண்டுகளுக்கு முன்பாக எழுதியதையும் புதுக் கவிதை என்கின் அது எங்ஙனம்?

ஆகவே, 75 ஆண்டுகளையும் தாண்டி இலக்கியக் குடும்பத்தில் இணைந்திருக்கும் அதற்குப் பொருத்தமான பெயரைச் சூட்டி வாழ்த்துவதுதான் முதன்மையானது.

படிமமே அந்தப் படைப்பின் மூலமாக விளங்குவதால் படிதை எனப்பெயர் சூட்டலாமென்பது என்னுடைய கருத்தாகும். இதேபோல் ஏனைய இலக்கிய உள்ளங்களும் பெயர்களை வழங்கினால் அவற்றுள் பொருத்தமான பெயரைத் தேர்ந்தெடுத்துச் சூட்டலாமல்லவா?

பன்னெடுங்காலங்கள் வாழப்போகும் இலக்கியப் பனுவலொன்றைப் பொருத்தமான பெயரைச் சூட்டி அழைக்காமல் ஏனோ தானோ என்று விட்டு விட்டால் அழகாமோ?

### கலை, கலைக்காகவா உருவானது?

கவிதை கற்பனாவாதிகள் கூறுவது போன்று தெரிந்து கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ மாட்டாத அரூபி அல்ல. பழம் பெரும் புலவர்கள் வகுத்துள்ளது போன்று எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய [illegible] மூத்த கவிவேந்தன் வி.கந்தவனம் தெரிவித்துள்ளதைப் போன்று கற்பனையும் விற்பன்னமும் கவிதையுள் புகுந்து விளையாடினால் அற்புதக் கவிதை தோன்றிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இன்று நேற்று எழுதிய கவிதையைப் புதுக்கவிதை என்றால் பொருந்தும்; ஏற்றுக் கொள்ளலாம். எழுபது ஆண்டுகளுக்கு முன்பாக எழுதியதையும் புதுக் கவிதை என்கின் அது எங்ஙனம்?

கவிதையில் இயற்றியோன் கூறவந்த தகவல் மக்களிடம் சென்றுசேர விளங்கக்கூடிய பேச்சு மற்றும் எழுத்து வழக்கில் இருக்கின்ற சொற்களை விஸ்தார மாய் விரவிவரப் புனைந்தாலே போதுமானது.

மரபு, இலக்கணம் படிமம் என்கின்ற உபகூறுகளை அளவுக்கு அதிகமாக கவிதைகளில் பிரயோகிக்க முனைந்தால் அழகான கவிதை அவலட்சணமாவதுடன் அதன் பயன்பாடும் மக்களுக்குக் கிடைக்காமல் சிதைவடைந்து விடுகிறது.

கவிதையைக் கண்கட்டி வித்தையாகச் சித்திரிக்கும் கற்பனாவாதிகள் படைப்புகளில்.

கற்பனா வாதத்தை மேலோங்கச் செய்து கலை கலைக்காக என்னும் பாங்கை வலியுறுத்தி வருவது ஆரோக்கியமான விடயமன்று.

### கலை, இலக்கியங்கள் மக்களுக்கானவை

கலை, இலக்கியங்கள் எல்லாம் மக்களுக்காகப் படைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் எதனையும் இல்லாத, கிடைக்க முடியாத ஒன்றாக நம்பத் தேவையில்லை.

கவிதையைச் செய்யுள் என்றும் குறிப்பிடலாம். ஆயினும் செய்யுள் வேறு, பாடலைக் கவிதையென்றும் குறிப்பிடலாம். என்றாலும் பாடல் வடிவம் வேறு; வேறென்பவற்றை மேலே பார்த்தோம்.

கவிதைக்கு ஆறு அம்சங்களான உறுப்புக்கள் இருப்பதுபோன்றே பாடலுக்கும் இராகம், தாளம், பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் சுருதிபேத விதிமுறைகள் உள்ளன.

கவிஞர்கள் பொதுவாக நேரசை, நிரையசை, எதுகை, மோனை, சந்தம் என்பவற்றை மட்டும் கற்று கவிதை எழுதுபவர்களாகவே இருக்கின்றனர். நூற்றுக்கு ஐந்து, பத்து பேர்கள் ராக, தாள, சுருதி தெரிந்தவர்களாக இருப்பார்கள். இதனாலே, கவிதை பாடலாகி விட மாட்டாது.

பாடல்கள் கவிதைகளின் உருவத்தில் இருப்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவும் உள்ளது. கவிதைகளில் கையாளப்படுகின்ற சொற்களில் நேர்த்தியிலே கவித்துவம் பிறக்கிறது; பிறக்க வேண்டும்.

எந்தச் சப்பைக் கட்டான வார்த்தைகளையும் எதுகை, மோனை, சந்தம் பார்த்து எழுதிவிடலாம். அது கவிதை ஆகிவிடமாட்டாது. அதில் கவித்துவம் மிளிர்வதில்லை. கையாளும் வார்த்தைகளின் நேர்த்திதான் கவிதையைச் சிறப்புறச் செய்கிறது.

மேலும் ஒவ்வொரு பாவினத்துக்கும் தரப்பட்டுள்ள விதிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கும் பட்சத்தில் அற்புதமான கருப்பொருளைக் கொண்டிருக்காத கவிதை கூட மனதில் நிலைத்து விடும்.

"கூந்தல் கறுப்பு
குங்குமம் சிவப்பு"

இந்தப் பா வரிகள் எளிதில் மனங்களில் பதிந்து விடக் கூடியதாக அமைந்துள்ள போதிலும், கருப்பொருளை எடுத்துக் கொண்டால் மலினமான; புத்தி சாதுரியம் இல்லாமல் குழந்தைகளுக்குச் சொல்வதுபோல் அமைந்துள்ளதைக் கவனிக்கலாம்.

### கவிதையில் பொய் மலையேறி விட்டது!

மேற்கண்ட உவமேய, உவமானத் தெரிவுகள் புத்தி சாதுரியமாக அமையாததால் பெறுமதி இல்லாத சடப் பொருளாகவே அமைந்துவிட்டது. மேலும் உண்மைக்கு அப்பாற்பட்ட கூற்றுக்களை பழந்தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணக்கூடியதாக இருந்தாலே 'புலவர் பொய் சொல்பவர்' என்னும் நையாண்டிக் கூற்றும் உலா வந்ததைக் குறிப்பிடலாம்.

புலவர்கள் பொய் உரைப்பவர்களென்றால் அவர்களுக்கும், அவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்களுக்கும் என்ன பெறுமானம் இருந்திருக்கும் என்பதைக் கூறத் தேவை இல்லையல்லவா?

நவீன படைப்புலகில் இல்லாத ஒன்றை இருக் கிறதென்றால் அதற்குக் கிடைக்கும் புள்ளி பூச்சியமாகவே அமையும். கவிதைகள் இனிமையானதாகவும், பாடுபொருள் தெளிவானதாகவும் அமைந்தாலே தலை சிறந்த படைப்பாகக் கொள்ள முடியும்.

மேலும் கவிதையானது தெளிவாகக் கருத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளும்படி வார்த்தெடுப்பதுதான் என்றால் அது நூற்றுக்கு நூறு சரியான கூற்றாகும். ஆகவே, எமது தமிழ் இலக்கியக் குடும்பத்தில் இணைக்கப்பட்டு விட்ட புதுக்கவிதைக்கு புதிய பெயர் 'படிதை' என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?



## அருகிவரும் கிராமியக்கலை

# ஒயிலாட்டம்

அராலியூர் நிலா

பண்டைத் தமிழரின் நாட்டார் ஆட்டக் கலைகளுள் ஒயிலாட்டமும் ஒன்று. ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு, கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்து இசைக்கேற்ப வீசி ஆடும் அழகான குழு ஆட்டம் இது. ஆண்மையின் கம்பீரத்தை உணர்த்தும் இந்தக் கலையாட்டத்தில், பெண்கள் கலந்துகொண்டு ஆடுவதில்லை. ஆதிகாலத்தில், இக்கலையாடலில் சிறந்த ஆண்களையே குறிப்பிட்ட ஒரு சமூகத்துப்பெண்கள்மணமுடிக்க விரும்பியதாக இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**பெயர்வரக் காரணம்**

அழகு, அலங்காரம், சாயல், ஒய்யாரம் எனப் பல பொருள் தாங்கி நிற்கும் ஒயில் என்ற வார்த்தையே, இந்த ஆட்டத்தின் பெயராகியுள்ளது. இது முற்றிலும் ஆண்கள் சார்ந்த கலை. இந்த ஆட்ட அடவுகள், ஆண்மையைவெளிப்படுத்தும்தன்மை கொண்டவை. பத்து முதல் 12 பேர் கொண்ட இந்த ஆட்டத்தில், எதிரெதிர் திசையிலோ அல்லது நேர்த்திசையிலோ நின்றுகொண்டு ஆடுவார்கள். சிறகை விரித்தால் மயிலாட்டம், சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம் என்று இக்கலையின் தன்மை வர்ணிக்கப்படுகிறது. இது பார்வையாளரைக் கவரும் அழகான ஒரு ஆட்டம்.

**ஒயிலாட்ட முறைகள்**

ஒயிலாட்டத்துக்கு என்று தனித்த ஒப்பனை முறைகள் உள்ளன. ஒழுங்காகத் தலை வாரியிருப்பார்கள். கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு, வலது கையில் ஒரே வண்ணத்திலான துணி பிடித்திருப்பதும்தலையில் ஒரே வண்ணத்தில் துணிகளைக் கட்டியிருப்பதும் அவசியம். பெரும்பாலும் கையில் பிடித்திருக்கும் துணி சிவப்பு நிறத்தில் இருக்கும். தலைமையாளர் மட்டும் பச்சை நிறத்தில் பிடித்திருப்பார். ஆட்டக்காரர்கள் வெள்ளை வேட்டியை தார் பாய்ச்சிக் கட்டியிருப்பர். தொடக்கத்தில் கைகூப்பி, ஒரு காலை மட்டும் தட்டி கடவுள் வணக்கம் செய்து, அடுத்து தரையைத் தொட்டு அவை வணக்கம் செய்து விட்டு அடவுகளைத் தொடங்குவர். கை நுனியில் துணியைப் பிடித்து அதை அழகாக வீசியபடியே பாடி ஆடுவர்.

இடையிடையே களைப்பைப் போக்கிக் கொள்ள, பாடல் பாடும் அண்ணாவியார் விசிலடித்து ஆட்டத்தை நிறுத்திக் கொள்வார். பெரும்பாலும் ஒயிலாட்டக் குழுவின் தலைவரே அண்ணாவியாராகச் செயற்படுவார். கடைசிப் பாடலுக்கு முன்னர் தலைவர் பார்வையாளர்களுக்கு நன்றி சொல்வார். கடைசி அடைவு முடிந்ததும் அனைத்துக் கலைஞர்களும் பூமியைத் தொட்டு வணங்கி விட்டு நிகழ்ச்சியை நிறைவுசெய்வர். .

**ஒயிலாட்ட இலக்கணம்**

இந்த ஆட்டத்தின் வேகத்தைத் தீர்மானிக்க ஆட்ட இலக்கணங்கள் உண்டு. ஆட்டத்தின் வேகத்தைப் பொறுத்து தக்கு, காலம் என்றும் அடவுகளின் வேகத்தைப் பொறுத்து அடி, சாரி, தட்டு என்றும் வகைப்படுத்தியுள்ளனர். தக்கு என்பது மெதுவான ஆட்டத்துக்கான இலக்கணம். வேகமான அடவுகளுக்குக் காலம் என்று பெயர். வேகமான அடவுகள் ஒன்றாம் காலத்தில் தொடங்கி மூன்றாம் காலத்தில் நிறைவுறும். அண்ணாவியார் பாடலைப் பாட, குழுவினர் அதே வரிகளைப் பாடி ஆடுவர். மெதுவாகத் தொடங்கும் அடவுகள், மெல்ல மெல்ல உச்சம்பெறும். தொடக்கம் முதல் இறுதிவரை கலைஞர்களின் அடவுகள் கம்பீரம் குறையாமல் இருக்கும். ஆட்டத்தின் எந்தத் தருணத்திலும் கலைஞர்களின் கழுத்துக்குக் கீழே, இடுப்புக்கு மேலே உள்ள உடற்பகுதிகள் வளையக்கூடாது. ஒயிலாட்டம் ஆடும்போது காலில் கட்டிய சலங்கை கம்பீர ஒலியெழுப்ப வேண்டும் என்பது நியதி.

ஆளோடு ஆளு உரசாமல்
உங்கள் ஆளிலே ஒரு முழம்
தள்ளி நின்று
காலோடு காலு உரசாமல்
உங்கள் கைப்பிடித்துணி
தவறாமல்
மேலோடு மேலு உரசாமல்
உங்கள் வேருவை தண்ணி
சிதறாமல்..

என்று நீளும் பாடல், ஒயிலாட்டத்தின் இலக்கணங்களை வரையறுக்கிறது.

**இசைக்கருவிகள்**

பானைத் தாளம், தவில், சிங்கி, சோலக் போன்ற இசைக் கருவிகளை இந்த ஆட்டத்தில் பயன்படுத்துவர். பானைத் தாளம் என்பது, குடத்தில் மாட்டுத்தோலைக் கட்டி இசைக்கப்படும் வல்லிசைக் கருவியாகும். பறைக்குப் பதிலாக இந்தக் கருவியை இசைக்கின்றனர். இவற்றோடு கலைஞர்கள் காலில் அணிந்திருக்கும் சலங்கை இன்னுமொரு கருவியாக மாறி அடைவுக்கேற்ப இசைக்கும். இந்த இசைக் கருவிகளைக் கட்டுப்படுத்தி வகைப் படுத்துவதே சிங்கி என்ற இசைக்கருவியின்வேலை.பாடலும்ஆடலும்நிறைந்த இக்கலையில், பாடத்தெரிந்த வருக்கு ஆடத்தெரிந்திருக்கத் தேவையில்லை. பாடலுக்குத் தகுந்தவாறு அடைவு வைத்து ஆடற்கலைஞர்கள் ஆடுவர். பெரும்பாலும் இதிகாச புராண வரலாற்றுக் கதைகளே ஒயிலாட்டத்தில் பாடப்படும். இவை தவிர, பவளக்கொடி, மதுரை வீரன், வள்ளி திருமணம், சிறுத்தொண்டர் கதை முதலான கதைகளையும் பாடி ஆடுவர். கிறிஸ்தவ ஆலயங்களில் வேதாகமக் கதைகளைப் பாடி ஆடுவதையும் அவதானிக்க முடிகிறது.

> சிறகை விரித்தால் மயிலாட்டம், சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம் என்று இக்கலையின் தன்மை வர்ணிக்கப் படுகிறது. இது பார்வை யாளரைக் கவரும் அழகான ஒரு ஆட்டம்.

**ஆடுகளம்**

பண்டைக்காலத்தில், கிராமியக் கோயில்களில் இடம்பெறும் திருவிழாக்களில் இந்த ஒயிலாட்டம் ஆடப்படும். இத்தகைய திருவிழாக் காலங்களில் விடிய விடிய நிகழ்வுகள் இடம்பெறும். பாய் படுக்கையுடன் திருவிழாக் கண்டின்புற வரும் மக்கள், இதுபோன்ற நிகழ்வுகளில் தம்மை மறந்திருப்பர். இதிகாச புராண வரலாற்றுக் கதைகளில் லயித்து, நற்பண்புகளை மனதில் நிறைத்திருப்பர். காலமாற்றத்தால், இத்தகைய நிகழ்வுகளின் இடத்தை இன்று சினிமாக்களும் இசைக்குழு நிகழ்ச்சிகளும் ஆக்கிரமித்துவிட்டன.



**ஒயிலாட்டத்தின் இன்றைய நிலை**

தற்போது, கலாசார நிகழ்வுகளில் ஆங்காங்கே ஆடப்படும் இந்த ஆட்டம், சில மாற்றங்களையும் பெற்றுள்ளது. மாற்றம் ஒன்றே மாறாதது என்ற நிலைக்கேற்ப, கலையுலகிலும் எண்ணற்ற மாற்றங்கள் வந்துவிட்டன. ஆரோக்கியமான மாற்றங்கள் வரவேற்கத்தக்கனதான். ஆனால், எம் அடையாளங்களை இழக்கவைக் கும் அவை மீது ஆக்கிரமிப்புச் செய் யும் மாற்றங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. எனவே, எம் இனத்தின் பண்பாட்டம்சங்களை குருதி தோய்த்துச் சொல்லும் கிராமியக் கலைகளை அழிய விடாது பாதுகாக்க வேண்டியது கலை பேணுநர்களின் தலையாய கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தை வலியுறுத்தும் ஈரம்

எஸ்.யேசுதாஸ்

தற்கால சமூகத்தை உயிரோட்டமுள்ளதாக உருவாக்கிப் புதிய கருத்துக்கள், சிந்தனையை உள்ளங்களில் விதைத்து நல்லொழுக்கத்தையும், மனிதநேயத்தையும் கட்டியெழுப்பும் அரிய சாதனமாக ஊடகங்கள் பெரும்பங்காற்றுகின்றன. இவற்றை விரைவாக மக்களுக்குக் கொடுக்கும் தொடர்பாடல் சக்திகளாக, பத்திரிகைகள், நூல்கள் போன்ற அச்சு ஊடகங்களும் காணொலிகள் இறுவெட்டுக்கள். போன்ற இலத்திரனியல் ஒலி ஒளிப் பேழைகளும் விளங்குகின்றன. இவற்றில் குறும்பட இறுவட்டுக்கள் குறுகிய நேரத்தில் மிகையான சிந்தனைப் பதிவுகளையும், கருவூலங்களையும் கொடுத்து கட்புல கேள்விப்புலங்கள் வழியாக மனித மனங்களில் ஆழ ஊடுருவும் ஆற்றல் கொண்டுள்ளன.

இந்த வகையில் இன்றைய சமூகக் கட்டமைப்பில் அன்பு, பாசம், பிறர்நலம், நெஞ்சீரம், இரக்கம், ஈகம் என்பன தொலைந்து போய்க் கொண்டிருக்கும். சூழலில் கடந்த 16ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நிலையமண்டபத்தில் 'ஈரம்' என்னும் குறும்படவெளியீடு இடம்பெற்றது. இறையிரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு அமதி மூவிஸ் வெளியீடாக அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி அடிகளின் கதை, தயாரிப்பு, நெறியாள்கையில் இந்தக் குறும்பட இறுவட்டு வெளிவந்துள்ளது.

குறும்பட வெளியீட்டுவிழாவில் முதன்மை விருந்தினராக யாழ். மறைக்கோட்ட குருமுதல்வரும் யாழ்.பேராலய பங்குத் தந்தையுமாகிய ஆர்.எக்ஸ்.நேசராஜர் அடிகள் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பிரபல இசையமைப்பாளர் கிறிஸ்ரியன் சுதர்சன், வவுனியா ரம்மியா பியூட்டிபாலர் உரிமையாளர் இரட்ணசிங்கம் தம்பதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுகவாழ்வு நிலைய இயக்குநர் அருட்திரு செலஸ்ரின் வரவேற்புரையையும், இளையோர், பொதுநிலையினர் கழக இயக்குனர் அருட்திரு எம்.வி.ரவிச்சந்திரன் தலைமையுரையையும், டிமசெனட் இறையியலக அதிபர் அருட்திரு எஸ்.டேமியன் ஆசியுரையையும் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு ஜோ.மவுலிஸ் வாழ்த்துரையையும் வழங்கினர்.



முதற்பிரதியை முதன்மை விருந்தினர் நேசராசாவிடமிருந்து இரத்தினசிங்கம் தம்பதிகள் பெற்றுக் கொண்டனர். மாற்றுத்திறனாளிச் சிறுவனை மையமாகக் கொண்டு கதை புனையப்பட்டுள்ளது.

இன்றைய தலைமுறை புத்தகப்படிப்பை மேற்கொள்ளும் தலைமுறையல்ல. படம் பார்க்கும் தலைமுறை என்பதை உணர்ந்து தயாரிப்பாளர் குறும் படத்தைத் தயாரித்துள்ளார். சொல்லில், பார்வையில், செயலில் ஈரத்தை உருவாக்கும் தன்மை குறைந்து செல்கிறது. ஏழைகள், துயருறுவோர் கைவிடப்பட்டோர். தனிமையில் வாழும் முதியோர் போன்றவர்கள் சிந்தும் கண்ணீர்த் துளிகளை ஒன்று சேர்த்தால் பெரிய சமுத்திரமாகிவிடும். எமது சிறிய சிறிய செயல்கள் அதனை ஆற் றுப்படுத்தும் வல்லமை மிக்கவை. இதற்கமையவே திருத்தந்தை பிரான்சிஸ் இறை இரக்கத்தின் ஆண்டைப் பிரகடனப்படுத்தியுள்ளார். இதனை நடைமுறைப் படுத்தும் வகையில் 'ஈரம்' குறும்படம் காணப்படுகின்றது. புதிய சிந்தனையை வெளிப்படுத்தி மக்களை வளப்படுத்தும் பல்துறை சார் படைப்பாளியாக ஸ்ரனி அன்ரனி விளங்குகிறார் என ரவிச்சந்திரன் தலைமையுரையில் குறிப்பிட்டார்.



அருட்திரு டேமியன் தமது வாழ்த்துரையில் "இறை இரக்கத்தின் செய்திகளைத் தாங்கி தமிழில் வெளி வரும் முதலாவது இறுவட்டு இது வாகும். பல்வேறு தேவைகளில் வாழ்வோர் மாற்று ஆற்றலுடையோர் இரக்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இவர்களுக்கு ஆறுதல் அளிக்க இந்த ஈரம் இறுவெட்டு மக்களைத் தூண்டி நிற்கும்" - என்றார்.

இசையமைப்பாளர் கிறிஸ்ரியன் சுதர்சன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். மொத்தத்தில் ஈரமில்லாத சமூகம் பிறழ்வுகளை ஓரங்கட்டுகிறது இந்தப் படம். மாற்றுத் திறனாளிகள், துன்புறுவோர் சமூகத்திடம் எதிர்பார்ப்பது என்ன? சமூகம் அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன? என்பதற்கு நாம் விடை கண்டால் ஈரம் அனைத்து உள்ளங்களிலும் ஊற்றெடுக்கும்.











## சிறப்பாக இடம்பெற்ற வடமோடி நாடகம்

மாதோட்ட புலவர் அமரர் கீத்தாம்பிள்ளையினால் இயற்றப்பட்ட 'என்றிக்கு எம்பரதோர்' வடமோடி நாடக அரங்கேற்றம் சுமார் 20 வருடங்களின் பின்னர் மீண்டும் மன்னார் முருங்கன் ஆத்திக்குழி கிராமத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

இரண்டு இரவுகளைக்கொண்ட குறித்த வடமோடி நாடகத்தின் முதல் நாள் அரங்கேற்றம் அண்மையில் இரவு ஆத்திக்குழி புலவர் கீத்தாம்பிள்ளை கலையரங்கில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

அளவக்கை பங்குத்தந்தை அருட்தந்தை சுரேந்திரன் றெவ்வல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நாடக நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அருட்கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையும்,சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, வடமாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை மார்க்கஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன்,வடமாகாண சபை உறுப்பினர்களான மருத்துவர் ஜீ.குணசீலன்,சட்டத்தரணி எஸ்.பிறிமுஸ் சிறாய்வா, மேலதிக அரச அதிபர் ஸ்ரான்ஸி டி மெல், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்ரியான் மற்றும் பிரதேசச் செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த நாடகமானது 1798ஆம் ஆண்டு எழுதப்பட்ட நிலையில் 1800ஆம் ஆண்டு முதல் பல தடவைகள் அரங்கேற்றப்பட்டது. குறித்த நாடகமானது சுமார் 20 வருடங்களின் பின் மீண்டும் முருங்கன் ஆத்திக்குழி கிராமத்தில அரங்கேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கலியுகமும் அழியுகமும்

அம்பலவாணர் இராஜரட்ணம்

உலக இயக்கமானது நான்கு யுகங்களைக் கொண்டது. அதில் கடைசியாக இயங்கும் யுகமே கலியுகம். முன்னைய எல்லா யுகங்களும் ஓர் அழிவுமின்றி நன்றாக இயங்கி முடிந்துவிட்டன. கலியுகத்தின் ஆரம்பக் கட்டமான கி.மு. 3102 வருடம் தொடக்கம் கி.பி. 1900 வருடம் வரை உள்ள சுமார் 5000 வருடங்கள் மனிதன் தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்து வந்துள்ளான். இறை பக்தி, ஏழை எளியோரான பிறருக்கு உதவி செய்தல், பண வசதியற்றவர்களுக்கு பண உதவி செய்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தியது. கடின உழைப்பும் ஆரோக்கிய வாழ்வும் நற்பழக்கமும் அவனைச் செல்வந்தனாக்கி ஏழை எளியவர்களுக்கு உதவி புரிய வைத்தது. தன் சொந்தக் காணிகளை பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், வைத்திய சாலைகள், சனசமூக நிலையங்கள், நாட்டிய மேடைகள், கோயில் மடங்கள் போன்றவை களை அமைப்பதற்கு வாரி வழங்கிய காலமது.

ஊர் மனைகளில் கொலைகள், கொள்ளைகள், துஷ்பிரயோகங்கள், களவுகள் மிக அரிதாகவே காணப்பட்டன. மனிதன் ஓரிடத்தில் இருந்து பல மைல்கள் தூரத்திலுள்ள இன்னுமோர் இடத்துக்கோ அல்லது வேறு தேசத்துக்கோ போனால் நிச்சயம் திரும்பி வருவானென்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் வேரூன்றியிருந்த காலமது. நீதி மன்றங்கள், பஞ்சாயத்துச் சபைகள், நீதியான தீர்ப்பையே வழங்கி வந்தன. கோயில்களில் பல பல அற்புதங்கள் நிகழ்ந்தன. நாட்டில் அந்தக் காலத்துக்கு ஏற்ற அறிஞர்கள் நிரம்பியிருந்தனர். பெற்றோர்களுக்கும், பெரியோர் களுக் கும், சமயக் குருமார்களுக்கும், ஆசிரியர் களுக்கும், பிள்ளைகள் மதிப்புக் கொடுத் துப் பணிந்து வாழ்ந்து வந்தனர். பொழுது போக்குக்காக வயோதிபர்கள், உடல் ஊனமுற்றவர்கள், கடும் உழைப் பாளிகள், வீட்டுப் பெண்கள், சிறுபிள் ளைகள் போன்றோர்களுக்காக வார மொருமுறையோ, மாதமொரு முறையோ ஊர் மனைகளிலுள்ள பொது அரங்குகளில் நாடகங்கள், கூத்துக்கள், இசைக்கச்சேரி கள் வைப்பார்கள். நாடகங் களில் ஆண்களே பெண் வேட மிட்டும் அல்லது பெண்களே ஆண் வேடமிட்டும் நடித்து தங்கள் கற்பை நூறு வீதம் பேணிக்காத்து வந்தார்கள். மக்களிடையே மேலோங் கியிருந்த அதீத இறைபக்தியால் மாதம் மும்மாரி பொழிந்தது. நாடுகள் செழிப் படைந்திருந்தன. அரசர்கள் செல்வச் செழிப்புடன் செங்கோலாட்சி நடத்தினர். நாடுகள் எதிலும் தன்னிறைவு பெற்றிருந்தன.

கி.பி.1900க்குப் பின் உலகை நோக்கும்போது முற்றிலும் மாறுபட்ட நிகழ்வுகளும் செயற்பாடுகளும் நடை பெறுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். கி.பி.1914 தொடக்கம் கி.பி.1918 வரை நடந்த முதலாவது உலகப் போரிலும், கி.பி. 1939 தொடக் கம் கி.பி.1945 வரை நடந்த இரண் டாவது உலகப் போரிலும் பல ஆயிரக் கணக்கான கட்டடங்களும் பல நூற் றுக்கணக்கான நகரங்களும் அழித் தொழிக்கப்பட்டன. பல இலட்சக் கணக் கான மனித உயிர்கள் காவு கொள்ளப் பட்டன.

அறிவியல், விஞ்ஞானம் என்பன எவ் வளவுதான் மேல் நோக்கிச் சென்றாலும் மனி தன் நிம்மதியற்ற வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அநீதியே தழைத்தோங்கிச் செல்கின்றது. இறையன்பு குறைந்து கொண்டே போகின்றது. பிள்ளைகள் தேவாரம் என்றால் என்னவென்று கேள்விகளுக்கு மேல் கேள்விகள் எழுப்பிப் பெற்றோரைத் திணறடிக்க வைக்கிறார்கள். காலையில் சீராகக் குளிப்பதுமில்லை. பூக்கள் கொய்து வீட்டில் விளக்கேற்றி தேவாரங்கள் படிப்பது விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில வீடுகளில் மாத்திரம் நடைபெறுகிறது. சிறுவர்கள் காலை யில் எழுந்தவுடன் படபட என்று முகத் தைக் கழுவி கடை உணவுகளை உண்டுவிட்டு பாடசாலை செல்கிறார்கள். அங்கே ஆசிரியர்களுக்கு மதிப் புக் கொடுப்பது ஒரு சில பிள்ளைகளே. மாலையில் வீடு வந்ததும் கணினி விளையாட்டிலோ, தொலைக்காட்சி பார்ப்பதிலோ தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள். பெற்றோர்கள் அப்படி ஏன் செய்கிறீர்கள்? அவை களை விட்டு விட்டுப் பாடங்களைப் படியுங்கள் என்று கூறினால், அதற்கு அவர்கள் நாங்கள் பாடசாலையில் காலை தொடக்கம் மதியம் வரை படித்து விட்டுத்தானே வருகிறோம். எங்களுக்கு ஓய்வில்லையா? என்று படாரெனப் பதிலளித்து விட்டு நீங்கள் எல்லாம் பகல் முழுக்க மாறி மாறித் தொடர் நாடகங்களையும், சினிமாப் படங்களையும் பார்க்கிறீர்கள். நாங்கள் பார்க்கக் கூடாதா? என்ற கேள்வியைக் கேட்டு விடுவார்கள். பெற்றோர்கள் ஒன்றும் கூற முடியாமல் போய்விடுவிகிறார்கள்.

வருமானத்துக்காக தொலைக்காட்சிகளில் தொடராகச் சினிமாப் படங் களையும் தொடர் நாடகங்களையும் ஒளிபரப்புகிறார்கள். இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்பெல்லாம் நடிகர்கள் மது அருந்தும் போதும் சிகரெட் புகைக்கும் போதும் அதை மறைத்துக் காட்டி சிறுவர்கள் "மது அருந்துவதாலும் புகைப்பிடிப்பதாலும் புற்று நோய், சுவாசப்பை நோய், ஈரல் நோய், இருதய் நோய் போன்ற நோய்களுக்கு ஆளாகக் கூடும். இதை உங்கள் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறுங்கள்'' என்று போட்டுக்காட்டினார்கள். ஆனால், இப்பொழுது இந்த வாசகத்தையும் போட்டுக்காட்டிக் கொண்டு நடிகர்கள் மது அருந்துவதையும், சிகரெட் புகைப்பதையும், தள்ளாடித் தள் ளாடி நரக வார்த்தைகள் பேசுவதையும் நேரடியாகவே போட்டுக் காட்டுகிறார்கள். நீங்களும் எங்களைப் போலவே பழ கிக் கெட்டுப்போங்கள் என்ற ரீதியில் நடித்துக்காட்டுவார்கள். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஏமாற்றுதல், களவெடுத்தல் போன்ற காட்சிகள் தாராளமாக இடம்பெறுகின்றன. நல்வார்த்தைகள்கூட வெளியில் வராது. இந்தக் காட்சிகளைக் கண்பார்த்து மூளைக்குச் செய்தியனுப்பும், காது கேட்டும் மூளைக்குச் செய்தியனுப்பும். அடிக்கடி இவைகள் மூளையில் பதியப்பட மனமானது கெட்டுப் போகும். குற்றச் செயல்களைச் செய்யத் தூண் டும். இதைச் சமுதாயச் சீரழிவு என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது? காலை தொடக்கம் இரவு படுக்கப் போகும் வரை தொடர் நாடகங்களையும் சினிமாப் படங் களையும் பார்த்தால், நாடு எப்படி முன்னேறும்? மனிதனைச் சோம்பேறிகளாக்குவதும், நோயாளிகள் ஆக்குவதும் தொலைக் காட்சியில் வரும் சினிமாவும், நாடகங்களுமே.

தற்காலத்தில் பிறக்கும் மனித உயிர்களுக்குப் பிறப் பிலிருந்து இறக்கும் வரை மன நிம்மதி கிடைப்ப தில்லை. சாவு எமக்கு எப்பொழுதும் வரலாம் என மனிதர்கள் ஏங்கிக் கொண்டே இருக்கின்றார்கள்.



# நீர்வேலிக் கிராமத்தின் வளர்ச்சிக்கு அச்சாணியாகத் திகழ்ந்தவர்

## ஸ்ரீமான் அத்தியார் அருணாசலம் ஜே.பி.



செயற்கரிய சேவைகள் செய்து நீர்வேலிக் கிராமத்தைப் பலவழிகளிலும் சிறப்புற வைத்தவர் முதலியார் அத்தியார்.

1887 ஆம் ஆண்டு நீர்வேலி மத்தியில் வாழ்ந்த காசிநாதர் அருணாசலம் – நாச்சிப்பிள்ளை தம்பதியினருக்கும் மகனாகப்பிறந்தவரே அத்தியார் அருணாசலம். நிறைந்தி கல்விமானாகவும், சமயப்பக்தனாகவும், சமூகத்தொண்டனாகவும் விளங்கிய இவர், நீர்வேலிக் கிராமத்தின் வளர்ச்சிக்கு அச்சாணிபோல அமைந்தவர் என்றால் ஏற்புடைத்தாகும்.

"உருகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய உருளுகின்ற நீர்வேலிக் கிராமத்தின் வளர்ச்சிக்கு அச்சாணிபோல அமைந்தவர். அவர் ஆற்றிய பணிகள் என்றுமே மறக்கமுடியாதவை. கிராமத்தின் வளர்ச்சிக்கு கல்விப்பணியே முக்கியமானதென்பதை உயர்ந்த அத்தியார் 19ஆம் நூற்றாண்டிலே யாழ்.குடாநாட்டில் சைவமும் தமிழும் வளரத் தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர், ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர், சிறுப்பிட்டி சி.வை .தாமோதரம் பிள்ளை,கோப்பாய் சபாபதி நாவலர், புத்தூர் மழவைராயர் கந்தையா, சேர்.பொன்.இராமநாதன் பருத்தித்துறை வேலாயுதம் போன்றவர்கள்போல கல்விக் கூடம் அமைத்துக் கல்விப்பணியாற்றிய பெருமைக்குரியவர்.

நீர்வேலியின் ஸ்ரீலஸ்ரீ சிவ சங்கரபண்டிதரால் ஆரம்பித்து, தமிழ் இலக்கணம், இலக்கியம், சமஸ்கிருத வகுப்புகள் நடத்தப்பட்டு வந்த திண்ணைப் பள்ளிக் கூடம் அவர் மகன் ஸ்ரீலஸ்ரீ சிவபிரகாச பண்டிதரால் சைவப்பிரகாச வித்தியாசாலையென்ற பெயரில் நடத்தப்பட்டு வந்தது. இந்த வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் யாழ். இந்துக் கல்லூரியில் மேல் நிலைக் கல்வியையும் கற்றுத்தேறினார்.தனது 20 ஆவது வயதிலே 1907இல் கொழும்பில் ஆங்கிலேயரால் நடத்தப்பட்டு வந்த கொம்மேர்சல் நிறுவனத்தில் களஞ்சியப் பொறுப்பாளராக நியமனம் பெற்று, கடமையிலே கண்ணியமானவராகவும் கடமையுணர்ச்சி மிக்கவராகவும் சேவை செய்து, மேல் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்ட பெரு மைக்குரியவாராக விளங்கினார்.

இவர் கொழும்பில் கடமையாற்றும் காலத்தில் யாழ்ப்பாண சிவப்பிரகாச பண்டிதர் காலமானதும், அந்தப் பாடசாலையைப் பாதிரிமார் வாங்குவதற்கு முயற்சி செய்தனர்.

இந்தச் செய்தியை அறிந்த அத்தியார் உடனடியாகச் செயற்பட்டு இரண்டு பரப்புக்காணியில் அமைந்த இந்தப் பாடசாலையை வாங்கியதோடு, மேலும் அயலிலுள்ள காணிகளையும் தானே வாங்கி பிரமாண்டமான கட்டட அமைப்புகளோடு, மைதான வசதியும் கொண்டதாக 1928ஆம் ஆண்டு அத்தியார் தமிழ்ப் பாடசாலை ஆங்கிலப் பாடசாலையென இரு பாடசாலைகளையும் ஒன்றாக ஆரம்பித்து நடத்தினார்.

இந்தப்பாடசாலை அயல் கிராமங்களான கோப்பாய், சிறுப்பிட்டி, அச்செழு பகுதிமக்களுக்கும் கல்வி போதிக்கும் கல்வி நிலையமாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப்பணிக்கெல்லாம் எவரிடமும் பணி உதவியோ, பொருளுதவியோ பெறவில்லை. தனது உடைமைகளை விற்றே இந்தப் பணியைச் செய்த பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார்.

கல்விப்பணியாற்றி வந்த அத்தியார் சமயப் பணிகளிலும் ஈடுபட்டு சமயத் தொண்டாற்றிய பெருமைக்குரியவர். நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கந்தபுராணபடிப்பை மரபுபிறளாது தொடர்ந்து நடத்திய சிறப்புக்குரியவராகத் திகழ்ந்தார்.

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயில் வாய்க்கால் தரவைப்பிள்ளையார் கோயில்களிலும் புராணபடனங்கள் செய்து வந்தமை மறக்கமுடியாதவையே. கல்வித் தொண்டு சமயத்தொண்டுகள் செய்து சிறப்புப் பேறுபெற்ற இவர் சமூகப் பணி மூலமும் கிராம வளர்ச்சிக்கு உதவிய உத்தமர் ஆவார். நீர்வேலி கிராமச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், நீர்வேலி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வெங்காயச் சங்கம் என்பன உருவாக்கி, விவசாயிகளின் வளர்ச்சிக்கு உதவிய உத்தமராக விளங்கினார்.

அன்னார் தனது 74ஆவது வயதில் 1961 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

த.பரராசசிங்கம்
செயலாளர், பழையமாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெற்றியின் பலன்கள்

பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் தனிப் பட்ட தோற்றத்தைக் கொண்டுள்ளோம்.
இருப்பினும் ஒரு குறிப்பிட்ட மக்களின் முகம், மூக்கு, கண்கள், உதடு, விரல்கள் போன்றவை ஒரே மாதிரியான வடிவத்தைக் கொண்டிருக்கும். அப்படி ஒரே மாதிரியான வடிவத்தைக் கொண்டிருப்பவர்களின் குணநலன்களைப் பார்த்தால், சற்று ஒரே மாதிரி இருக்கும்.
இங்கு ஒருவரின் நெற்றியின் வடிவம் அவரைப் பற்றி என்ன சொல்கிறது என்பது குறித்து கொடுக்கப் பட்டுள்ளது. நீங்களும் உங்கள் நெற்றி உங்களைப் பற்றி என்ன சொல்கிறது என்பதைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

### பரந்த நெற்றி

பலருக்கும் பரந்த நெற்றி பிடிக்காது. ஏனெனில் இது தலையில் வழுக்கை விழுந்தது போன்ற தோற்றத்தை அளிக் கும்.
ஆனால் அப்படி பரந்த நெற்றியைக் கொண்டவர்கள் மிகவும் புத்திசாலிகள். எதையும் அதிவிரைவில் கற்றுக்கொள் ளும் திறன் கொண்டவர்கள். இவர்களால் முன்கூட்டியே நடக்கப் போவதைச் சரியாக கணிக்க முடியும்.

### குறுகிய நெற்றி

குறுகிய நெற்றியைக் கொண்டவர்களும் புத்திக் கூர்மை உள்ளவர்கள். இவர்கள் மிகவும் உணர்ச் சிவசப்படக் கூடியவர்கள்.
இவர்கள் தமது மனம் என்ன சொல்கிறதோ அதை மட்டுமே செய்பவர்கள். மேலும் எப்போதும் தனிமையை விரும்புபவர்கள், அதற்காக கூட்டத்தைக் கண்டு அஞ்சுபவர்கள் அல்ல.

### M வடிவ நெற்றி

இந்த வகை நெற்றியைக் கொண்டவர்கள் மிகுந்த கற்பனை வளம் மற்றும் படைப்பாற்றலைக் கொண்டிருப்பார்கள். மொத்தத்தில் இந்த வகை நெற்றியைக் கொண்டிருப்பவர்கள், படைப்புக் கலைஞர்களாக மற்றும் புதுமையாளர் களாக இருப்பார்கள்.

### மலை வடிவ நெற்றி

இந்த மாதிரியான நெற்றியைக் கொண்டவர்கள் மிகவும் அரிது. எனவே இந்த வடிவ நெற்றியைக் கொண்டவர்களை அதிர்ஷ்டசாலி எனலாம்.
இந்த வகை நெற்றியினர் மிகவும் மென்மையானவர்கள் மற்றம் நட்புக் குரியவர்கள்.
மிகவும் கருணை உள்ளம் கொண்டவர்கள். தன் குறிக்கோளில் தெளிவாக இருப் பார்கள் மற்றும் நம்பிக்கையுடன் தம் கருத்தைச் சொல்வார்கள்.

### வளைவான நெற்றி

வளைவான நெற்றியைக் கொண்டவர்கள் எப் போதுமே நேர்மறையான உணர்வுகளுடனும் சந்தோசமான மனநிலையுடனும் இருப்பவர்கள். மேலும் எப்போதும், எதிலும் முன் நிற்க ஆசைப் படுவார்கள்.

### முக்கோண நெற்றி

சிலருக்கு முக்கோண வடிவில் நெற்றி இருக்கும். இந்த வகையான நெற்றி யைக் கொண்டவர்கள் எதையும் வெளிப்படையாகப் பேசுவார்கள். தங்களது தனிப்பட்ட மகிழ்ச்சி மற்றும் தேவை களுக்காக சமரசம் செய்யத் தயாராக இருக்கமாட்டார்கள். இவர்கள் ஒருவரை நேசித்தால், மன தளவில் உண்மையாக நேசிப் பார்கள்.

# பண்பாட்டுப் பெருவிழா ஆய்வரங்கு

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா ஆய்வரங்கு நாளை மறுதினம் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் ஆரோக்கியநாதர்துரம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமை தாங்குகின்றார். மறுதினம் இரண்டாம் நாள் நிகழ்வுகள் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஹாஸிம் புலவர் அரங்கில் காலை 9 மணிக்கு, யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ரி1)

# முதலமைச்சர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டோர்-மாவட்ட ரீதியாக

### யாழ்.மாவட்டம்

அந்தோனி சவரிமுத்து, ஊர்காவற்றுறை, நட்டுக்கூத்து/தென்மோடி, யாக்கோப்பு அடைக்கலமுத்து நெடுந்தீவு நாட்டுக்கூத்து, வைரவன் தில்லையன். செல்வராசா, நல்லூர் இசை நாடகம், நாகமுத்து நல்லதம்பி சாவகச்சேரி, இலக்கியம். கவிதை, சுப்பர் துரைசிங்கம், உடுவில் இலக்கியம்.சிறுவர் சிறுகதை இலக்கியம் அமரசிங்கம் இராசதுரை தெல்லிப்பழை இலக்கியம், சிறுகதை, கணபதிப்பிள்ளை சச்சிதானந்தம் சாவகச்சேரி இலக்கியம், திருமதி கிருஷாந்தி இரவீந்திரா உடுவில் பரத நாட்டியம், தில்லைநாதன் சண்முகசுந்தரம், காரைநகர் இசைத் துறை/மிருதங்கம், தில்லையம்பலம் தவராசா பருத்தித்தறை, கிராமியக் கலை, பொன்னர் இராசையா காரைநகர், ஓவியம்

### கிளிநொச்சி மாவட்டம்

செல்லையா சுந்தரம்பிள்ளை பச்சிலைப்பள்ளி, இசைத்துறை/ஆர்மோனியம், மந்தையன் கறுப்பையா, பச்சிலைப் பள்ளி, இசைத்துறை/புல்லாங்குழல்

### முல்லைத்தீவு மாவட்டம்

தர்மலிங்கம் செல்வராசா, புதுக் குடியிருப்பு நாடகம்

### மன்னார் மாவட்டம்

ஏ.டி.தேவதாசன், நானாட்டான் நாடகம், சந்தியாப்பிள்ளை அருளானந்தம் மாந்தை மேற்கு, இசைத் துறை/ஓகன், சபாரட்ணம். சிவதாசன், மாந்தை மேற்கு இசைத் துறை/வயலின்

### வவுனியா மாவட்டம்

இளையதம்பி இரத்தினசிங்கம் வவுனியா வடக்கு, சிந்து நடைக் கூத்து, செந்தில்மதி பரமசிவராஜா வவுனியா இசைத்துறை.வீணை, வதனி சிறிதரன் வவுனியா இசைத் துறை/வாய்ப்பாட்டு,

### சிறந்த நூற்பரிசுத் தேர்வு

சமூகவிஞ்ஞானம் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி, ஆனந்த மயில் நித்திலவர்ணன் ஐயனார் வீதி பருத்தித் துறை, ஆய்வுநூல் இலங்கையின் சைவத் தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்ஓர் ஆய்வு திருச்செல்வம் செல்வ மனோகரன், 41 கோணியடி திருநெல்வேலி யாழ்ப்பாணம்,
ஏனையவை காலம் கடந்த நாள்கள் (பயண அனுபவப்பதிவு) குருசுமுத்து இராயப்பு 165 வேம்படி வீதி, யாழ்ப் பாணம்,
நாடகம்-கிணற்றங்கரை, திருமதி ஶ்ரீலேக்கா பேரின்பகுமார் கதிரமலை சிவன் கோயிலடி, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம், புதுக் கவிதை, கிளுவன் வேலியும் கிடுகுத் தட்டியும் இராமசந்திரன் சுரேஸ் மில் ஒழுங்கை G.P.S வீதி கல்வியங்காடு, சிறுகதை இரக சியமாய் கொல்லும் இருள் இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன் 'சாத்வீக பிரஸ்தம்' இமையாணன் கிழக்கு உடுப்பிட்டி, நாவல் UP83 எஸ். ஏ. உதயன் 8ஆம்வட்டாரம் ஞானமணியார் ஒழுங்கை பேசாலை, சிறுவர் இலக்கியம், மயில் இறகு, திருமதி ஶ்ரீலேக்கா பேரின்பகுமார் கதிர மலை சிவன் கோயிலடி புகையிரத நிலைய வீதி சுன்னாகம், மரபுக்கவிதை சீதைக் கோர் இராமன் மைதிலி தயாபரன் இல.38 இராசதுரை வீதி வைரவ புளியங்குளம் வவுனியா, குழந்தைகள் இலக்கியம் பிள்ளைத் தமிழின்பம் இராமச்சந்திரன் சுரேஸ் மில் ஒழுங்கை G.P.S வீதி கல்வியங்காடு.

ஆ.கீர்த்தனா

# கண்ணைத் திறந்தது கண்காட்சி

நல்லைக் கந்தனின் உற்சவகாலத்தில் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் அவர்களது அலுவலக மண்டபத்தில், தற்காலத் தேவைக்கேற்றதும், மிகவும் அவசியமானதுமான விடயங்களை உள்ளடக்கி, மனித வாழ்வுக்கு ஆரோக்கியத்தை ஊட்டக்கூடிய அறிவுரைகளையும், சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் வெளிக்காட்டிய கண்காட்சி மக்களுக்கு ஓர் அரிய விருந்தாகும்.
தற்காலத்தில் இளைய தலைமுறையினரிடையே அதிகரித்துவரும் புகைத்தல் மற்றும் போதைப்பொருள்களுக்கு அடிமையாவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் கண்காட்சி படம்பிடித்துக் காட்டியது.
நோய்நொடியின்றி மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்குரிய சத்து நிறைந்த உணவுகள் பற்றியும், இயற்கையின் கொடையாகிய பழங்களை உண்ணுவதால் ஏற்படும் பயன்களைப் பற்றியும், பச்சைக் காய்கறிகளில் காணப்படும் ஊட்டச்சத்துக்கள் பற்றியும் அளிக்கப்பட்ட விளக்கங்கள் பயன்மிக்கவையாகக் காணப்பட்டன.
உடல் ஆரோக்கியம், உணவுப் பழக்க வழக்கங்கள் மட்டுமன்றி, பொதுவான, தற்கால வாழ்க்கைக்கு அத்தியாவசியமான, அன்றாடவாழவில் கடைப்பிடிக்க வேண்டிய தற்காப்புமுறைகள் பற்றிய விளக்கங்களும் மிகவும் பயனுள்ளவையாகவே இருந்தன. குறிப்பாக வேகம் விவேகமல்ல, வீதி விபத்து, அதனைக் கட்டுப் படுத்தும் வழிவகைகள் பற்றிய படக்காட்சிகள் சிந்தனையைத் தூண்டும் விதமாக அமைந்திருந்தன.
பிறப்பு முதல் இறப்பு வரையும் அதாவது தாய், சேய் பராமரிப்பு முதல் மயானப் பராமரிப்புவரை உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்குச் சேவையாற்றி வருவதை உறுதிப்படுத்தும் நோக்கில் தாய்ப்பால், சத்துணவு, கட்டிளமைப் பருவம் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய கண்காட்சிகள் மிகவும் பயனுடையதாகவே இருந்தன.
தியானம், ஓய்வு, தன்னம்பிக்கை, போசாக்கு, நல்ல நண்பர்கள், போதையிலிருந்து விடுபடல் ஆகியவற்றை அவதானித்து, முழுமையானதொரு வாழ்க்கையை வாழவேண்டுமென்ற எண்ணம் அனைவரிடத்தும் மேலெழ கண்காட்சி வழிகாட்டி நின்றது.
அன்றாடம் வீடுகளில் சேரும் கழிவுகளைச் சேகரித்துப் பயன்படுத்தும் முறைமை, வீட்டுத் தோட்டத்தைக் குறைந்த செலவில் உருவாக்கி, அதன் மூலமாகச் சிறியதொரு வருமானத்தை எவரும் ஈட்டிக்கொள்ள முடியுமென்ற தன்னம்பிக்கையை மனங்களில் இந்தக் கண்காட்சி விதைத்துச் சென்றது.
மொத்தத்தில் இன்றைய இளைஞர்களின் பரிதாப நிலையையும், அவர்கள் எதிர்காலத்தில் நற்பிரசைகளாக வாழுவதற்கு கைக்கொள்ளவேண்டிய நல்ல பழக்க வழக்கங்கள், தவிர்க்கவேண்டிய தீயபழக்கங்கள், போன்றவற்றைத் துல்லியமாக வெளிப்படுத்தியதோடு, மனிதகுலத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைப் படம்பிடித்துக் காட்டி, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும், ஆரோக்கியமுள்ளதாகவும் ஆக்கும் வழிமுறைகளை தெளிவுபடுத்தி, பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் காந்தம் போன்றதொரு நிலமையை ஏற்படுத்தி, பார்த்தவர்களின் கண்களைத் திறந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சைவத் தமிழ் உலகின் அழியாச்செல்வம் செல்வராசா

சிவஞானம் சிறீதரன்
நாடாளுமன்ற உறுப்பினர்

தமிழ்த் தேசியத்தை தன் ஆன்மாவில் சுமந்து தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரிய பணி புரிந்த சேவையின் இமயம் சாய்ந்தமை தமிழ் கூறும் நல்லுலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அமரர் செல்லத்துரை செல்வராசா (செல்வா ஐயா) ஆற்றிய பணி கள் வார்த்தைகளுக்குள் அகப்படாதவை. இவர் புலம் பெயர்ந்து இலண்டனில் வாழ்ந்தாலும் தாயக உறவுகளுடன் இணைந்து தாயகத்துக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர்.

போரின் கொடூரத்தால் வடுக்களைத் தாங்கி நின்ற மக்களின் துன்பங்களில் தானும் பங்கு கொண்டு போர்க் காயங்களின் வலி தணிய மாமருந்தாக பல செயற்பாடுகளை எம்மக்களுக்கு நல்கிய செயல்வீரனாகத் திகழ்ந்தவர்.

எம்மண்ணின் பேரவலங்களையும் ஐ.நா. வரை கொண்டு சென்ற சாத்வீகப் போராளியான இவ்வீரமகன் புலம்பெயர் தேசத்தில் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக தன் குரலை உரத்து ஒலிக்கச் செய்தவர்.

'நம்நாடு' என்ற தனது 'வாராந்தப் பத்திரிகையூடாக சர்வதேசத்துக்கு ஈழத்தவரின் அவலநிலையையும், நில அபகரிப்பையும், மீள்குடியமர்வுத் தடங்கல்களையும், ஆட்சியாளர்களின் முகமூடித் திரைகளையும் வெளிச்சமிட்டுக் காட்டியவர்.

கடும் வறட்சி நிலவிய காலங்களிலும், இயற்கை இடர்களால் மக்கள் அவலப்பட்ட வேளையிலும் இடரிலும் தளராது மக்கள் வாழ்வு செழிக்க மகத் தான உதவிகள் நல்கியவர்.

தாயகத்தின் வடக்கிலும், கிழக்கிலும் பல ஆன்மிக மனித நேயப்பணிகளை முனைப்புடன் முன்னெடுத்து வந்த இவர் பசுமைத் தாயகத்தைத் தனது இலட்சியக் கனவாகக் கொண்டிருந்தமைக்கு மாங்குளத்தில் பல பெண் தலைமைத்துவ மற்றும் மாற்றுத்திறனாளிக் குடும்பங்களுக்கு வழங்கிடும் வகையில் இயற்கை வேளாண் பண்ணைகளை உருவாக்கி செயற்படுத்தி வருகின்றமை சிறந்த சான்றாகும்.

ஆன்மிகம், அரசியல், தமிழ்ப்பற்று என முழுமை மிக்க வீர யுகத்தின் வீர மகனாக வாழ்ந்த செல்வா ஐயா அமரத்துவம் அடைந்தாலும் அவரின் இலட்சியப்பணிகள் அமரத்துவம் அடையாது காலத்தில்; நிலைத்து நிற்கும். இவரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டும் எனப் பலரும் பிரார்த்தித்தாலும் அவர் மீண்டும் எம் மண்ணில் பிறக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் நீளநினைந்து நித்தமும் கை தொழுவோம்.

"தமிழுக்கு தொண்டு செய்வோன், சாவதில்லை"

# திருவாசகம் மீது காதல் கொண்ட தொண்டன் கலாபூசணம் தம்பு துரைராசா

வே.பொ.மாணிக்கவாசகர்

திருவாசகத்தின் மீதும், திருவாசக சுவாமி என அழைக்கப்படும் ஸ்ரீ சபாரெத்தின சுவாமிகள் மீதும் கொண்ட அளவிலாப் பற்றுக் காரணமாக, அருள்மிகு திருக்கேதீச்சரத் திருத் தலத்திலே ஸ்ரீ சபாரெத்தின சுவாமிகளின் பேரால் மடம் அமைத்துப் பணியாற்றி வருகின்றார் சிவனடியார் தம்பு துரைராசா. இவரைப்பற்றி சைவ சமயப் பெரியோர்கள், அறிஞர்கள், அடியார்கள் எனப் பலரும் நன்கு அறிவர்.

எளிமையான தோற்றமும், எடுப்பான நெற்றியிலே திருவெண்ணீறும் துலங்க எந்நேரமும் மடத்திலே ஏதாவது திருப்பணி செய்து கொண்டேயிருப்பவர்தான் த. துரைராசா.

அகவை 93 ஐ நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் முதுமையின் அடையாளங்களான சோர்வு, களைப்பு அனைத்தையும் துச்சமெனத் தூக்கி வீசிவிட்டு இளமையான மனதுடன் இன்றுவரை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார். எறும்பின் சுறுசுறுப்பும், எருதின் உழைப்பும் என்று சொல்வார்களே இவையிரண்டும் கலந்து பிறந்த பிறப்புத்தான் இவரோ என்று எண்ணத்தோன்றும் இவரது செயற்பாடுகளை அவதானிக்கும்போது.

ஆண்டுதோறும் ஆன்மிகப் பெருவிழாவில் அறிஞர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தல், மாணிக்க வாசகப் பெருமானது குருபூசையைச் சிறப்பாக நடத்தி மடத்திலே அடியார்களுக்குத் திருவமுது (அன்னதானம்) அளித்தல், திருவாசக முற்றோதல் நடத்துதல், திருவாசக சுவாமிகள் ஸ்ரீசபாரெத்தின சுவாமிகளின் குருபூசையை நடத்தல், சிவராத்திரியின்போதும், ஆலய உற்சவ தீர்த்தத்தின்போதும் திருவமுது அளித்தல், யாத்திரிகர்களின் வசதி கருதி தங்குமிட வசதிகள் வழங்குதல், ஆலயச் சூழலிலே உள்ள ஆவினங்களின் தாகம் தீர்ப்பதற்கென விசேட தொட்டி அமைத்து நீர் நிரப்பி விடுதல் என ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்து மகிழும் சிறப்புக்குரிய பெரியவர் இவர்.

தலைநகர் கொழும்பிலே, பம்பலப்பிட்டிப் பகுதியிலே அமைந்துள்ள தனது இல்லத்துக்கு 'திருவாசகம்' எனப் பெயரிட்டவர் என்றால், திருவாசகம் மீது இவர் கொண்ட பற்றுதலுக்கு வேறு என்ன சான்று வேண்டும்? இவர் பூசிப்பதும், வாசிப்பதும் நேசிப்பதும் ஏன் சுவாசிப்பதும்கூடத் திருவாசகம்தான் எனத் திருமதி வசந்தா வைத்தியநாதன் பெருமையோடு குறிப்பிடுவார்.

> "எளிமையான தோற்றமும், எடுப்பான நெற்றியிலே திருவெண்ணீறும் துலங்க எந்நேரமும் மடத்திலே ஏதாவது திருப்பணி செய்து கொண்டேயிருப்பவர்தான் த. துரைராசா."



புத்திரப் பாக்கியத்தை 'நன்மக்கட் பேறு' என்பர். அதுபோலவே இவரது பிள்ளைகள், மருமக்கள் அனைவருமே ஐயா அவர்களுக்குக் கிடைத்த பெரும் பேறு என்பதா? அல்லது அவர்களுக்கு இப்படி ஒரு தந்தை, மாமனார் கிடைத்தது அவர்கள் பெற்ற பேறு என்பதா? என்பதற்கு என்னிடம் விடை இல்லை. எது எதனை விஞ்சி நிற்கிறது என்பது ஒரு பட்டிமன்றத்துக்குரிய அருமையான தலைப்பு என நினைக்கின்றேன். தமிழருவி சிவகுமாரன் தலைமையில் அப்படி ஒரு பட்டிமன்றம் நடப்பது போன்ற குறும்புத்தனமான சிந்தனை என் மனதிலே ஓடிக்கொண்டிருக்கிறது.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். இவருக்கு மனைவியே ஒரு வரம்தான். இன்முகத்தோடு இவரது அனைத்துச் செயற்பாடுகளிலும் கை கொடுத்துத் துணை புரிபவர் திருமதி இரத்தினேஸ்வரி துரைராசா அம்மாள்.

அன்றில் பறவைகள்போல் என்றும் இணை பிரியாது காட்சிதரும் இவர்கள் நூறாண்டு காலம் வாழ அருள்புரிய வேண்டுமென ஐயாவின் 93 ஆவது பிறந்தநாளில் புனித பாலாவிக் கரைமீதமர்ந்த கௌரியம்பாள் உடனுறை திருக்கேதீச்சரப் பெருமானை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பிரச்சினையை உலகுக்குச் சொல்லத்தான் ஊர்வலமாம்

தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை ஊர்வலத்தின் ஊடாக உலகுக்குச் சொல்ல முடியும் என்று தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், இந்த ஊர்வலம் ஏற்கனவே கால தாமதமாகி விட்டதாகவும் முன்னரே செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒன்று என்றும் பொதுமக்கள் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊர்வலம் தொடர்பில் விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு கலைத்தூது கலையகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்படி விளக்கத்தை முன்வைத்தார்.

போரின் பின்னர் வடக்கு கிழக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கத் திணிப்புக்கள் இடம்பெறுகின்றன. எமது பொருளாதார வளங்கள் சுரண்டப்படுகின்றன. இந்த அரசின் காலத்திலேயே இவை நடைபெறுகின்றன.

அரசமைப்பு உருவாக்கம் நடைபெறுகின்றது. வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தில் கூட்டாட்சி முறைமையிலான அதிகாரப் பகிர்வே தேவை. இதற்கு தமிழ் மக்கள், கூட்டமைப்புக்கு ஆணை கொடுத்திருக்கின்றனர். அரசமைப்பு உருவாக்க முயற்சியை ஊர்வலம் ஊடாகக் குழப்புவது நோக்கம் அல்ல.

தமிழ் மக்கள் அரசுக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கும், எமக்கு இன்னமும் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை உலகுக்குச் சொல்லவுமே இந்த ஊர்வலம் நடத்தப்படுகின்றது. மக்களைக் கிராமங்களில் சென்று சந்தித்த போது, ஊர்வலம் கால தாமதமாகி விட்டது என்று சொல்லியிருக்கின்றார்கள். இது ஏற்கனவே செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள் – என்றார். (வ-5-ரி3)

## ஹுசேன்....

பேச்சு நடத்தினார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் ஆகியோரது இலங்கைக்கான பயணங்களின் பின்னர் கொழும்பு அரசின் நல்லிணக்க முயற்சிகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் கண்டுள்ள முன்னேற்றம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழித்தல் – புதிய சட்டத்தை உருவாக்குதல், காணாமற்போனோர் அலுவலகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கையின் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை தொடர்பில் அரசு – ஐ.நா. ஒன்றிணைந்தே தீர்மானம் எடுக்கப்படும் என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ – மூன் தனது இலங்கைப் பயணத்தின் நிறைவில் தெரிவித்தார்.

## 17 000 போதை...

ஹெரோயின் உள்ளிட்ட ஏனைய போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ளவர்கள் தொடர்பாக தொகைமதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டது. உலக சுகாதார அமைப்பாலேயே இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. 17 ஆயிரத்து 457 பேர் போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களுள் 13 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

போதைப் பொருள் பயன்படுத்துவோர் மற்றும் எச்.ஐ.வி. தொற்று உள்ளிட்ட நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். (வ-5)

## பொருத்து...

வலியுறுத்தினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

மீள்குடியேற்ற அமைச்சினால் 21 லட்சம் ரூபா செலவில் பொருத்து வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டது. இதற்குப் பதிலாக சூழலுக்கு ஏற்றதும், செலவு குறைந்ததுமான கல் வீடுகளை அமைக்கலாம் என்று கூட்டமைப்புக் குறிப்பிட்டிருந்தது. இதனையடுத்து மேற்படி திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

தற்போது மீள்குடியேற்ற அமைச்சினால் 8 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 15 லட்சம் ரூபா செலவில் பொருத்து வீட்டை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பொருத்து வீட்டுத் திட்டத்தை வடக்கில் நடைமுறைப்படுத்த மும்முரமாக இருந்த கொழும்பு அரசின் அமைச்சரே இதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினர். இதன்போது, பொருத்து வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகளைக் கைவிடுமாறு கோரினர். இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொருத்து வீடு – கல் வீடு இரண்டுமே மக்களின் முன்பாகத் தெரிவாக வைக்கப்படும். மக்கள் விரும்புவதை வழங்குவோம் என்று பதில் வழங்கினார். (வ-5)

## வித்தியா...

செய்யும் என்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்று நேற்று அறிவித்தது.

இந்த வழக்கில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவரை யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பது பற்றிய கோரிக்கைக்கு யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகரின் பதிலை மன்று கோரியிருந்தது. அதன்படி, இந்த வழக்கின் சந்தேக நபரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதற்கான பாதுகாப்பு, கட்டட வசதிகள் இன்னும் இல்லை. அதனை ஏற்படுத்தியபின்னர் தடுத்து வைக்கலாம் என்று சிறைச்சாலை அத்தியட்சகரால் பதில் அனுப்பப்பட்டது.

நேற்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி ஏ.றஞ்சித்குமார் மன்றில் முன்னிலையானார். வழக்கின் தற்போதைய நிலை, விசாரணை அறிக்கையின் தன்மை குறித்து மன்றில் கேட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை அறிக்கையைச் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் ஒப்படைத்துள்ளனர். சந்தேக நபர்களை அடையாளம் காட்டுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் உரிய முறையில் வழக்குத் தாக்கல் செய்யும் என்று நீதிவான் தெரிவித்தார்.

இந்த வழக்கில் முதல் 9 சந்தேக நபர்களுக்கு யாழ். மேல்நீதிமன்றினால் 3 மாதங்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. ஏனைய 3 சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டது.

கடந்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது மாணவி வித்யா கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து குடாநாட்டில் போராட்டங்கள், ஊர்வலங்கள் இடம்பெற்று பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. (4,37)

## ஐ.தே.கவுடன்

தினர். அந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்காக 11 அமைச்சுக்களைக் கேட்டு அவர்கள் பேரம் பேசினர்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

தேசிய அரசையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் மகிந்த தரப்பினர் எதிர்த்து வருகின்றனர். தேசிய அரசின் உருவாக்கத்தைத் தடுப்பதற்கு முயற்சித்தவர்களே மகிந்த தரப்பில் இருக்கும் இரண்டு புள்ளிகள்தான்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 95 ஆசனங்களையும் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்ற போதிலும், அந்தக் கட்சியால் தனித்து ஆட்சி அமைக்க முடியாமல் போனது.

இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு மகிந்த தரப்பின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் கைகொடுக்க முன்வந்தனர்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் ஆறும், இராஜாங்க அமைச்சுக்கள் இரண்டும், பிரதி அமைச்சுக்கள் மூன்றும் தந்தால் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு தருவோம் என்று அந்த இருவரும் கூறி அந்தக் கட்சியுடன் பேச்சு நடத்தினர். அந்த முயற்சி வெற்றியளிக்காததால் இப்போது தேசிய அரசை அவர்கள் குறை கூறுகின்றனர்.

தேசிய அரசில் அதிருப்தியடைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பலர் அமைச்சுப் பதவிகளை விட்டுவிட்டு கூட்டு எதிர்க் கட்சியில் அதாவது மகிந்த தரப்பில் இணையப் போவதாக அவர்களே கூறி வருகின்றனர். அப்படியான சம்பவம் எதுவும் நடக்காது. தேசிய அரசு தொடர்பில் நாம் அனைவரும் திருப்தியடைகின்றோம். மகிந்த தரப்பில் இருப்பவர்களுள் அதிகமானவர்கள் இன்னும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நேசிப்பவர்கள். அங்கிருந்து இங்கு வருவார்களே தவிர இங்கிருந்து அங்கு செல்லமாட்டார்கள் – என்று தெரிவித்தார். (வ-5)

## இலங்கை..

இலங்கை அரசு பயணிக்கும் பாதை சிறந்த எதிர்காலத்தைத் தோற்றுவிக்கும் என ஐ. நா. பொதுச் செயலாளர் பான் கீ – மூன் தெரிவித்தார்.

ஐ.நா.வின் 71ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடர் இலங்கை நேரப்படி நேற்றுப் பிற்பகல் நியூயோர்க் நகரிலுள்ள ஐ. நா. சபையின் தலைமையகத்தில் ஆரம்பமானது. அதில் சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

மியன்மார், இலங்கை, கொலம்பியா மற்றும் சைப்பிரஸ் ஆகிய நாடுகளின் எதிர்காலம் பெரியளவில் முன்னேற்றம் காணும் எனவும் பான் கீ மூன் நம்பிக்கை வெளியிட்டார்.

ஐ. நா. பொதுச் செயலாளர் பான் கீ – மூனின் தலைமையில் ஆரம்பமாகிய இக்கூட்டத்தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 193 நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். (வ-5)

## மாற்றுத் திறனாளிகள்

தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவை 4 ஆயிரத்து 163 பேர் பெறுகின்றனர். மாற்றுத் திறனாளிகள் நிலைக்கு உள்ளாகியுள்ள போதிலும், 11 ஆயிரத்து 625 பேர் எந்தவித கொடுப்பனவுகளையும் பெறவில்லை.

ஏனைய மாகாணங்களில், மாகாண சபைகள் ஊடாக உதவித் தொகை வழங்கப்படுகின்றது. ஆனால், வடக்கு மாகாண சபை இதைச் செய்யவில்லை. அவர்களால் செய்யக் கூடியதாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

எது எப்படியிருந்த போதிலும், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை, சகல மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2017ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறினார். (வ-5)

## முதல் 6

துறைகளின் மூலம் ஆயிரத்து 6 மில்லியன் ரூபா வடக்கு மாகாண சபைக்கு வருமானமாகக் கிடைத்தது என்று வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முத்திரை வரியாக 349.3 மில்லியன் ரூபா வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதில் ஜனவரி மாதம் 190 மில்லியன் ரூபாவும், பெப்ரவரி மாதம் 17 மில்லியன் ரூபாவும்,

மார்ச் மாதம் 8.3 மில்லியன் ரூபாவும், ஏப்ரல் மாதம் 60 மில்லியன் ரூபாவும், மே மாதம் 14 மில்லியன் ரூபாவும், ஜூன் மாதம் 60 மில்லியன் ரூபாவும் வடக்கு அரசுக்கு வருமானமாகக் கிடைக்கப்பெற்றது.

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக 623 மில்லியன் ரூபா வருமானம் இதே காலத்தில் ஈட்டப்பட்டது. ஜனவரி மாதம் 118 மில்லியன் ரூபாவும், பெப்ரவரி மாதம் 113 மில்லியன் ரூபாவும், மார்ச் மாதம் 92 மில்லியன் ரூபாவும், ஏப்ரல் மாதம் 97 மில்லியன் ரூபாவும், மே மாதம் 116 மில்லியன் ரூபாவும், ஜூன் மாதம் 87 மில்லியன் ரூபாவுமாக இந்த நிதி வடக்கு அரசுக்கு வழங்கப்பட்டது.

வாகனப் பதிவு வருமானமாக 34.5 மில்லியன் ரூபா பெறப்பட்டது. ஜனவரியில் 6.5 மில்லியன் ரூபாவும், பெப்ரவரியில் 6 மில்லியன் ரூபாவும், மார்ச் மாதம் 5 மில்லியன் ரூபாவும், ஏப்ரல் மாதத்தில் 5 மில்லியன் ரூபாவும் ஈட்டுயதோடு மே மற்றும் யூன் மாதங்களில் தலா 6 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 34.5 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-10)

## போருக்குப்...

றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா எழுப்பிய கேள்வி களுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார். (வ-5)

## 24ஆம் ...

இந்த ஊர்வலத்துக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆதரவு வழங்காது என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை, பேரவையினருக்கு அந்தக் கட்சியினர் நேரடியாகத் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில், ஈ.பி.டி.பியினர் மற்றும் ஆனந்த சங்கரி ஆகியோர் தமது ஆதரவை பேரவையின் ஊர்வலத்துக்கு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஈ.பி.டி.பி. ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்கள் உண்மையா என்று அந்தக் கட்சியின் மையக் குழு உறுப்பினரும், வடக்கு மாகாண சபை எதிர்கட்சித் தலைவருமான சி.தவராசாவிடம் தொடர்பு கொண்டு வினவியபோது, அதனை உண்மை என்று உறுதிப்படுத்தினார். இது தொடர்பான அறிக்கை வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரி விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில், தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள ஊர்வலத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும். அத்துடன் இந்த ஊர்வலம் அரசுக்கு பெரிய அழுத்தத்தை கொடுக்கும் அளவிற்கு அமைய வேண்டும். அப்போது தான் நல்லாட்சி என்ற பெயரில் தமிழ் மக்களை மறந்துவிட்டு, ஆட்சி நடத்துபவர்களின் கண்களைத் திறக்க முடியும் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பெற்றோரின் சொல்லுக்கு மரியாதை தருவீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். பண வரவு அதிகரிக்கும். மனைவியின் அன்பில் மகிழ்வீர்கள்.

**இடபம்:** சுய தேவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உண்டாகும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**மிதுனம்:** சிறு முயற்சியிலும் பலமடங்கு நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். சகோதர வகையில் உதவி கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கடகம்:** சமயோசித குணத்துடன் செயற்பட்டு வருவீர்கள். மனதில் நல்லெண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பண வரவு கிடைக்கும். அரசு வகையில் நன்மை உண்டு.

**சிங்கம்:** சிலரது பேச்சால் அதிருப்திக்கு ஆளாவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற, கூடுதல் மூலதனம் தேவைப்படும். அளவான லாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர நோக்கமுடன் செயற்படுவர்.

**கன்னி:** கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும்.

**துலாம்:** புதிய முயற்சியில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு மகிழ்ச்சியளிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். லாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**விருச்சிகம்:** எண்ணத்தில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய முயற்சியால் நிலுவைப் பணம் வசூலாகும். தாயின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** பேச்சில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** திட்டமிட்ட பணி நிறைவேற கூடுதல் முயற்சி தேவை. நண்பரின் ஆலோசனை நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். அரசு சார்ந்த உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**கும்பம்:** உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். எதிரியைக் கூட பெருந்தன்மையுடன் மன்னிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில், வியாபாரத்தில், குளறுபடி உண்டாகி மறையும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் சிக்கனமாக செலவழித்து சேமிக்க முயல்வர்.

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல்வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | | 6 | 8 | |
| 8 | | | | 4 | | | | |
| | | 1 | 6 | | | 9 | | |
| 4 | 3 | | | 6 | | 7 | | |
| | 8 | | 9 | 3 | 1 | | | |
| | | 2 | 4 | 7 | | | | 3 |
| | | 3 | | | 4 | 2 | | |
| | | 4 | | 1 | | | | 7 |
| | 2 | 8 | | 9 | | | 5 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 8 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 7 | 5 | 2 | 9 | 3 | 6 | 8 | 1 | 4 |
| 9 | 4 | 8 | 7 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 5 | 1 | 7 | 6 | 8 | 3 | 9 | 4 | 2 |
| 6 | 8 | 4 | 2 | 7 | 9 | 1 | 3 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 2 | 9 | 3 | 5 | 6 | 7 | 4 | 8 | 1 |
| 8 | 7 | 1 | 4 | 9 | 2 | 3 | 5 | 6 |
| 4 | 6 | 5 | 3 | 1 | 8 | 2 | 9 | 7 |












நீ சீக்கிரம் வளர்ந்திடாதே!
இப்படி குட்டி ஆடாகவே இருந்திடு !
பெரிசா வளர்ந்தால்
உன்னைப் பிரியாணி போடுவாங்க...

**முகாமையாளர்:** எங்கேயாவது நீ குரங்கைப் பார்த்திருக்கியா?
**பணியாளர்:** தலையை குனிந்தபடி இல்லைங்க முதலாளி!
**முகாமையாளர்:** கீழே பார்க்காதே... நேராக என்னைப் பாரு...

WhatsApp



என்ன மாப்பிள்ளை இது!
பொண்ணு பார்க்க
தனியாக வந்திருக்கிறீங்க?
முதல் மனைவியைக் கூட்டிக்கிட்டு வந்தா
நீங்க பொண்ணு தர மாட்டீங்களே...!

shiyamala @vinmeenn
முள் இல்லாத ரோஜாக்கள்...
குழந்தைகள்!
7 6

## ஏ. ஆர். ரஹ்மானுக்கு ஜப்பானில் கிடைத்த தமிழ் வரவேற்பு

ஜப்பான் நாட்டுக்குச் சென்ற ஏ. ஆர். ரஹ்மானுக்கு தமிழில் வரவேற்பு அளித்தார் ஒரு மாணவி. ஏ.ஆர்.ரஹ்மானுக்கு ஜப்பான் நாட்டின் யோகோபோடியா அமைப்பால் வழங்கப்படும், ஃபுகுவோகா விருது சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இசைத் துறையில் சிறந்து விளங்குவதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

இந்த விருதைப் பெறுவதற்காக ஃபுகுவோகாவுக்குச் சென்றார் ரஹ்மான். அங்கு இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் அவரை வரவேற்றார்கள். ஒரு மாணவி தமிழில் எழுதப்பட்ட பதாகை கொண்டு அவரை வரவேற்றார்.

"ரஹ்மான் அவர்களே வருக வருக", "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்கிற வாசகங்களை உடைய பதாகைகளைக் கொண்டு ரஹ்மானை வரவேற்றார். இதன் ஒளிப்படத்தை முகநூலில் பகிர்ந்துள்ளார் ரஹ்மான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### VACANCIES

Applications are invited by me up to 31st October, 2016 from suitably qualified persons for the following posts.

**1. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)**

**Qualifications:**

i. An Attorney-at-Law with a Degree in Law/Legal Studies with not less than two (02) years of experience gained in Court work, legal work and drafting legal documentation in a State/Corporation or reputed private sector organization or official bar after obtaining the above qualifications.

**OR**

ii. An Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, legal work and drafting legal documentation in a State/Corporation or reputed private sector organization or official bar after obtaining the above qualification.

**Salary Scale** : U-EX 1(II)Rs. 26,020 - 3x585 - 27,775 (EB) 28,420; 6x645; 6x585 - 35,800.p.m

**Selection** : By Structured Interview.

**2. POST OF DAIRY ASSISTANT – ANIMAL HUSBANDRY, LOWER GRADE (Faculty of Agriculture, Kilinochchi)**

**Qualifications:**

i. G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings.

ii. Successful completion of one year's practical training course in Animal Husbandry conducted by the Department of Agriculture or equivalent.

**Salary Scale** :U-MT1 (IIIA) - Rs.16,535-7x155;10x185-19,470.p.m.

**Selection** : By interview

**3. POST OF INSTRUMENT MECHANIC GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

i. Pass in six (06) subjects at the G.C.E. (O/L) Examination with Sinhala/ Tamil, Mathematics and Science as subjects at not more than two sittings.

**AND**

ii. (a) Should have completed at least a two (02) year full time course (ie. National Certificate in Technology (NCT) / National Certificate in Engineering Craft Practice (NCECP)) in Electrical/ Electronics Technology at the Government Technical College or equivalent and one (01) year experience in the relevant field.

**OR**

(b) Should have at least three (03) years experience in a recognized Engineering Establishment in Electronics Instrumentation and Computer Technology.

**AND**

iii. Proficiency in Computer hardware/ software.

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 - 16x140 -17,890.p.m

**Selection** : By trade test and interview

**4. பதவி : மரவேலையாளர்-தரம் II (யாழ் பல்கலைக் கழகம்)**

தகைமைகள்

1. தரம் 8இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. பின்வருவனவற்றில் பரீட்சார்த்தம் இருத்தல் வேண்டும்.
   a) மரத்தளபாடங்கள் மற்றும் கட்டடங்களில் பாவிக்கப்படும் பலதரப்பட்ட மர இணைப்புக்கள்.
   b) வழங்கப்படும் வரைபடத்தை புரிந்துகொள்ளுதலும் மற்றும் அதற்குப் பாவிக்கபடும் உபகரணங்களை இனம்காணுதலும்.
   c) 1/32 அங்குல அளவுகளை வாசிக்கும் திறன்.
3. மரவேலையில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**: U-PL 3 (III) Rs.15, 650 - 16x140 -17,890.p.m

**தெரிவு செய்யும் முறை:** தொழில்சார் பரீட்சையும் நேர்முகத் தேர்வும்.

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**

**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University or the forms available in the University website (www.jfn.ac.lk) annex with the Money Order/ Postal Order to the value of Rs.100/-. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please annex copies of relevant documents)** Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR**
September 20, 2016 (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாநகர சபை

**தேசிய விளையாட்டு விழா - 2016 இற்கான தற்காலிக ஐஸ்கிறீம் கடை மற்றும் சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான கேள்வி கோரல்**

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் தேசிய விளையாட்டு விழா - 2016 தொடர்பாக 28.09.2016 தொடக்கம் 02.10.2016 வரை ஐந்து (5) நாள்களுக்கு மாநகர சபை வளாகத்தில் தற்காலிக ஐஸ்கிறீம் கடை, சிற்றுண்டிச்சாலை ( 30'X20' ) அமைப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ். மாநகர சபையால் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை மாநகர சபையில் பெற்று பூரணப்படுத்தி நாணாவித இறைவரிப்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும்.

கேள்விப்படிவம் விநியோகித்தல் : 22.09.2016 - 26.09.2016 மு.ப.11.30 வரை
கேள்வி படிவம் ஏற்றுக்கொள்ளல் : 26.09.2016 பி.ப.2 மணிவரை
கேள்வி திறத்தல் : 26.09.2016 பி.ப. 2.30 மணி

குளிர்பான நிலையத்துக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை : ரூபா 25 000. 00 (Vat,NBT) நீங்கலாக)
சிற்றுண்டிச்சாலைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை : ரூபா 25 000. 00 (Vat,NBT) நீங்கலாக)

நிபந்தனைகளை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

ஆணையாளர்,யாழ்.மாநகர சபை. 20.09.2016
(சி.262641) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



வடகிழக்கு மாகாணத்தின் முன்னாள் விளையாட்டுத் துறைப் பணிப்பாளரும், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், பத்து வருடங்கள் பொதுச் செயலராகப் பணியாற்றியவரும், தற்போது உப தலைவராகவும் இருந்த

**ஆசைப்பிள்ளை சோதி மரியதாஸ்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(6ல/4765) (11.18)

**பழைய மாணவர் சங்கம், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 . 09 . 1927



உதிர்வு 12 . 10 . 2006

**அமரர் இராசரத்தினம் இரத்தினவேல் (J.P)**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க சஷ்டி

அன்புமொழி பேசி ஆயிரம் கதைகள் சொன்னீர்
ஆலமரமாகி அனைவருக்கும் நிழல் தந்தீர்
பண்பு என்ற சொல்லின் பாலம் நீங்கள்
கடமை மறவாத காரியவீரர் ஐயா!
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது உம் நினைவு

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். **குடும்பத்தினர்**

(c.262433)(13.18)

## விழிகளில் நீர் பனிந்த 10ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**பேரம்பலம் லவகுமார் (லவன்)**

தாயின் மடியில் தோற்றம் 1979.06.21

அநியாய அழிப்பில் மறைவு 2006.09.21

திதி: சதுர்த்தசி (29.09.2016)

எங்கள் குடும்ப விருட்சத்தின் விழுதாகி நின்றவனே - எமை
ஏங்கித் தவிக்க விட்டு எங்கு சென்றாயோ??
பூத்திருந்த உன் நினைவு நிழலாய் தொடருதையா - நாம்
காத்திருக்கின்றோம் உன்னை மீண்டும் காண
உழைப்பால் உயர்ந்து எமை வாழவைத்து - கொடியவரின்
ஊழிக்கூத்தால் உயிர் துறந்து பறந்தாயோ??
பல பத்தாண்டு ஓடி மறைந்தாலும் - உன் நினைவலைகள் அழியாதடா - நின்
பிறப்பிற்காய் விழி திறந்து காத்திருக்கின்றோம் ஓடி வாராய் எம் அருகில் - நினது
ஆன்மா சாந்தி பெற இறைபதம் - பணிகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

காடிவளை,
இளவாலை. (6ல/4753)(11.18.)

என்றும் நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுபவமுடைய மற்றும் பழகவிரும்புவோர் உடனடியாகத் தேவை.

தொடர்பு 077 7729525

## ஓராண்டு நினைவஞ்சலி



அம்மா உமையிழந்து ----
ஆண்டொன்று ஆனதுவோ?

**திருமதி ருக்குமணி பத்மநாதன்**

அம்மா உமையிழந்து
ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து
அவலம் தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு
செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த
செய்தியெலாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம்
முடியவில்லை ஒவ்வோர் பொழுது
மிங்கு உம் நினைவில் வாடுகிறோம்
எம் வீட்டு நாயகியே!
என்றென்றும் நாம் மறவோம்
இறைவன் தாள் மலரில்
நீரமரப் பிரார்த்திப்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

வையகம் 05.08.1944
வானகம் 03.10.2015

குடும்பத்தினர்.
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

## நினைவுகூரல்



தோற்றம் 08.05.1926
மறைவு 14.08.2016

**ஆழ்வாப்பிள்ளை இராஜசிங்கம்**

(இளைப்பாறிய உப அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

ஆழ்வாப்பிள்ளை இராஜசிங்கம் அவர்களின் நினைவுக் கூட்டமும் இராப்போசனமும் நாளை (22.09.2016) வியாழக்கிழமை பி.ப. 4.30 மணியளவில் இல. 9, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் , மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகிலுள்ள ட்ரிம்மர் மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**வல்லிபுரம் சிங்கராசா**

(முன்னாள் செஞ்சிலுவை சங்க சாரதி)

சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிங்கராசா (முன்னாள் செஞ்சிலுவை சங்க சாரதி) 20.09.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - இலட்சுமி தம்பதியரின் அன்புமகனும் அற்புதவல்லியின் அன்புக் கணவரும் துமிசன் (ஆசிரியர் யா/ஆனைக்கோட்டை **RCTMS**), கஜந்தன் ( **LOLC,** சுன்னாகம்), அஜந்தன் (விவசாய போதனாசிரியர் முல்லைத்தீவு), தர்ஷன் (விவசாய களநிலை உத்தியோகத்தர் லங்கெம் **PLC**), முகுந்தினி (தொழில்நுட்ப உத்தியோகத்தர் விவசாயத்திணைக்களம் இரணைமடு), நிதர்சன் (**VTC,** காரைநகர்) ஆகியோரின் அன்புத்தந்தையும் அம்பிகாவின் (சட்டத்தரணி) மாமனாரும் புவனேஸ்வரி, இரத்தினம், திலகவதி காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் கண்மணி, வேவி, பரமேஸ்வரி, கலா (கனடா), சந்திரா ஆகியோரின் சகோதரரும் சரோஜினிதேவி சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2016) புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு.
சுழிபுரம் (வடக்கம்பரை அம்மன் கோயிலடி).

தகவல் :
குடும்பத்தினர்
021 7223166

## மரண அறிவித்தல்

(இறுதி நிகழ்வு திகதி மாற்றப்பட்டுள்ளது)

**திருமதி நாகம்மா கந்தையா (சின்னப்பொன்னு)**



தோற்றம் 15.03.1932
மறைவு 18.09.2016

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், 21/9, வைரவர் கோயில் வீதி அரியாலையை சொந்த வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா (சின்னப்பொன்னு) கந்தையா 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான கனகசபை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராஜேந்திரா மற்றும் செல்வராசா, ஜெகதீஸ்வரன், ஜெயக்குமார், குகராசா, கோபாலசிங்கம், சகுந்தலா, சுசீலா ஆகியோரின் அன்புத்தாயும் பிறேமாவதி, யோகேஸ்வரி, யசோதாதேவி, அகிலா, கமலேஸ்வரி, பாஸ்கர், சுரேஸ் ஆகியோரின் அன்புமாமியும் பிரகாஸ், பிரதீபன், காயத்திரி, சந்தியா, நந்தியா, ஜனனனி, அஸ்வினி, சாயினி, மயூரன், ரஜிதா, தனுஷன், ஆர்த்தி, கபிலன் ஆகியோரின் பேர்த்தியும் விதுஷன், டிஷானா, தக்ஷின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ் சென்றவர்களான கணபதிப் பிள்ளை, தையலம்மா, சின்னத்தம்பி, பூரணம், நாகேந்திரா மற்றும் பசுபதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவபாக்கியத்தின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.09.2016) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

பாஸ்கர் (பாலா): 077 7110221, 021 221 1186 (ஜே.4767) (13,18)

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள கடை ஒன்றுக்குப் போட்டோ கொப்பி செய்யத் தெரிந்த முன் அனுபவமுள்ள வேலையாள் (பெண்) மற்றும் சமையல் வேலையில் அனுபவம் உள்ள அல்லது உதவியாளர் (பெண்) தேவை.

076 577 8980

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, கொடிகாமம் வீதியில் 'எருவன்' என்ற இடத்தில் (கொடிகாமத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில்) 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பயன்தரு மரங்கள் மற்றும் வீடும் மின்சார வசதிகளுடன் உண்டு.

077 204 5270

## சிறுநீரகம் தேவை

$O^+$ இரத்த வகையுடைய 64 வயதுடைய நபருக்கு சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது.

077 150 0714, 021 300 6627

## தேவை

விற்பனைப் பிரதிநிதிக்கான வெற்றிடம்-எமது நிறுவனத்திற்கு டியுரஷய்ன் கூரைத் தகரம் விற்பனைப் பிரதிநிதிக்கான வேலைவாய்ப்பு உள்ளது. மோட்டார் சைக்கிள் வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு இன்றே சமுகமளிக்கவும். வயது 18-30.

சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2901, 077 727 0502

## மரண அறிவித்தல்

**சுப்பையா அழகானந்தம்**

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)



தோற்றம் 03.09.1946
மறைவு 20.09.2016

இணுவில் மஞ்சத்தடியை பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா அழகானந்தம் 20.09.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் அமிர்தகௌரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கருணானந்தம் மற்றும் சிவானந்தம், சிவமணி, மகா தேவன் ஆகியோரின் சகோதரனும் சனாதனி, ஆரணி (ஆசிரியை யா/ அனலைதீவு வடலூர் அ.த.க வித்தியாலயம்), யசோதா(கனடா), அருந்தா (கல்வியற் கல்லூரி கோப்பாய்) ஆகியோரின் தந்தையும் தயாளன் (புதிய நதியா நகைமாடம்), ஆருரன் (பிரதேசசபை சுன்னாகம்), தர்சன்(கனடா) ஆகியோரின் மாமனாரும் நிதப்பிரியன், நிதஹரி, நிதரா, சஸ்வினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்

12 . 08 . 1955

விண்ணில்

24 . 09 . 2013

அமரர்

## அப்பாக்குட்டி சிங்கராஜா

(முன்னாள்-இலங்கை மின்சார சபை)

எங்கள் அன்புத் தந்தையே!
ஆயிரம் உறவுகள் வந்தாலும்,
ஆலமரம் போன்ற
உங்கள் அன்பு போல் வருமா?
உங்களுடன் வாழ்ந்த அந்த நாள் போனதப்பா
எங்கள் ஆனந்தமும் போனதப்பா.
மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்களின் நினைவு
எங்களை விட்டுப் பிரியாது. உங்களை
எண்ணித் தவிக்கின்றோம். உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

0779545406

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா தம்பையா



தோற்றம் 09.10.1924 மறைவு 20.09.2016

மந்துவில் மேற்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தம்பையா 20.09.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வேலாயுதர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற பொன்னம்பலம், சிவஞானவதி, பாலசண்முகநாதன் (பிரதி அதிபர், யா/சாவகச்சேரி, இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயும் சிவபாதசுந்தரம், ஜெகரூபி (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,கைதடி) ஆகியோரின் அன்புமாமியும் வித்யா (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) விமலா (பிரதேச செயலகம் பச்சிலைப்பள்ளி), மயூரன் (குயின்ஸ்லான்ட் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், பிரிஸ்பேன், ஆஸ்திரேலியா) சுபாங்கி (யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), குகதாஸ் (பிரதேச வைத்தியசாலை, கொடிகாமம்), உதயேந்திரன் (பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2016) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் மந்துவில் மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக மந்துவில் மேற்கில் உள்ள இலுவன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மந்துவில் மேற்கு,**
**கொடிகாமம்.**

**தகவல் :**
**த. பாலசண்முகநாதன்**

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் தர்மராஜா

(உரிமையாளர், சரண்யா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான தர்மலிங்கம் தர்மராஜா கடந்த (18.09.2016) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், ஏழாலை மேற்கை சேர்ந்த சிதம்பரப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகந்தாவின் அன்புக் கணவரும், நிவேதனா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, பழைய மாணவி), சரண்யன் (யாழ் இந்து, கொழும்பு இந்துக் கல்லூரிகளின் மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாக்கியலட்சுமி (கனடா), தர்மகுமார் (லண்டன்), காலஞ்சென்ற தர்மகுலேந்திரன் மற்றும் தர்மானந்தன் (கனடா), தர்மராணி (கனடா), தர்மாம்பிகை (கனடா), தர்மசீலன் (லண்டன்), தர்மபாலன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமசுந்தரம், சுகேந்திரா, விமலேஸ்வரி, கமலநாதன், ரவீந்திரன், சுபத்திரா, செல்வரசி, ஏழாலை மேற்கைச் சேர்ந்த வசந்தா, சந்திரன், சாரதா, சாந்தா ஆகியோரின் அன்பு மைத்துனரும், K.N. இராஜரட்ணம், தனேஸ்வரி, விவேகானந்தன், மகேந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பன்னாலை வாசம்,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**
**077 711 0697 ,071 282 8017**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் பலமானது

### பத்ரி தெரிவிப்பு

எந்தவொரு அணியையும் வீழ்த்தும் பலம் பாகிஸ்தான் அணியிடம் உண்டு எனத் தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் சுழல் வீரரான பத்ரி.

பாகிஸ்தான் – மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையே மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது ஆட்டம் 24 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் 27 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்த நிலையிலேயே பாகிஸ்தான் அணியை பலமானது எனக் குறிப்பிட்டார் பத்ரி.

நாங்கள் எதிர்த்து விளையாடும் ஒவ்வொரு அணிக்கும் மரியாதை கொடுப்போம். அதேபோல்தான் பாகிஸ்தானுக்கு எதிரான தொடருக்கும் நாங்கள் செல்கின்றோம். நாங்கள் மிகவும் சிறந்த முறையில் தயாராகியுள்ளோம். பாகிஸ்தான் மிக மிக அபாயகரமான அணி என்பது எங்களுக்குத் தெரியும். ஆட்டம் நடக்கும் அந்த நாள் அவர்களுடையதாக இருந்தால், எந்தவொரு எதிரணியையும் அவர்களால் துவம்சம் செய்ய முடியும். அந்த அணியிடம் மிகச் சிறப்பான பந்துவீச்சுக் கூட்டணி உண்டு. குறிப்பாக ஆமிர், ரியாஸ் கூட்டணிக்கு பந்துவீச்சு சிறப்பாக அமைந்து விட்டால், ஆட்டத்தின் முடிவும் பாகிஸ்தானுக்கு சாதகமாக அமைய அதிக வாய்ப்புக்கள் உள்ளன என பத்ரி மேலும் தெரிவித்தார். (ம)






# 16 தொடர் வெற்றிகள்; ரியல் மட்ரிட் சாதனை

லா லிகா தொடரில் தொடர்ச்சியாக 16 ஆட்டங்களில் வெற்றிபெற்ற பார்சிலோனாவின் சாதனையை சமன்செய்தது ரியல் மட்ரிட்.

நடப்பு வருடத்துக்கான லா லிகா தொடர் மிகவும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணியும், ஸ்பன்யோலும் பலப்பரீட்சை நடத்தின. கரீத் பலே, ரொனால்டோ இருவரும் உபாதை காரணமாக வெளியேறியதால் ரியல் மட்ரிட் அணியின் பலம் குன்றியதாகவே கருதப்பட்டது. ஆனால் அணித்தலைவரான ராமோஸ், அனுபவ வீரர் பென்சிமா இருவரும் இணைந்து சிறப்பாகவே ஆட்டத்தைக் கொண்டு சென்றனர். ஆட்டத்தின் 30 ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ரொட்றிக்காஸ். அடுத்த ஐந்து நிமிடங்களில் பென்சிமா, மட்ரிட் அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில், முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட்.

இந்த வெற்றி லா லிகா தொடரில் ரியல் மட்ரிட் தொடர்ச்சியாகப் பெற்ற 16 ஆவது வெற்றியாகும். இதன்மூலம் பார்சிலோனாவின் சாதனையை மட்ரிட் சமப்படுத்தியது. (ம)

## டோனி – கோக்லி மோதல் மிகவும் சுவாரஷ்யமானது

### கபில் தேவ் தெரிவித்தார்



இந்திய அணியின் தலைவர்களான டோனி-கோக்லி இருவருக்கும் இடையிலுள்ள தலைமைத்துவ மோதல் மிகவும் சுவாரஸ்யமானது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரான கபில் தேவ்.

இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக கோக்லி உள்ளார். ஒருநாள், ரி-20 ஆட்டங்களின் தலைவராக டோனி உள்ளார். டோனி-கோக்லி இவர்களில் யார் சிறந்த தலைவர் என்பது தற்போது கிரிக்கெட் உலகின் வாதப்பொருளாக அமைந்துள்ளது. சமூக வலைத்தளங்களிலும் இந்த வாதங்கள் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெறும். இந்த நிலையில் டோனி, கோக்லி இருவருக்கும் இடையிலான தலைமைத்துவ மோதல் மிகவும் சுவாரஷ்யமானது என கபில்தேவ் தெரிவித்தார்.

விராட் கோக்லி தனக்கென ஓர் இடத்தை உருவாக்கி வருகிறார். அவருக்கென தனி இடத்தை கட்டாயம் அவர் உருவாக்குவார் என்று நம்புகிறேன். ஆனால், டோனி தனக்கான இடத்தை ஏற்கனவே உருவாக்கிவிட்டார். அவரது தலைமைத்துவ அனுபவம் மிகவும் பெரிது. டோனியைக் கோக்லியால் நெருங்க முடியாது. அதேபோல் கோக்லியிடம் இருக்கும் ஆக்ரோசக் குணங்கள் டோனியிடம் இல்லை. இருவரும் சிறந்த தலைவர்கள். ஆனால் இருவரதும் பாதைகள் வெவ்வேறாக உள்ளன. எதுஎவ்வாறா இருந்தாலும் டோனி – கோக்லி இருவருக்கும் இடையிலுள்ள தலைமைத்துவ மோதல் மிகவும் சுவாரஷ்யமாக உள்ளது என்று கபில்தேவ் மேலும் தெரிவித்தார். (ம)

## முரளி கிண்ணத்தில் இன்றைய மோதல்கள்




முரளி கிண்ணத்துக்காக தேசியமட்டத்தில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நடப்பு வருடத்துக்கான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இதன்படி இன்று நடைபெறும் ஆட்டங்களில் காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென். ஜோசப் கல்லூரி மோதவுள்ளது. இந்த ஆட்டம் யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெறும். கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி – முல்லைத்தீவு இணைந்த அணியை எதிர்த்து நாலந்தக் கல்லூரி அணி மோதவுள்ளது. யாழ். மாவட்ட இணைந்த அணி பிற்பகல் 1.40 மணிக்கு கொழும்பு றோயல் கல்லூரி அணியை எதிர்கொள்ளுகிறது. இந்த ஆட்டம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பெண்கள் பிரிவில் வடக்கு, கிழக்கு இணைந்த அணி பதுளை மகளிர் அணியை எதிர்கொள்ளுகிறது. இந்த ஆட்டம் காலை 11.40 மணிக்கு மாங்குளம் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும். (ம)

# நடுநிலமையான ஆடுகளம் அமைக்கப்பட வேண்டும்

## ஹர்பஜன் வலியுறுத்தல்

இந்திய மண்ணில் அமைக்கப்படும் டெஸ்ட் ஆடுகளங்கள் நடுநிலமையானதாக இருக்க வேண்டும் என்று இந்திய அணியின் சுழல் வீரரான ஹர்பஜன் தெரிவித்தார்.

இந்திய மண்ணில் நடைபெறும் டெஸ்ட் ஆட்டங்களுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் சுழல்பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களே அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. சுழல் பந்துவீச்சில் இந்திய அணி சிறப்பாகச் செயற்படும் என்பதாலேயே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை இந்த முறைமையைப் பின்பற்றி வருகிறது. இந்த நிலையில் சுழல் பந்துவீச்சுக்கு மட்டுமல்லாமல் வேகப்பந்து வீச்சுக்கும் ஒத்துழைக்கக்கூடிய விதத்தில் ஆடுகளம் அமைய வேண்டும் என்று ஹர்பஜன் வலியுறுத்தினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னைய நிர்வாகங்கள் 3 நாள்களில் முடியக்கூடிய டெஸ்ட் ஆடுகளங்களை அமைத்தனர். ஆனால் தன் நம்பிக்கை நபர்களான விராட் கோக்லியும், அனில் கும்ப்ளேவும் இத்தகைய ஆடுகளங்களை ஆதரிக்கக் கூடாது. ஐந்து நாள்கள் வரை ஆட்டம் நீடித்துச் செல்லக்கூடிய ஆடுகளங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆடுகளத்தைப் பொறுத்த மட்டில் இரு அணிகளுக்கும் சமனான வாய்ப்புக்கள் இருக்க வேண்டும். அத்தகைய ஆடுகளத்தில் பெறும் வெற்றியே உண்மையான வெற்றி என ஹர்பஜன் மேலும் தெரிவித்தார். (ம)




## இந்தியா – நியூசி. முதல் டெஸ்ட் நாளை

இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள நியூசிலாந்து அணி மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது. முதலாவதாக டெஸ்ட் தொடரை நடத்துவது எனத் திட்டமிடப்பட்டது. இந்த அடிப்படையில் இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் கான்பூர் மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டம் இந்திய அணியின் 500 ஆவது டெஸ்ட் ஆட்டமென்பதால் சில விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், செப். 21

**நெடியகாடு வி.க. தொடர்**

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவை சுடர் விளையாட்டு கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன.

**பாரதி வி.க. தொடர்**

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**ஞானமுருகன் வி.க. தொடர்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூவாரியஸ் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலையொளி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**கலைமதி வி.க. தொடர்**

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதவுள்ளது. இரவு 9.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து வழக்கம்பரை அம்பாள் அணி மோதவுள்ளது.

**அண்ணா வி.க. தொடர்**

அண்ணா சனசமூக நிலையத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த நிலையத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-422-108-23)




# மாகாணமட்ட தடகளத் தொடரில் சிறந்த தடகள வீராங்கனை ஆரணி

யாழ்ப்பாணம், செப். 21

மாகாணமட்ட தடகளத் தொடரில் சிறந்த தடகள வீராங்கனையாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ஆரணி தெரிவானார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த 17 ஆம், 19 ஆம் திகதிகளில் மாகாணமட்ட தடகளத் தொடர் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய எஸ். ஆரணி நீளம் பாய்தலில் 5 மீற்றர் 63 சென்றிமீற்றர் தூரம் பாய்ந்து 908 புள்ளிகளைப் பெற்று வடக்கு மாகாணத் தின் சிறந்த தடகள வீராங்கனையாகத் தெரிவானார்.

ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சிறிமுகுந்தனும், சிறந்த கள வீரராக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வி.ஜஸ்மினனும் தெரிவாகினர்.

பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக ஜெ.வனிசா, சிறந்த கள வீராங்கனையாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ஆரணி ஆகியோர் தெரிவாகினர். (ம-422)

# விபத்தில் சாவடைந்தவர் குலசேகரவின் நண்பர்?

நுவான் குலசேகரவின் வானகம் மோதி சாவடைந்தவர் அவரது நண்பர் என பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நுவான் குலசேரவின் சிற்றுர்ந்தும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கடவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் விபத்துக் குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சாவடைந்தார். இதனையடுத்து ஆபத்தான முறையில் சாரத்தியம் செய்து விபத்தில் உயிரிழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் குலசேகர கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் சாவடைந்தவர் 28 வயதுடையவர் என்பதும் அவரது பெயர் அரவிந்த என்பதும் தெரியவந்தது. இந்த நிலையில் நபரொருவர் குலசேகரவும் அரவிந்தவும் நண்பர்கள் என பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

தாமர நிசங்க என்ற அந்த நபர் தனது முகப்புத்தகப் பதிவில், அரவிந்தவும், குலசேகரவும் நண்பர்கள். ஒருவருக்கு ஒருவர் பழக்கமானவர்கள். இருவரும் ரன்பொகுனகமவில் ஒன்றாகக் கிரிக்கெட் விளையாடியவர்கள் எனக் குறிப்பிட்டார். இவரின் இந்தப் பதிவு சமூக வலைத்தளங்களில் விரைவாகப் பரவி வருகிறது. (ம)

# வளமான சமூகத்தை உருவாக்க கல்விக்கு முதலிடம் கொடுங்கள்

*முதலமைச்சர் தெரிவித்தார்*

யாழ்ப்பாணம், செப். 21

**வடமாகாண மாணவ மாணவியர் கல்விக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.** ஆனால் கல்வியை முறையாகப் பெறும் ஒரு காரணியாக விளையாட்டைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நிறைவடைந்த மாகாணமட்ட தடகளத் தொடரின் நிறைவு நாளில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"விளையாட்டில் வெற்றி தோல்வியென்பது வேறுவிடயம். ஆனால் பங்குபற்றலும், விட்டுக்கொடுக்கும் கனவான் தன்மையுமே பிரதானமானவை. இதுவே ஒலிம்பிக்கின் தாரக மந்திரமும் கூட. அண்மையில் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆஸ்திரேலிய வீராங்கனையொருவர் தடக்கி வீழ்ந்த போது நியூசிலாந்து வீராங்கனை தனது போட்டியைக் கைவிட்டு உடனடியாக உதவினார். இது வெற்றி தோல்விக்கு அப்பால் பட்ட விடயம். மகத்துவமான செயல். இவ்வாறான பண்புகளையே நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறல்லாமல் வென்ற அணியைத் தோற்ற அணியோ, அல்லது தோற்ற அணியை வென்ற அணியோ கத்தி கொண்டு துரத்துவதும் பொல்லுகளால் தாக்க முனைவதும் விளையாட்டு அல்ல.

நடந்து முடிந்த போரானது எமக்குப் பல பாடங்களைக் கற்றுத்தந்துள்ளது. காலாதி காலமாக நாங்கள் தேடி வைத்த எங்கள் சொத்துக்கள் எங்கே? காணி, பூமி, வீடு, வாசல், நகைநட்டு, பொருள், பண்டம் அனைத்தையும் இழந்த நிலையிலும் கல்வியொன்றே எமக்கு மிஞ்சியிருக்கின்றது என்பதை உணரவைத்துள்ளது அண்மைய போர். எனவே கல்விக்கு முதலிடம் கொடுங்கள். ஆனால் கல்வியை முறையாகப் பெற விளையாட்டுக்களுக்கு முன்னுரிமை வழங்குங்கள். வீதியில் கூடுவது, வெட்டிப் பேச்சுக்களில் ஈடுபடுவது அனைத்தையும் தயவு செய்து தவிருங்கள். காலத்தை விரயமாக்காதீர்கள். இன்றைய நாள் சென்றால் அது மீண்டும் ஒரு போதும் வராது. போனது போனதுதான். ஒழுக்கச் சீர்கேடு, துர்ப்பழக்கங்களை உடையவர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதுடன் முடியுமானால் அவர்களைத் திருத்த முயலுங்கள். அப்போது தான் மீண்டுமொருமுறை எமக்கான வளமான சமூகம் ஒன்று உருவாகும்" என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளிக் கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான ஆரம்ப நிகழ்வுகள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றன. (ம

## வடமாகாண கலை இலக்கியப் பெருவிழா -2016

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் வடமாகாண கலை இலக்கியப் பெருவிழா நிகழ்வு 23.09.2016 மற்றும் 24.09.2016 திகதிகளில் மன்னார் மாவட்ட நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் முதலாம் நாள் காலை நிகழ்வாக ஆய்வரங்கமும் மாலை பி.ப 2.00 மணிக்கு கலை நிகழ்வுகள் மற்றும் முதலமைச்சர் விருது வழங்கல் இடம் பெறவுள்ளன. இரண்டாம் நாள் கலை ஆய்வரங்கமும், மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2.00 மணிக்கு பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பித்து தொடர்ந்து கலைநிகழ்வு மற்றும் இலக்கிய ஆக்க கர்த்தாக்களுக்கான விருதுவழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் கௌரவ முதலமைச்சர் விருதினை 20 கலைஞர்களும் சிறந்த நூற்பரிசிற்கான விருதினை 10 எழுத்தாளர்களும் பெற வுள்ளனர்.

**பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**
**கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.**


## நாகபூஷணி திருமண சேவை

மணமகள்மாருக்கு பதிவுக் கட்டணங்கள் இலவசம். 21.09.2016 தொடக்கம் 2.10.2016 வரை) எம்மிடம் ஏராளமான ஜாதகங்கள் போட்டோக்களுடன் உள்ளன. நீங்கள் விரும்பும் மணமகனையோ/ மணமகளையோ மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.1980 12 இல் செவ் 20 பாவமுடைய அரச உத்தியோகத்தருக்கு உடன் மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது.

383/14B , கோயில் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்
(நல்லூர் கோயிலுக்கு வடக்குப் பக்கம்)
021 222 9906, 077 138 7596
Email:- nakapoosany wedding@gmail.com

## வேலைவாய்ப்பு

Offset machine
உதவியாளர்கள் தேவை.
இன்று (21.09.2016)
நேரில் சமுகம் தரவும்.
முற்பகல் 10.00 - 2.00 மணிவரை



**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

24.09.2016 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.ப | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

(திங்கள்,புதன்) பிரிவுகள் 21.09.2016
காலை 10.00-12.00 மாலை 04.30-06.00

அனைவரும் 24.09.2016 அன்று ஆரம்ப வகுப்பிற்கு சமுகமளிக்கமுடியும்.

SAAMSON
279, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.
021 320 3313
077 1570 495


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை. சுன்னாகம்.
## பகிரங்க கேள்வி அறிவித்தல்

இடம்:- தலைமை அலுவலகம், சுன்னாகம்
காலம்:- 28.09.2016 புதன்கிழமை
நேரம்:- முற்பகல் 10.00 மணி
விடயம்:- மருதனார்மடம் பொதுச் சந்தைப் பகுதியிலுள்ள இரு வேப்ப மரங்களை தறித்து அகற்றுதல்

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் வைப்புப்பணம் ரூ.1000.00 இனை அலுவலகத்தில் செலுத்தி பதிவு செய்து கொள்ளவும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வலிதெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**


இயக்கச்சியில்...
காணி விற்பனைக்கு

# கற்பகவனம்

1 ஏக்கர் – 16 பரப்பு (10 காணிகள்)
2 ஏக்கர் – 32 பரப்பு (15 காணிகள்)

**A9 இல் இருந்து 1km தூரத்தில்**

தென்னைமரம், தேக்குமரம், கஜூமரம், மாமரம்.
நட்டு 5 வருடங்களிற்கு பராமரித்துக் கொடுக்கப்படும்

**இயற்கையில் முதலீடு!**
**இனிமையான வாழ்வு!!**





சி. அனுராஜ்
விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306


## கனகபுரம் சம்பியன்

யாழ்ப்பாணம்,செப்.21
பூநகரி அண்ணா இளைஞர் விளையாட்டுக் கழகம் கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கு இடையில் முன்னெடுத்த கால்பந்தாட்டத் தொடரில் கனகபுரம் அணி சம்பியனானது.

இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், கனகபுரம் அணியை எதிர்த்து பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி. மாற்றங்கள் இல்லாமல் இரண்டாம் பாதியும் நகர்ந்து கொண்டிருந்தது. ஆட்டம்நிறைவடைய 5 நிமிடங்கள் இருக்கையில் கனகபுரம் அணியின் வேணு கோலொன்றைப் பதிவுசெய்ய 1:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது கனகபுரம் வி.கழகம். (ம-23)


## புதிய பிரிவுகள்
## ஆரம்பம் 24.09.2016

வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு
**வங்கியியல் கற்கை நெறிகள்**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E.O/L 6 Passes with 5 credits.

**இலங்கைப் பட்டயக்கணக்காளர் ஆவதற்கு**
**Chartered Accountants of Sri Lanka**
Executive Level I & II (Tamil & English Medium)
Business Level ( English Medium)
Qualification:- G.C.E.A/L 3 Passes

**தொழிற்றுறைக் கணக்காளர் ஆவதற்கு**
aat (Sri Lanka)
[AA1, AA2, AA3]
Medium - Tamil & English
Qualification:- G.C.E.O/L 6 Passes

CERTIFICATE COURSE IN ENGLISH

**வெளிவாரிப் பட்டதாரி ஆவதற்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
BBA, BCom, BA
Note: 2015ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் ஒரே தடவையில் A/L 3 Pass சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். பதிவுகளை 30.09.2016இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

**Further Details:**
JAFFNA COLLEGE
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382/ 021 222 9149
FB:- Jcol Jaffna.


## மரண அறிவித்தல்

### நவரத்தினம் செல்வநாயகம்



பண்டத்தரிப்பு பிரான்பற்றுறை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் செல்வநாயகம் நேற்று (20.09.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.09.2016) புதன்கிழமை பி.ப. 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் றோட்,
பண்டத்தரிப்பு.

தகவல் :
குடும்பத்தினர்
077 4902727









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.